
கல்கி

சித்திரைச் சிறப்பிதழ்

KALKI 17-4-1977 75 காசு



பிறந்த 3ம் மாதம் தொடங்கும் முதல் திட உணவு குழந்தையின் வருங்கால வாழ்வையே தீர்மானிக்கத் தக்கது.

பால் மட்டும் கொடுத்தால் போதாது என்கிறார்கள் டாக்டர்கள்



டாக்டர்கள் சிபாரிசு செய்வது

ஃபாரெக்ஸ்®

விரைவான முழு வளர்ச்சிக்கான சரிவிகிதச் சத்து நிரவிய திட உணவு



பச்சிளம் தேகமும் மூளையும் வேகமாக வளரத் துடிப்பவை. அதற்கு ஈடுகொடுக்கப் பால் மட்டும் போதுமானதாகாது. தாய்ப்பாலிலிருந்து கெட்டி உணவுக்கு மாறவேண்டும்—மூன்றும் மாதமே; மென் ருதின்னப் பழக்குங்கள்...மேன்மையான வளர்ச்சிக்குத் திறவுகோலாக உதவும் திட உணவு ஃபாரெக்ஸ் ஒன்றுதான்—பச்சிளம் தீரண உறுப்புகளுக்கு உகந்தது.

டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ்; காரணம்,

தாய்ப் பால் விடுக்கும் தலையாய மாதங்களில் பாப்பாவின் பத்துவித வளர்ச்சிகளுக்கும் நிறைவுதரும் **ஒப்பற்ற சரிவிகிதச் சத்துணவு இதுவே.**

இரத்தச் செழிப்புக்கும் தெம்புக்கும் கச்சிதமான அளவுக்கு (இதுபோன்ற வேறெந்தத் திட உணவிலும் அமையாத அளவுக்கு) இரும்புச் சத்து; எலும்புக்கு உறுதியும், பல்லுக்குப் பலமும் தரும் கால்ஷியம், வைட்டமின் D2; மூளையும் உடலும் விரைந்து வளர உகந்த புரதச் சத்துக்கள்; வளரும் உடம்புக்குத் தேவையான சக்தி—இவ்வளவும் அடங்கியது ஃபாரெக்ஸ்; எனவே... பாலூட்டும் பழக்கத்தை மாற்றுவதற்கான வேறு எந்த திட உணவையும் விட அதிகமாக அதிகத் தாய்மார்கள் ஆதரிப்பது ஃபாரெக்ஸ். பழங்கள், காய்கறிகள், பருப்பு, இறைச்சி, முட்டை போன்ற எந்த முக்கிய உணவுடனும் கலந்து கொடுக்க இனிமையானது ஃபாரெக்ஸ். மென்றுதின்னப் பழக்க...கூடிய விரைவிலே குடும்ப உணவுகளிடம் குழந்தையை இனிதே வரவேற்க...


அதி உன்னதமான முதல் திட உணவு ஃபாரெக்ஸ்.

இலவசமான எமது ஃபாரெக்ஸ் கைப் புத்தகம், 2-ரூபா தள்ளுபடித் திட்டம்—இரண்டையும் பற்றி அறிய, எழுதுங்கள்.

(புத்தகம், எந்த மொழியில் எனக்கு குறிப்பிட்டு) உங்கள் பெயர், விலாசத்தை எழுதி, 25 பைசா தபால் வில்லையோடு அனுப்புக இம் முகவரிக்கு: தபால் பை நம்பர் 19119, பம்பாய் 400 025.



க்ளாக்ஸோ


கைத்தறி நவீனங்கள்
பிரத்தியேகமான ஏற்றுமதி துணி ரகங்கள். நாடெங்கிலுமிருந்து தரு-விக்கப்பட்ட புத்தம் புதிய கைத்தறி துணி வகைகள்.
வருகை தாருங்கள்!
23-வது அகில இந்திய கைத்தறி விழா
பாந்தியன் சாலை, எழும்பூர். சென்னை-600 008.
கோ-ஆப்டெக்ஸ்
கைத்தறி ஆடைகள்.
விசேட தள்ளுபடி
பருத்தி 20%
பட்டு 30%
குறிப்பிட்ட ரகங்களுக்கு 40%
நாடெங்கிலுமுள்ள எல்லா கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் '77-ஏப்ரல் 30-வரை சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படும்.

கூந்தலுக்குச் சாயம் பூசுவது பற்றி எல்லா விவரங்களும் உங்களுக்குத் தெரிய வேண்டுமா?

மகிழ்வோடு விடையளிக்கக் காத்திருக்கிறது

கோத்ரெஜ்

இளம் வயதில், சில சமயம், சற்று முன்னதாகவே நரை தோன்றி விடலாம். அந்த சமயம் ஒவ்வொருவர் ஒவ்வொரு மாதிரி நடந்து கொள்வார்கள். சிலர் அதை விளையாட்டாக எடுத்துக் கொள்வார்கள், சிலர் அதைப் பெரிது படுத்துவார்கள். ஆனால் பெரும்பாலோர் அதற்காக ஒன்றுமே செய்வதில்லை. வருந்தத்தக்க விஷயம். காரணம், நரைத்த கூந்தலைக் கருமையாக்கி விடலாம்—மிக மிக எளிதாக.

கே: எப்போது கூந்தலுக்குச் சாயமேற்றத் தொடங்க வேண்டும்?

ப: முதன்முதல் நரை இழைகள் தோன்ற ஆரம்பித்த உடனேயே பூசுவதுதான் சிறந்தது.

கே: தொடர்ந்து கூந்தலுக்குச் சாயமேற்றி வந்தால், அது கேசத்தைப் பாதிக்கும் என்பது உண்மையா?

ப: இல்லை. ஆனால் நீங்கள் சிறந்த ஹேர் டையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கோத்ரெஜ் ஹேர் டையில் சேர்க்கப் பட்டுள்ள விசேஷப் பொருட்கள் கூந்தலுக்கு உருக் கொடுப்பதோடு அதில் உள்ளடங்கியுள்ள கண்டிஷனர்கள், உங்கள் கூந்தலை அழகாகவும் பளபளப்பாகவும் வைத்திருக்க உதவுகிறது.

கே: அது சருமத்தைப் பாதிக்குமா?

ப: பொதுவாக பாதிக்காது. ஆயின், முதலில் ஒரு சிறிய சருமப் பரிசோதனை செய்து பார்த்து விடுவது நல்லது. எந்த சிறந்த ஹேர் டையுடனும் இப் பரிசோதனையை எப்படிச் செய்வது என்ற குறிப்புகள் இருக்கும்.

கே: பர்மனெண்ட் ஹேர் டை எத்தனை நிரந்தரமானது?

ப: சாயமேற்றிய கூந்தலில் பல வாரங்கள் சாயம் நீடித்திருக்கும். ஆயினும் புதிய கேசம் முளைக்கத் தொடங்கிய உடனேயே மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குப் பின்னர் நரை முடிகளை மீண்டும் சாயமேற்ற வேண்டும்.

கே: டையின் சாயம் துணிகளையோ தலையணைகளையோ கறைப்படுத்துமா?

ப: நிச்சயமாக இல்லை. இதர பெரும்பான்மையான ஹேர் டைகள் போல, கோத்ரெஜ் ஹேர் டை கூந்தலில் மேற்பூச்சாக சாயமேற்றுவதில்லை. அது கேசத்தின் அடிவேரினுள்ளே ஊடுருவிச் சென்று தங்குகிறது.

கே: கூந்தலுக்குச் சாயமேற்றிய பின்னர், என் கேசத்தைச் சாதாரண கேசம் போல் நடத்தலாமா?

ப: நிச்சயமாக, ஷாம்பூ உபயோகித்து, கூந்தலை அலசலாம். எந்த ஹேர் ஆயிலையும் க்ரீமையும் உபயோகிக்கலாம்.

கே: வீட்டிலேயே கூந்தலுக்குச் சாயமேற்றுவது எளிதா?

ப: சந்தேகமே வேண்டாம். உபயோகிக்க மிக மிக எளிது கோத்ரெஜ் ஹேர் டை: டையை மென்மையாகத் தடவினால் போதும். அது தானே சமமாகவும் சீராகவும் எளிதாகச் சருமத்தின் ரோமக்கால்களிடையே ஊடுருவிப் பரவுகிறது.

கே: எல்லா ஹேர் டைகளுமே உபயோகிக்கக் கடினமா?

ப: அப்படிச் சொல்ல முடியாது. கோத்ரெஜ் ஹேர் டை உபயோகிக்க வசதியானது. இனிய நறுமணம் கொண்டது. மிக மென்மையானது.


கே: அது மிக விலையுயர்ந்ததா?

ப: தோள் அளவு கூந்தல் உங்களுக்கு இருந்தால் ஒரு குப்பி ஹேர் டையும் டெவலப்பரும் கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் வரும். அதுவும் நீங்கள் வீட்டிலேயே சாயமேற்றிக் கொண்டால் மாத மொன்றுக்கு சுமார் ரூ. 3/- செலவாகும்.

கே: சாயமேற்றியபின் என் கூந்தல் இயற்கையான கருமை நிறம் பெறுமா?

ப: நிச்சயமாக. ஆனால் உங்கள் கூந்தலின் இயற்கையான நிறத்திற்கு ஏற்ற வண்ணத்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்கள் கூந்தல் இள நிறமுடையதாக இருந்தால் கோத்ரெஜ் கரும் பழுப்பு ஹேர் டையை உபயோகிக்கவும்.






கோத்ரெஜ்

பர்மனெண்ட் ஹேர் டை
இதர ஹேர் டைகளை
பிந்தியவைகளாக்கி விட்டது.

ஆண்களுக்கும்
பெண்களுக்கும்
கூட
இயற்கையான
கருமை,
கரும்பழுப்பு.



பப்பு ஃபீடரின்
தரச்சிறப்பிற்குத் தக்க சான்று–
உங்கள் கண் முன்னே!
U-P-8 TM
• முன் உபயோகப்படுத்தப் படாத, தனிப்பட்ட மூலப் பொருளால் ஆன மூடி. அடிக்கடி கொதிக்க வைத்தாலும் கெடாது, துர்நாற்றம் வீசாது.
PAPU
• புத்தம்புதிய ரப்பரால் ஆன, தனிப்பட்ட வடிவமைப்பு கொண்ட நிப்பிள் தங்கு– தடையின்றி பால் பாய்ந்து வருகிறது.
• அத்துடன் நிப்பிள் உறை இலவசம். சுகாதாரத்திற்கு ஆதாரம்.
• தரமுயர்ந்த கண்ணாடியில் தயாரானது—அதிக உழைப்பாற்றல், சுத்தம் மற்றும் சுகாதாரம்.
• நிர்ணயிக்கப்– பட்ட ஊட்ட அளவு: 225 மி.லி. (8 அவுன்ஸ்), வேறு சில ஃபீடர்களைப் போல் 200 மி.லி. (7 அவுன்ஸ்) அல்ல.
PAPU
MADE IN INDIA
துடிப்பான குழந்தைப் பருவத்தின் இனிய துணை
பப்பு
ஃபீடர் மற்றும் நிப்பிள்



கல்கி

1977 ஏப்ரல் 17
பிங்கள ௵
சித்திரை 5

ராஜாஜி சிந்தனை

சிற்றறிவின் மயக்கம்

பௌதிக சாஸ்திர விஷயங்கள் கொஞ்சம் தெரிந்தவுடனே செருக்கு மயக்கம் உண்டாகி விடுகிறது. அதிலும் மற்றவர்கள் செய்த ஆராய்ச்சியின் பயனாக, குஜிலிக் கடையில் குறைந்த விலைக்கு வாங்கும்பழையசாமான்கள் மாதிரி, உழைப்பில்லாமல் கிட்டிய அறிவு செருக்கு அதிக போதையை உண்டாக்கி விடுகிறது. எது சிறிது, எது பெரிது, எது அணுகி, நிற்பது, எது தூரம் என்ற நிதான புத்தி கலைந்து விடுகிறது. எதைத் தம்மால் அறிய முடியாதோ அதை அவர்கள் இல்லவே இல்லையென்று சாதித்து விடுவார்கள். மனித அறிவுக்கு எட்டாதது அனைத்தும் பொய் என்று தள்ளிவிட முன் நிற்பார்கள். சாஸ்திரமாவது அற நூலாவது அனைத்தும் முட்டாள்கள் எழுதி வைத்தவை என்றும் அதற்கு மேல் பேசினால் அவை அனைத்தும் மனிதர்களை மோசம் செய்யவே வஞ்சனைக்காரர்களால் எழுதப்பட்டவை என்றும் சாதிப்பார்கள்.

ஆனால் இதே பௌதிக சாஸ்திரத்தை ஆழ்ந்து பரிசோதித்தவர்கள் — பௌதிக சாஸ்திர உண்மைகளைக் கண்டு பிடிக்க ஆயுள் நாள் முழுவதும் தங்கள் சக்தி அனைத்தையும் செலுத்தி உழைத்த அறிஞர்கள் — இப்படி உன்மத்தம் அடைவதில்லை. பௌதிக சாஸ்திரிகள் மிகவும் அடக்கம் உடையவர்களாக இருக்கிறார்கள். தாங்கள் கண்டது அதிகமாயினும் காணாததின் அளவுக்குக் கண்டது மிகச் சிறிது என்று அறிவார்கள். பௌதிக சாஸ்திரங்கள் வெகுவாகப் பெருகியிருந்த போதிலும் மானிட அறிவுக்கு என்றென்றும் எட்டாததும் விஞ்ஞான ஆராய்ச்சி எல்லையைத் தாண்டியதாயுமுள்ள விஷயமும் உண்டென்பதை அவர்கள் அறிவார்கள். அப் பரம் பொருளின் முன்பு அறிவும் அடக்கமும் கொண்டு தலை வணங்குகிறார்கள்.

— கண்ணன் காட்டிய வழி

கல்கி சந்தா

	ஒரு வருடம்	ஆறு மாதம்
	ரூ.பை	ரூ.பை
இந்தியா	38.00	19.00
இலங்கை (இலங்கை நாணயப்படி)	38.00	19.00
வெளிநாடுகள்	90.00	45.00

''பரட்டைத் தலை, வெந்த கண், நீண்ட நாசி, கோரைப் பற்கள்.... இப்படி பஞ்சாங்கத்திலே சங்கராந்தி புருஷன் படம் போடணும். உங்க போட்டோ இருந்தால் கொடுங்களேன்.''




'பிங்கள' ஹாஸ்யம்




''அடுத்த வீட்டுக்காரர் 'ரெண்டு மா இலை பறிச்சிண்டு போறா' லட்சணத்தைப் பாருங்க!''





''உமக்கு மேலதிகாரியின் பிரியம் கிட்டும்னு சொல்றீரே... ஆபீஸ் மானேஜர் பிரியமா இருக்காரா?''

''என் ஒய்ஃப் பிரியமா இருக்கா!''



''பஞ்சாங்கம் கேட்டால் பலன் உண்டாமே?''

''அதான் பஞ்சாங்கம் கேட்க வந்தேன். கொஞ்சம் கொடுக்கறீங்களா?''




''என்னடா பிரம்மஹத்தி மாதிரி மூஞ்சியைத் தொங்கப் போட்டுக்கிட்டு இருக்கே... குழந்தை பிறந்திருக்கு உனக்கு....''

''குழந்தை வருஷப் பிறப்பன்னிக்குப் பிறந்திருக்கு.... வருஷா வருஷம் பிறக்குமோன்னு பயமா இருக்கு!''



''என்ன கூத்து இது....! வாசலை அடைக்கிற மாதிரி மாவிலை கட்டி இருக்கிங்களே...?''

''எல்லாம் காரியமாத்தான் கட்டி இருக்கேன். புது வருஷமும் அதுவுமா கடன்காரன் நுழையக் கூடாது!''



''அடே... டே... சோமுவா... எப்ப கார் வாங்கினேப்பலே?''

''எல்லாம் உங்க ஆசீர்வாதம்! 'உம்ம ஞானத்துக்கு நீர் பஞ்சாங்கம் தான் போடலாம்'னு சொல்லி என்னை உங்க பத்திரிகையிலிருந்து நீக்கிட்டீங்க.. நீங்க சொன்னபடி பஞ்சாங்கம்தான் போட்டு வருகிறேன். காரும் பங்களாவுமாகச் சௌக்கியமா இருக்கேன்!''



''போன வருஷம் வேப்பம்பூ பச்சடியைத் தொடவே இல்லே. இந்த வருஷம் இப்படி...''

''உன்னோட ஒரு வருஷம் வாழ்ந்திருக்கேனே இல்லையோ... கசப்பு பழகிப் போச்சு!''



''ஸ்டூல் கிடைக்கல்லே....உன் 'ஹை ஹீல்ஸ் ஷூ' உபயோகமா இருக்கு... இதோ தந்துடறேன், லதா!''

திறமை மிக்க தூய ஆட்சி

க. சந்தானம்

சமூக நீதிக்கும், பொருளாதார முன்னேற்றத்துக்கும், தேசத்தின் தார்மீக வாழ்வுக்கும் முதல் தேவை திறமை மிக்க தூய ஆட்சி. ஆட்சியில் திறமையுடன் தூய்மையும் இல்லாது போனால் அதிகாரமும் செல்வமும் துஷ்பிரயோகம் ஆகி ஏழை எளிய மக்கள் ஏமாற்றப் படுவார்கள். தனி நபரின் நேர்மையும் மனச்சாட்சியும்தாம் தூய்மையையும் திறமையையும் காத்து நிற்பன. ஆனால் ஆட்சிப் பொறுப்பில் உயர் மட்டத்தில் இருப்பவர்கள் முன்னுதாரணமாகத் திகழ வில்லையெனில் தனி நபர்களின் இந்த நற்குண இயல்புகளும் பலவீனப் பட்டுப் போகும். அதோடு இந்த நற்பண்புகளைக் காக்கச் சரியான சட்டதிட்டங்களும் வகுக்கப்பட்டு அவை அமலாகவும் வேண்டும்.

ஆட்சியில் லஞ்ச ஊழல்கள் பின்வரும் விதங்களில் நிகழலாம்: (1) லஞ்சம், (2) வேண்டியவர்களுக்குச் சலுகை, (3) நியாயமற்ற காரியங்களுக்காக அதிகார துஷ்பிரயோகம். சாதாரணமாகக் குறைந்த சம்பளம் வாங்கும் ஊழியர்களிடையேதான் லஞ்ச ஊழல் நிலவும் என்று எதிர்பார்ப்போம். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக, மத்திய மாநில அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் கூட இதற்கு விதி விலக்கல்ல என்று தெரிய வந்திருக்கிறது. லஞ்சத் தடுப்புக் கமிட்டி ஒன்று என் தலைமையில் இப் பிரச்னையைப் பல கோணங்களில் நன்முக ஆராய்ந்து 1964-ம் ஆண்டில் ஓர் அறிக்கை சமர்ப்பித்தது. அதில் கண்ட பல சிபாரிசுகளை ஏற்ற மத்திய அரசு, அரசு ஊழியர்கள் பற்றிய அவர்கள் நடத்தை பற்றிய விதிமுறைகளை மாற்றியது. அவர்கள் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை ஆராய நீதிக் குழு நியமித்தது. ஆனால் இந்தச் சீர்திருத்தங்கள் பெருமளவு பயனற்றுப் போயின. காரணம், லஞ்சத் தடுப்பு கமிட்டி மத்திய மாநில மந்திரிகள், நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சம்பந்தமாகச் செய்த சிபாரிசுகளை அரசு ஏற்காததுதான்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு நிர்வாகச் சீர்திருத்தக் கமிஷன், இன்றைய பிரதமர் திரு மொரார்ஜி தேசாயைத் தலைவராகக் கொண்டு இயங்கியது. இது பிரச்னைகளை மிக விரிவாக ஆராய்ந்து லஞ்ச ஊழல் ஒழிப்புக்கான பல சிபாரிசுகளைச் செய்தது. உண்மையில் இந்தக் கமிஷனின் பணி, பல்வேறு அரசாங்க இலாக்காக்களில் திறமையை வளர்ப்பது பற்றிய யோசனைகளைக் கூறுவதே. ஆயினும் லஞ்சத் தடுப்பு விஷயத்தையும் அது விட்டு வைக்கவில்லை.

இது தொடர்பாக முந்தைய ஆட்சி லோக்பால், லோக் ஆயுக்த சட்டத்தை 1967 தேர்தலுக்குப் பின் கொண்டு வந்தது நினைவுகூரத் தக்கது. இதனை விசேஷக் குழுவின் பரிசீலனைக்கு வைத்து, பிறகு நாடாளுமன்றத்தின் மக்கள் சபையிலும் நிறைவேற்றியது. ஆனால் அதன் பின்னர் இதனை மேல் சபைக்கு அனுப்பாமலேயே ஆறப் போட்டுக் கடைசியில் காலாவதியாகும் படி விட்டு விட்டது. 1971 தேர்தலுக்குப் பிறகு மீண்டும் அது மக்கள் சபைக்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் அதன் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை. மந்திரிகளும் ஆளும் கட்சிப் பிரமுகர்களும் தர்ம சங்கடமான விசாரணைக்கு ஆளாக நேரலாம் என்று தோன்றியதால் விட்டு விட்டார்கள் போலும்.

ஆக, மத்திய மாநில மந்திரிகள், சட்டசபை நாடாளுமன்ற பிரதிநிதிகள், அரசாங்கக் காரியதரிசிகள், இலாக்காத் தலைவர்கள், இதர உயர் உத்தியோகஸ்தர்கள் மீதெல்லாம் கொண்டு வரப்படும் எல்லாவிதமான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களையும் விசாரிக்க, சுப்ரீம் கோர்ட் போன்று அதிகாரங்களைப் பெற்ற ஓர் அமைப்பை உருவாக்குவது சுத்தமான ஆட்சிக்கு இன்றியமையாததாகிறது.

வேலைக்குத் தேர்வு செய்தல், பயிற்சி அளித்தல், உத்தியோக உயர்வு தருதல், பணியாற்றும் நிபந்தனைகளைச் சரிவர அமைத்தல் முதலியவற்றின் அடிப்படையில்தான் நிர்வாகத்தில் திறமையும் நிலவும். ஏற்கனவே பப்ளிக் சர்வீஸ் கமிஷனும் அரசுப்பணியாற்றுவோருக்கு உள்ள பல சட்ட திட்டங்களும் நல்ல அடிப்

கல்கி மலர் 36 இதழ் 38
தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற — எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

படையாகவே அமைந்துள்ளன. இவற்றை இன்னும் சற்று சீர்படுத்த வேண்டும். துரதிருஷ்டவசமாகச் சமீபத்தில் ஒரு வேண்டாத பழக்கம் வளர்ந்திருக்கிறது. அதிகாரிகளின் தேர்வு, உத்தியோக உயர்வு, உத்தியோக மாற்றம் ஆகியவற்றில் மந்திரிகள் தலையிடுவது என்பதுதான் அந்தத் தேவையில்லாப் பழக்கம். இது லஞ்சத்துக்கும் இதர ஊழல்களுக்கும், வாய்ப்பான சூழலை உருவாக்குகிறது.

நிர்வாகத் திறமைக் குறைவில் மிக அபாயமான அம்சம் அரசுப் பணிகளைச் செய்வதில் ஏற்படும் காலதாமதம். இதன் விளைவாகத் "துரிதப் பணம்" என்பதாக ஒரு கொடிய பழக்கம் தோன்றியுள்ளது. இந்த லஞ்சம் அதிகாரிகள் தவறான காரியம் எதையும் செய்யத் தரப்படுவதல்ல; காலதாமதமின்றிக் காரியம் நடப்பதற்காகவே கொடுக்க வேண்டியிருக்கும் பணம்! எல்லா ஃபைல்களும் துரிதமாக ஃபைசல் ஆக நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு ஃபைலுக்கும் ஒரு காலக்கிரமம் இணைக்கப்பட வேண்டும். ஃபைலைப் பெறும் ஒவ்வொருவரும் அது தம்மிடம் வந்து சேர்ந்த தேதி நேரம், அது ஃபைசல் செய்யப்படும் தேதி நேரம் ஆகியவற்றை அதில் குறிக்க வேண்டும். இதனை இதற்கென்று நியமிக்கப்படும் விசேஷ அதிகாரி கவனித்து அநாவசிய காலதாமதத்துக்குக் காரணம் கேட்க வேண்டும். மந்திரி களிடத்திலும் இம்மாதிரி கால தாமதங்கள் ஏற்படலாம். இதனை 'அமைச்சரவைக் காரிய தரிசி கவனித்து மூன்று மாதங்களுக்கு ஒரு முறையேனும் அமைச்சரவைக் கூட்டத்தில் காலதாமதங்களின் பட்டியலைச் சமர்ப்பிக்க வேண்டும். இதனைக் காலத் தணிக்கை என்று கருதலாம். இத் தணிக்கை நிர்வாகத் திறமையைக் கணிசமாக அபிவிருத்தி செய்யும்.

விழிப்புணர்வுடன் செயல்படும் பத்திரிகைகளும் மக்கள் துணிவுடன் வெளியிடும் அபிப்பிராயங்களும் ஆட்சியின் திறமையையும் தூய்மையையும் அதிகரிக்க உதவும். உண்மையல்லாத விஷயங்களைப் பகிரங்கமாக வெளியிடுவது நியாயமோ தர்மமோ ஆகாது. ஆனால் லஞ்ச ஊழல் நிலவுவதாகப் பரவலாக நம்பப்பட்டால் தேவையான நடவடிக்கை எடுக்க அதனை லோக்பால், லோக் ஆயுக்த போன்ற அமைப்பின் கவனத்துக்கு ரகசியமாகக் கொண்டு வருவது மக்களுக்குச் சாத்தியமாக வேண்டும்.

இந்த நடவடிக்கைகள் அனைத்தின் ஒட்டு மொத்தமான பயனாக, பயத்தினாலன்றி நாளடைவில் இயல்பாகவே நேர்மை, திறமை ஆகியன செயல்பட வழிபிறக்கும். இதனைப் புதிய அரசு தன் முதற்பணியாகமேற்கொள்ள வேண்டும். அப்படி செய்யும் என்றும் மக்களுடைய முழு ஒத்துழைப்பையும் பெறும் என்றும் நம்புவோம்.

திரு ஏ. பி. என்.

இறையுணர்வு மிக்க திரைப் படங்களைக் கலையுணர்வுடனும், கலையுணர்வு மிக்க திரைப் படங்களை இறையுணர்வுடனும் தயாரிக்கும் திறன்படைத்த திரு ஏ. பி. நாகராஜன் காலமாகி விட்டது திரையுலகுக்கு ஈடு செய்ய முடியாத நஷ்டம்.

வருவாயே குறிக்கோளாகக் கொண்டு பெரும்பாலும் ஃபார்முலா படங்களே தயாராகி வரும் போது லட்சிய நோக்குடன், திருவருட் செல்வர், திருவிளையாடல், சம்பூர்ண ராமாயணம், தில்லானா மோகனாம்பாள் போன்ற பல படங்களை இயக்கியவர் திரு ஏ. பி. என்.

சிறு வயதிலேயே நாடக உலகில் புகுந்து படிப்படியாக முன்னேறித் திரையுலகிலும் அடியெடுத்து வைத்துஅதில் முன்னணி டைரக்டராக உயர்ந்தவர். சுயமாகவே தமிழ் இலக்கியங்களை ஆழ்ந்து படித்தறிந்து புலமை பெற்று விளங்கினார். பழகுவதற்கு இனிய பண்பாளர். சிவநேசச் செல்வர்.

"சினிமா பார்க்க வேண்டாம்" என்று சொன்ன ராஜாஜியையே சினிமா பார்க்க வைத்தவர் திரு ஏ. பி. என். சம்பூர்ண ராமாயணத்தைப் பார்த்து அகமகிழ்ந்து திரு சிவாஜி கணேசனையும் திரு நாகராஜனையும் மனமார வாழ்த்தினார் ராஜாஜி.

இத்தகைய பெறற்கரிய சிறப்புக்களைப் பெற்ற திரு ஏ. பி. என். னுக்குத் திரையுலகம் செலுத்தக்கூடிய அஞ்சலி நல்ல, தூய படங்களை அவர் அடியொட்டித் தயாரிப்பதே.


தேர்தலுக்கு முன்
இந்திரா தான் இந்தியா! இந்தியா தான் இந்திரா!!
பருவா
தேர்தலுக்குப் பின்
இந்திரா தான் காங்கிரஸா? காங்கிரஸ் தான் இந்திராவா?
ஜனதா
இப்போதைக்குப் பூ எடுத்துக் கொள்ளுங்கள்! மற்றதைப் பிறகு பார்த்துக்கலாம்!
ஒத்துழைப்பு
தேர்தல் கூட்டு
இந்திரா அரசு எங்கள் ஆட்சியைப் பதவி நீக்கம் செய்தது தவறு! அதற்கு விசாரணை வேண்டும்!
நாடாளுமன்ற தேர்தல்
வாக்காளர்

அந்த வெள்ளிக்கிழமையன்று!

ஜி. நாராயணன்

“ஏது நடந்தாலும் இன்று அழப்போவதில்லை....''

உள்ளங்கைகளில் கண்களைப் புதைத்து விழித்தெழுந்ததும் முதன் முதலாக மனத்தில் தோன்றிய எண்ணம் இதுதான்.

இன்று மற்ற வெள்ளிக் கிழமைகளைப் போல் அல்லாமல் அவன் குரல் ஓங்கிக் கேட்காது. என்ன ஆனாலும் பல்லைக் கடித்துக்கொண்டு — வாயைத் திறக்காமல் — கண்களிலிருந்து ஒரு பொட்டுக் கண்ணீர் உதிராமல் இன்று முழுதும் இருக்க வேண்டும்...

அந்தத் தீர்மானம் ஓர் உறுதியாக, சபதமாக உருவெடுத்து விட்டது.

புவனா கலைந்திருந்த படுக்கையை நேர் செய்தாள். போர்வைகளை மடித்துத் தலையணைக்கு அடியில் வைத்து அறையை விட்டு வெளியே வந்தபோது பூஜை அறையில் கைலாசம் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. கூடவே அவர் குரலும் கேட்டது. இன்னதென்று உருப்படி புரியா விட்டாலும் அவர் வழக்கமாகச் சொல்லும் சுலோகத்தில் ஏதாவது ஒரு பகுதியாக அது இருக்கலாம் என்று நினைத்தாள்.

சற்று நேரம் அறைக் கதவைப் பிடித்தபடி அப்படியே நின்றிருந்தாள் புவனா. வைகறைப் பொழுதில் இந்த மாதிரி ஒரு சூழ்நிலையில் தன் மனம் நிறைந்தவனைப் பார்த்தபடி இப்படியே வாழ்நாளெல்லாம்...

''ராணி! அம்மாவுக்குக் காப்பி பிளாஸ்கில் இருக்கு...!''

கைலாசம் கையிலிருந்த சுலோகப் புத்தகத்தைக் கொஞ்சம் கீழே இறக்கி அந்த நிலைப்படியைப் பார்த்துச் சொன்னார். திரும்பவும் புத்தகம் மேலே ஏறி முகத்தை மறைத்தது.

இவ்வளவு நேரம் சுகானுபவத்தில் திளைத்திருந்த மனம், சுரீரென்று இருப்புக் கரண்டியைக் காய்ச்சி இழுத்தாற் போல் ஒரு கணம் துடித்தது. அந்த வேதனையைத் தீர்க்கும் வடிகாலாக வார்த்தைகள் வெளியே கொட்டப் போகும் சமயம் —

''...புவனா.... வேண்டாம்...''

சற்று முன் செய்த தீர்மானம் நினைவில் எழுந்தது. அதற்கு முதற் படியாக இன்று அவர் சொல் எப்படிச் சுட்டாலும் பதிலடி கொடுக்காமல் பணிந்துதான் போக வேண்டும்... அடி உதட்டைப் பற்களால் அழுத்திக் கொண்டாள். அந்த வலியில் உள்ளத்து எரிச்சல் குறைவது போலத் தோன்றியது.

சமையலறையில் ரசத்தைக் கொதிக்க விட்டு இறக்கும்போதும் புவனா அந்த ஆச்சரியத்திலிருந்து மீளவில்லை... தன்னால் எப்படிப் பேசாமல் இருக்க முடிந்தது... ஒரு கதவை அறைந்து சாத்தாமல் — ஒரு பாத்திரத்தை அழுத்த வைத்து ஓசைப் படுத்தாமல் — தன் ஆத்திரத்தை எந்த விதத்திலும் வெளிப் படுத்தாமல் எது தன்னைக் கட்டுப்படுத்தியது? கைலாசத்தின் குரலைக் கேட்டதும் அடிபட்ட சர்ப்பமாகச் சீறாமல், நிதானமாக அவரை ஒரு பார்வை பார்த்து விட்டுச் சாவதானமாகக் குளியலறை நோக்கிப் போனது இப்பொழுது நம்ப முடியாமல் இருந்தது...ஸோ... இந்தப் புவனாவிடமும் - பாயின்ட். ஜீரோ ஜீரோ ஃபைவ் பர்சன்ட். பொறுமை இருக்கிறது... வெல் டன்...

''...புவனா... சாப்பிட வரலாமா...'' கைலாசம் பனியனுக்குள் கைகளை நுழைத்தபடியே வந்தார். 'ஆச்சா... ஆச்சா' என்று கையும் காலும் பரபரத்தன.

''இதோ ஆயிடுத்து...''

''ஆயிடுத்துன்னா...?''

''...கறி வதங்கணும்... ரண்டே ரெண்டு நிமிஷம். நீங்க சட்டையைப் போட்டுக் கோங்கோ...அதுக்குள்ளே எட்டு ஊருக்குச் சமையல் ஆயிடும்....''

''இப்பவே மணி எட்டரை. ஒம்பதே காலுக்கு நான் ஃபாக்டரியில் இருக்கணும். நான்தான் கேட்கிறேன்... ஓர் அரை மணி சீக்கிரம் எழுந்துண்டா இந்த உடம்பு என்ன தேஞ்சா போயிடும்... அப்படி என்னடா உடம்பு... ஒரு வெள்ளிக் கிழமை கூட ஏழு மணி வரைக்கிலும்....''

வாணலியில் எண்ணெயும் தண்ணீருமாகக் கறி வதங்கியது. இடுக்கியால் அதைப் பிடித்துக் கொண்டு ஒரு கையால் கிளறுவது சிரமமாக இருந்தது. குப்பென்று ஆவி அடித்தது. கிளறிக் கிளறிக் கையும் சோர்ந்து உஷ்ண ஆவியும் முகத்தில் அடித்த போது எரிச்சலாக வந்தது. அந்த எரிச்சலில்—

''...புவனா... வெயிட் எ மினிட்...''

பேசாமல் இருக்க வேண்டியதுதான். நாம் ஒன்று சொல்ல, அவர் ஒன்று சொல்ல, அது முடிவே இல்லாமல் சென்று — கடைசியில் தன் பலமோ பலவீனமோ என்று சொல்ல முடியாத அழுகையில் கொண்டு வந்து விட்டு விடும். இன்று இந்த மாதிரியான சொற்களைத் தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும். இன்று ஒரு நாள்... இந்த ஒரு வெள்ளிக் கிழமையாவது அழாமல் இருந்து காட்ட வேண்டும்...

சாப்பிட்டு விட்டுக் கை கழுவப் போகும் போது சாவதானமாகக் கைலாசம் சொன்னார்:

''ரசத்துக்கு உப்புப் போடல்லே.''

''ரசத்திலியா?''

''ஆமாம்.''

''உப்பா?''

''ஆமாம்.''

''குறைச்சலா?''

''போடவே யில்லே.''

''சாப்பிடும்போது சொல்லி யிருந்தால் ஒரு ஸ்பூன் போட்டிருந்திருப்பேனே...''

கைலாசம் பதில் எதுவும் சொல்லாமல் வாயைக் கொப்பளித்துத் துப்பினான். ''தூ'' வென்று இவள் முகத்தில் காறித் துப்புவது போல் இருந்தது. புவனா அவனையே ஒரு விநாடி வெறித்துப் பார்த்தாள். விடுவிடு வென்று உள்ளே போய் ரசத்தை நுனி நாக்கில் ஒரு சொட்டு விட்டுக் கொண்டாள்.

உப்பே போடாத ரசத்தை முழுவதும் குடித்து விட்டுக் கடைசியில் 'நீ சமைக்கிற லட்சணத்தைப் பார்த்தியா' என்று நாப்பைக் காட்டுகிற மாதிரி... இதை என்ன வென்று சொல்வது? குழந்தையா... அப் படிப்பட்ட மனமாக இருந்தால் ஒரு கவளம் உள்ளே போயிருந்திருக்காதே... எல்லாவற் றையும் தூர வைத்து விட்டு 'வேற சாதம் போடு' என்று சொல்லி யிருக்குமே... இவர் எதில் சேர்த்தி...? ஒரு விரோதியிடம் காட்டு கிற மனோபாவத்தை மனைவியிடம் காட்டி 'உன்னை ஜெயிச்சுட்டேன்' என்று கெக்கலித்து..


'பட பட' வென்று எல்லாவற்றையும் பொரிந்து கொட்டி விட வேண்டும் என்று ஓர் ஆவேசம் வந்தது. ஒரு விநாடி... நுனி நாக்கு வரையில் வந்து விட்டது...கத்தியிருப் பாள்.

''...இன்று வேண்டாம்... ப்ளீஸ்...''

எரிந்து கொண்டிருக்கும் ஸ்டௌவ்வில் காற்றைத் திறந்து விட்ட மாதிரி அவள் மன அழுத்தமும் 'புஸ்'ஸென்று அடங்கிவிட்டது.

சிறப்புச் சிறுகதை

கல்யாணம் நடந்த பின் வந்த முதல் வெள்ளிக் கிழமை... அதை அவளால் மறக்க இயலவில்லை. அதன் ரணம் வெகு நாட்கள் ஆறு மல் இப்பொழுதும் அந்த வடு மறையவில்லை... அப்பாவுக்குக் கோபம் என்றால் என்னவென்றே தெரியாது. அவர் முகம்



கனிந்து அவன் பார்த்ததில்லை. அந்த நாக்கு சுடு சொற்களை வீசி யறியாது. அம்மாவும் அதிர்ந்து பேச மாட்டாள். அந்தச் சூழ்நிலையில் வளர்ந்தவளுக்கு, திருமணம் ஆகி ஒரு வாரத்துக்குள் கடுமையான வார்த்தைகள் செவி வழியே தன் மீது இறங்கியபோது தாங்கிக் கொள்ள முடியவில்லை. 'பட்.' டென்று இவள் ஏதோ திருப்பிச் சொல்ல... கடைசியில் தணிந்துதான் போக வேண்டும் என்ற நிலையில் அழுது கொண்டே அவர் கால்களில் விழுந்தாள். அதன் பிறகு இந்த நான்கு வருடங்களில் எத்தனை வெள்ளிக் கிழமைகள்... அழுகைகள்... சமாதானங்கள்!

பெண் பார்க்க வந்தபோது அவன் இலக்கியக் கதாநாயகர்களைப் போல் இருக்காவிட்டாலும், ஓரளவு இன்றைய இளைஞனாக இருப்பான் என்று அவள் எதிர்பார்த்தாள். நெற்றியில் அலட்சியமாக இழுக்கப்பட்டிருந்த சின்னம் அவருக்குள்ள தெய்வ பக்தியைக் காட்டுகிறது என்பதைத் தவிர அதிகமாக அப்பொழுது ஒன்றும் நினைக்கவில்லை. ஆனால் வெள்ளிக்கிழமை காலையில் எழுந்து சம்பிரதாயமாகப் பூஜை செய்வார் என்றோ, தன்னையும் அந்த மாதிரி எதிர்பார்க்கிறார் என்றோ தெரிந்ததும் அதிர்ச்சியாக இருந்தது. அடி மனத்திலிருந்து செய்யும் சிறு பிரார்த்தனையோடு தன்னை நிறுத்திக் கொண்டவள்— பலவந்தத்தினால் எந்தக் காரியம் செய்வதும் தன் சுயமரியாதைக்கு இழுக்கு என்று நினைத்தாள்.

இந்தக் காலத்தில் இவ்வளவு படித்து வேலையில் இருக்கும் ஒருவர் தெய்வ நம்பிக்கையுடன் இருப்பது பெரிதாகத் தோன்றவில்லை. அதற்காக மணிக் கணக்கில் பூஜை அறையில் உட்கார்ந்து கொண்டு யார் இருக்கிறார்கள்... இந்த அவசர உலகத்தில் அதுவும் கணவன் மனைவி இருவருமே வேலைக்குப் போகும் வீட்டில் எப்படி இதை நடத்திக் கொண்டு போவது? அந்த வேகத்துக்கு ஈடு கொடுக்க முடியாமல் பின் தங்கும்போது கோபம் வருகிறது... இருவரும் தங்கள், தங்கள் போக்கில் காய்ந்த கட்டையாக இருக்கும்போது ஒரு சிறு உரசல் போதும்... அது பற்றிக் கொண்டு காட்டுத் தீயாக எரிய ஆரம்பித்து அவள் கண்ணீரில்தான் அணையும்.

கைலாசம் அவளால் புரிந்துகொள்ள முடியாதவனாக இருந்தான். அவருக்குச் சாதாரணமாகவே பேசத் தெரியாதோ என்று அவள் நினைத்தாள். எதையும் கிண்டலாக, நக்கலாக, எகத்தாளமாக — இது எப்படி... தங்க அரளியைப் போட்டு அர்ச்சனை செய்யும் இவரால் எப்படித் தன்மீது தணல்களை வீசி எறிய முடிகிறது?

போன வெள்ளிக் கிழமை.

கைலாசத்துக்கு உடம்பு சரியில்லை. உடல் முழுவதாகத் தகித்துத் தள்ளாடியது. அந்த ஆட்டத்துடன் குளித்து விட்டுப் பூஜை செய்வேன் என்று ஆரம்பித்ததும், அவர் உடல் நிலையை உத்தேசித்து அவள் தடுத்தாள். கடைசியில் அவர் பிடிவாதம் வென்று இவள் அழுகையில் முடிந்தாலும், இவ்வளவு நாட்கள் எட்டவே நின்ற கைலாசத்தின் மனத்தை அவள் நெருங்க முடிந்தது.

இத்தனை வருடங்களுக்குப் பிறகு தம் தந்தையைப் பற்றியும், அவர் கடவுள் இருப்பதை எவ்வளவு தீவிரமாக எதிர்த்தவர் என்பதையும் கைலாசம் கூறினார். பிறர் எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுக்காமல் இந்த விஷயத்தில் சர்வாதிகார மனப்பான்மையுடன் அவர் நடந்ததையும்—அதன் காரணமாகத் தன் தாய் சின்ன அபிலாஷைகளைக் கூட நிறைவேற்ற முடியாமல் கண்ணீர் விட நேர்ந்ததையும் விவரித்தபோது—

தடை விதிக்கும் எதையும் இரட்டிப்பு வேகத்தில் மீறத் துடிக்கும் மனம்தான் கைலாசத்தின் இன்றைய வெறிக்குக் காரணம் என்று புலனாகியது.

அழுவதை — அதுவும் அவருக்கு முக்கியமான வெள்ளிக் கிழமைகளில் கண் கலங்குவதை — வெறுக்கிறார் என்பதையும் உணர்ந்து கொண்டாள். அதன் எதிரொலியே—

இன்று காலையில் அவள் செய்த தீர்மானம்.

தலை ஒரேயடியாக வலித்தது. இன்று ஆபீஸ் போக வேண்டாம் என்று நினைத்தாள். ஒரு மாத்திரையை வாயில் போட்டுத் தண்ணீர் ஊற்றிக் கொண்டு சோபாவில் சாய்ந்து கண் அயர்ந்தாள். எவ்வளவு நேரம் என்று தெரியவில்லை. காலிங் பெல் அலறியது.

வெளியே பாண்டுவின் முகம் தெரிந்தது. அவன் கைலாசத்தின் தொழிற்சாலையில் வேலை செய்பவன்.

பாண்டு உள்ளே வராமல் வாசலிலேயே நின்றான். குரலில் அவசரம் தெரிந்தது.

''...கைலாசத்துக்குக் கொஞ்சம் உடம்பு சரியில்லை.... ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கு.''

''என்ன ஆச்சு....!'' அவள் உடம்பெல்லாம் பதறியது.

''... ஒரு சின்ன ஆக்ஸிடெண்ட். வாங்க சொல்றேன்.'' காரில் போகும்போது பாண்டு என்னவோ சொல்லிக் கொண்டே வந்தான்.

''...அந்தக் குழாய் வெடிச்சுடுத்து... எத்தனையோ பேர் அங்கே வேலை செய்யலையா... குறி வைச்ச மாதிரி நேரே இவர் மண்டையிலேன்னு வந்து அடிச்சிருக்கு...''

அவளுக்கு எதுவும் மனத்தில் ஏறவில்லை. மனம் கிடந்து பதைத்தது. வயிற்றைக் கலக்கியது. அவருக்கு என்ன ஆயிற்றோ... 'தஞ்சம் என்று அடியார் அழைத்திட அருள் செய்' வாய் திரும்பத் திரும்ப அரற்றிக் கொண்டே இருந்தது.

ஆஸ்பத்திரி.

புவனாவின் நடைக்கு பாண்டு ஓட வேண்டியிருந்தது. வழி சொல்லிக் கொண்டே அவன் ஓடினான். இப்படி..... இங்கே... அங்கே—

சலனமே இல்லை. போர்வையை விலக்கி இவளுக்கு முகத்தைக் காட்டினார்கள். முன் பின் தெரியாத யார் யாரோ சமாதானம் சொன்னார்கள்... அந்த உடலும் மனமும் தன் கை விட்டுப் போன உணர்வு தோன்ற அவள் பார்த்தபடியே நின்றாள்.

ஒரு விநாடி—

நெஞ்சில் கனத்துக் கொண்டிருக்கும் துயர மேகம் வெடித்து, விம்மல் இடிகளாக இறங்கி, அழுகை மழையாகக் கொட்டப் போகும் நேரத்தில்.... அந்த நினைவு—

'...இன்று அழப்போவதில்லை...!'

ராஜாஜி வாழ்க்கை வரலாறு



4. மங்காவுடன் வாழ்க்கையும் எம். கே. காந்தி பற்றிய செய்தியும்

மங்கா இதற்குள் இனிமை மிக்க இல்லாளாக வளர்ந்திருந்தாலும் இன்னமும் யுவதியாகவே விளங்கினாள்.

கொடி உடல், மாநிறம், உயரம் ஐந்தடிக்கு ஓரங்குலம் குறைவு, நேராக வாரி விடப்பட்ட நீண்ட கரிய மிருதுவான கூந்தல், மெலிதான வசீகர முகம். அவளைக் காண்பவர் மனத்தில் — அவர்கள் பெண்களாயினும் கூட — ஒரே கணத்தில் நல்லெண்ணங்களைப் பதியச் செய்யும் தோற்றம். அழகிய மிருதுவான முகம்.[1]

அவள் புகைப்படம் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. அதில் அவள் விநோதமான பழங்காலத்து மனுஷியாக நாணத்துடன் காட்சி தருகிறாள். அவள் கணவரின் நண்பர் வேங்கடசுப்பய்யர் வீட்டில் எடுக்கப்பட்ட குரூப் போட்டோவிலிருந்து இவளை மட்டும் தனித்துப் பெரிதாக்கிய படம் அது. புகைப்படம் எடுத்த அன்று தங்களுடைய மஞ்சள் வீட்டிலிருந்து வேங்கடசுப்பய்யர் இல்லத்துக்குப் போவதற்கு முன்னால் ஸி. ஆர்., தம் கரத்தாலேயே மங்காவின் நெற்றியில் ஸ்ரீசூர்ணம் இட்டிருந்தார்.

இது அன்றைக்கு இரண்டாவது முறையாக அவளுக்கு இட்ட திலகம். ஒவ்வொரு நாளும் காலையில் இப்படி அவள் நெற்றிக்கு இடுவது அவருக்குப் பிடித்தமான பழக்கம். அவர் இட்ட திலகம் சிறிதும் கலையாமல் மங்கா நாள் முழுவதும் கவனமாக இருப்பாள்.

வாரிப் பின்னப்பட்ட கூந்தலை ஒரு நாரினால் கட்டி முடித்திருப்பாள் மங்கா. ரவிக்கை மணிக்கட்டு வரை நீண்டிருக்கும். ஒன்பது கெஜத்தில் அகலக் கரையுள்ள தர்மாவரம் அல்லது காஞ்சீபுரம் பட்டுப் புடவைகளை மடிசார் வைத்து அய்யங்கார் கட்டாக உடுத்துவாள். சிவப்பும் மஞ்சளும் கலந்த புடவைகளே அடிக்கடி அணிவாள்.

மனத் திருப்தியடைந்த மனைவி

திருமணத்துக்குப் பிறகு ஏற்பட்ட செல்வச் செழிப்பு மங்காவை அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்கும் மனைவியாக மாற்றவில்லை. தனது கணவர் தேர்ந்தெடுத்த புடவைகளிலும் அவர் கொடுத்த நகைகளிலும் திருப்தி யடைந்தவளாகத் தோன்றினாள். நகைகள் செல்வச் செழிப்பைப் பறைசாற்றுவது போல் அமையவில்லை. சிவப்புக் கல் மூக்குத்தி, தோடு, தங்கத்தில் ஒரு நெக்லஸ், ஒரு சங்கிலி, வளையல்கள் ஆகியனதாம்.

மூன்று நான்கு சவரன்கள் வாங்கத் தேவையான பணத்தை அவள் சேமித்த பிறகு ஸி. ஆர். மேலும் மூன்றோ நான்கோ வாங்கிப் புதியதொரு நகை செய்து தருமாறு பொற்கொல்லரிடம் சொல்வார். மங்கா ரொம்பத் திருப்தி யடைந்து விடுவாள். அவள் நகைகளுக்கு அதிகமாக ஆசைப்படாதவள் என்பது எல்லாருக்கும் தெரியும்.[2]

சனிக்கிழமை தர்மம் செய்யும் நாள். மங்கா இதற்காகத் தகர டப்பாக்களில் தானிய வகைகளை நிரப்பி வாசல் கதவருகே வைப்பாள். பிராமணர்களுக்கு அரிசி; மற்றவர்களுக்குக் கம்பு, கேழ்வரகு முதலியன. வீட்டிலோ, அல்லது பிரயாணங்களின்போதோ தனது கணவரின் நண்பர்களுக்கு விருந்தளிப்பது அவளுக்கு ரொம்பச் சந்தோஷம் தரும். வேங்கடசுப்பய்யர் சுற்றுப் பயணம் ஒன்றைப் பற்றிக் குறிப்பிடுகையில், ''ஸி. ஆரின் மனைவி ஒரு கூடை நிறையப் பட்சணங்களைத் தயாரித்து அனுப்பி யிருந்தாள். நாங்கள் எல்லாரும் ரசித்துச் சாப்பிட்டோம்'' என்று எழுதியிருக்கிறார்.[3] மங்காவைப் பற்றி அவள் சகோதரன் ராமசாமியின் மனைவி செல்லம்மா கோடி காட்டுகிறார். ராமசாமி சிறுவனாக ஸி. ஆர். வீட்டில் தங்கி யிருந்திருக்கிறார். பின்னால் செல்லம்மாவும் அந்த வீட்டுக்கு அடிக்கடி போய் வந்திருக்கிறார்.

செல்லம்மாவின் மாமியார், அதாவது மங்காவின் தாயார் ஒரு சமயம் அவளிடம் ஸி. ஆருடன் பேசக் கூடாது என்று சொன்னாராம். இதைச் செல்லம்மா குறிப்பிட்டுக் கூறுகிறார்: ''நாத்தனார் புருஷனுடன் பேசுவதெல்லாம் அதிகப்பிரசங்கித்தனம்

1. செல்லம்மா ராமசாமி அய்யங்காருடன் பேட்டி, நவம்பர் 1973
2. மேற்படி
3. 11-6-1910 வேங்கடசுப்பையரின் நாட்குறிப்பிலிருந்து சில பகுதிகள் - Rajaji, Hindustan Publications, Madras, 1949.



மங்கா

என்ற கருத்து நிலவிய காலம். அப்போது மங்கா தாராள மனத்துடன், பரந்த மனப் பான்மையுடன் தன் தாயாரிடம், 'இந்தச் சம்பிரதாய மெல்லாம் ஒன்றும் வேண்டாம் அம்மா, நாட்டுப் பெண்ணைச் சொந்த மகள் போலவே நடத்து' என்று சொன்னாள்.''4

சொந்தக் குழந்தைகள் போலவே...

தன் சொந்தக் குழந்தைகளைத் தவிர தன் கணவர் வளர்ப்பதாகப் பொறுப்பேற்று வீட்டில் குடியேற்றியிருந்த பிள்ளைகளையும் கவனித்துக் கொள்ள வேண்டியிருப்பது பற்றி மங்கா அலுத்துக் கொள்ளவே இல்லை என்பது தெளிவு. அவ்வீட்டில் இருந்து படித்த ஒருவர் கூறுகிறார்: ''நான் அவள் மகனாகப் பிறக்கவில்லைதான். அவள் கணவரின் ஒன்றுவிட்ட சகோதரரின் பிள்ளைதான். ஆனால் அவள் தன் குழந்தைகளை நடத்துவதிலும் என்னை நடத்துவதிலும் சிறிதுகூட வித்தியாசம் காட்டவில்லை.'' 5

இளம் சிறார்கள் நிரம்பி வழிந்த அந்த வீட்டில் அவர்கள் எல்லாருமே நன்னடத்தையின் எடுத்துக்காட்டாக எப்போதும் இருந்திருக்க முடியாது. மங்கா கண்டிப்புடன் நடந்து கொள்ள வேண்டியிருந்தது. 'பாப்பா' என்று அழைக்கப்பட்ட மங்காவின் மூன்றாவது குழந்தை நாமகிரி இன்று நினைவு கூர்கிறார்: ''ஒரு சமயம் பல்பொடி போட்டுப் பல் தேய்த்து விட்டு வரும்வரை காப்பி கிடையாது என்று அம்மா சொல்லிவிட்டாள். அன்று எனக்குக் காப்பி கிடைக்க இரண்டு மணி நேரத்துக்கு மேல் தாமதமாயிற்று.''6

இளம் தாயாரின் பொறுமை 'பட்'டென்று தெறித்துப் போன தருணங்களும் உண்டு. ஒரு சமயம் குழந்தைகளின் நச்சுத் தொணதொணப்புத் தாங்காமல் அவர்களை மிரட்ட அடுப்பிலிருந்து அணைந்து விட்ட விறகுக் கட்டையை உருவிக் கொண்டு வந்தாள். அவள் கரத்தைப் பற்றிக் கொண்ட வி. ஆர். அவளைச் சமையலறைக்கே திரும்ப அழைத்துச் சென்றார். வி. ஆர். தமது ஆட்சேபணைகளைத் தெரிவிக்கும் விதமே அது தான். ஒரு நபரின் கரத்தைப் பற்றி அவன் நகாதன செய்யவிருந்த இடத்திலிருந்து அவனை அப்புறப்படுத்தி விடுவார். தமது குழந்தைகளையோ, தமது பொறுப்பிலிருந்த குழந்தைகளையோ அவர் அடித்ததே யில்லையாம். கோபப்பட்டு இரைவதும் அபூர்வம். வீட்டுப் பணியாளர்களுக்கும் இது பொருந்தும்.

''சாதத்தில் ஒரு கல் இருந்தது. அப்பா சமையல்காரரை வரவழைத்தார். மௌனமாக, கௌரவம் மிக்க ஒரு சடங்கை நிறைவேற்றுபவர் போல் அந்தக் கல்லை அவர் கரத்தில் வெகுமதியாக அளித்தார். இது தான் அவர் கடிந்து கொள்ளும் விதம்.''7

வட்டாரத்தின் முதல் கார்

தமது மூத்த மகன் கிருஷ்ணசாமிக்குப் பத்து வயதானபோது, ''உன்னை இங்கிலாந்துக்கு அனுப்ப விரும்புகிறேன்'' என்றார்.8 1911ல்தான் அவர் இப்படிக் கூறியிருக்க வேண்டும். அதே ஆண்டில் தமது முப்பத்திரண்டாம் வயதில் வி. ஆர். சேலம் நகரசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரால் தோற்கடிக்கப்பட்ட கே. டி. பால் பின்னால் இந்தியக் கிறிஸ்தவர்களின் ஒரு தலைவராகப் பிரபலம் அடைந்தார்.

இதற்கு ஓராண்டுக்கு முன்பு ஃப்ரீ மேஸன்ஸ் சங்கத்தின் சேலம் கிளையைத் தோற்றுவிப்பதில் வி. ஆர். பங்கேற்றார். இந்தச் சங்கத்தின் மூலம் தேவையில் இருப்பவர்களுக்கு உதவவும் மக்கட் பிரிவினர் பலரை ஒன்று சேர்க்கவும் முடியும் என்று கண்டார். சேலம் கலெக்டர் எல். எஃப். பக்லி இச் சங்கத்தின் முதல் வணக்கத்துக்குரிய தலைவராக இருந்தார். சங்கத்தின் மூலம் பல பள்ளிக் குழந்தைகளுக்கு உதவிய வி. ஆர். இரண்டாவது தலைவராக விளங்கினார்.

1912ல் வி. ஆர். ஃப்ரெஞ்சுத் தயாரிப்பான ஒரு கார் வாங்கினார். 'டார்ராக்' என்று பெயர் கொண்ட அது இளம் சாம்பல் நிறத்தில் இருந்தது. அந்த வட்டாரத்தில் முதன்முதலாகக் கார் வாங்கியவர் அவர் தான் எனக் கருதலாம். 9 அதைத் தாமே ஓட்ட வி. ஆர். கற்றுக் கொண்டார். எனினும் கௌஸ் என்று அழைக்கப்பட்ட முஸ்லிம் டிரைவர் ஒருவரையும் வேலைக்கு அமர்த்திக் கொண்டார்.

4. செல்லம்மா ராமசாமி அய்யங்காருடன் பேட்டி, நவம்பர் 1973.
5. வி. சாமாச்சாருடன் நூலாசிரியர் பேட்டி, ஏப்ரல் 1973.
6. நாமகிரி அம்மாள் நூலாசிரியரிடம் கூறியது.
7. வி. ஆர். நரசிம்மன் நூலாசிரியரிடம் கூறியது.
8. வி. ஆர். கிருஷ்ணசாமி நூலாசிரியரிடம் கூறியது.
9. ஆர். வி. கிருஷ்ண அய்யர் நூலாசிரியரிடம் கூறியது, மார்ச், 1973.

ராஜ்மோகன் காந்தி

மங்கா கடுமையான ஆசார நியமச் சூழலில் வளர்ந்தவள். அவள் பெற்றோர் தாங்களே சமைத்தது அன்றி வேறு உணவை—அது அய்யங்கார் சமையலாயிருந்தால் கூட—அருந்த மாட்டார்கள். இருந்த போதிலும் மங்கா, சீர்திருத்தவாதியான தன் கணவரின் போக்குகளைச் சலசலப்பு ஏதுமின்றி ஏற்றுக் கொண்டாள்.

உடல் நலமற்ற தருணங்கள்

அவர் உடல் நலமற்றுச் சில காலம் இருக்க நேரும் சமயங்களில் மங்கா சாதி, மத வேற்றுமைகள் கூடப் பார்ப்பதில்லை. வி. ஆருக்கு அடிக்கடி உடம்புக்கு வருவதுண்டு. அப்போதெல்லாம் அவள் வைஷ்ணவக் கோயிலுக்கு மட்டும் அர்ச்சனைக்கு அனுப்புவாள் என்பதல்ல, வீடு பெருக்குபவளிடம் அருகிலிருக்கும் மாரியம்மன் கோயில் உண்டியலில் போடப் பணம் கொடுத்து அனுப்புவாள். ஒரு மசூதிக்குக் காணிக்கையை கௌஸிடம் கொடுத்து அனுப்புவாள்.

பள்ளிக்கூடத்துக்கே போனதில்லை என்றாலும் மங்கா புத்திசாலியான மனைவியாக விளங்கினாள் என்றே தோன்றுகிறது. அன்புள்ளம் கொண்டிருந்தாள். தன் கணவருடைய நண்பர்களின் மனைவிமார்களிடம் அவள் கொண்டிருந்த தொடர்பு மனப்பூர்வமானதாக இருந்தது. தன் பெற்றோரிடமும் இரு சகோதரர்களிடமும் அவளுக்கு ரொம்ப ஒட்டுதல்.[10] அதே நேரத்தில் சக்கரவர்த்தி அய்யங்காரின் மனமறிந்து நடக்கும் மருமகளாகவும் விளங்கினாள். மாஜி முன்சீப்புக்கு அவளிடம் ரொம்பப் பிரியம் என்பது தெளிவு.

விசேஷ தினங்களில் மங்கா விதம் விதமான வண்ணக் கோலங்கள் போடுவாள். நவராத்திரியின்போது, பாப்பா விழித்தெழுந்ததும் பார்க்க வேண்டும் என்பதற்காக வி. ஆர். அதிகாலை நேரத்தில் வரிசை வரிசையாகப் பொம்மைகளை அடுக்கி வைப்பார். 1913ம் ஆண்டில் பாப்பாவுக்கு வயது ஏழு.

வி. ஆர். – மங்கா தம்பதியின் கடைசிக் குழந்தை லக்ஷ்மி 1912ல் பிறந்தாள். இப்போது மூன்று புதல்வர்கள் இரு பெண்களுக்குத் தாயாகிவிட்ட மங்காவின் உடல் நிலை மோசமாயிருந்தது. அவள் கணவரும் அப்படித்தான் ஆஸ்துமாவினால் அவஸ்தைப் பட்டார். முப்பத்திரண்டு அல்லது முப்பத்தி மூன்று வயதிலேயே அவரைக் குறித்துச் சில நேரங்களில் சில மனிதர்கள் கிழவன் என்று பேச ஆரம்பித்து விட்டனர்.

தனது உடல் பலவீனத்தைப் பற்றி வாய் திறவாமல் மங்கா, பாப்பாவைக் கோயிலுக்கு அனுப்பி அர்ச்சனை பண்ணிக் கொண்டு வரச் சொல்வாள். தன் கணவருக்கு நீண்ட ஆயுளைப் பிரார்த்தித்து ஏழைச் சுமங்கலிகளுக்கு புஷ்பம், சீப்பு, மூக்குப் பொட்டு, ஏன், தாலி கூடத் தானம் பண்ணுவாள்.[11]

கணவன் மனைவி இருவருமே ஆரோக்கியத்துடன் இருந்த காலங்கள் இப்போது அபூர்வமாகி வந்தன. உடல் நலம் குன்றிய நாட்களில் வி. ஆர். குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தருவார். பள்ளிக்கூடத்துக்கே போய் அறியாத மங்கா அவர்களுடன் தானும் ஒரு மாணவியாகச் சேர்ந்து கொள்வாள். கல்யாணமான புதிதில் அவளுக்குத் தெலுங்கு படிக்க மட்டுமே தெரியும். அவள் கணவர் அவளுக்குத் தமிழ் எழுதப் படிக்கக் கற்றுத் தந்தார். நாமகிரி நினைவு கூர்கிறார்:

''அப்பா எங்கள் அனைவரையும் ஔவை யார் என்று எழுதச் சொன்னார். முதலில் சரியாக எழுதியது அம்மாதான். அவளுக்கு ஒரே சந்தோஷம்!''[12]

பொருத்தமான ஜோடி

மிருதுவான குரல் அடக்கமாகவே ஒலிக்கும். மங்கா கணவருடன் தர்க்கம்புரிவது அபூர்வம். ஆயினும் தேவையான சமயங்களில் அவளால் தைரியத்துடன் எதிர்க்க முடியும். கிருஷ்ணசாமி சொல்கிறார்:

''அப்பா சில சமயம் ரொம்ப நேரம் கழித்து வருவதுண்டு. அன்றைக்கு அப்படித்தான் நண்பர்களுடன் அனுமார் வாலாக நீண்ட பேச்சுக் கச்சேரியை முடித்துக் கொண்டு வந்தார். அம்மா அவரை உள்ளே வரவிடவில்லை. 'கிருஷ்ணன் (ஆர். வி. கிருஷ்ணய்யர்) வீட்டுக்குப் போய்த் தூங்குங்கள்' என்று கத்தினாள்.''[13]

எப்பொழுதாவது ஒருமுறை நடக்கும் இத்தகைய ஊடல் பரிமாற்றம் அவர்களிடையே இருந்த உறவில் ருசி கூடியது. அந்த உறவு நம்பிக்கை, காதல் ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்திருந்தது என்பதும் தெளிவு. வி. ஆர். ஒரு வழக்கை முன்னிட்டு வெளியூர் சென்றபோதோ அல்லது மங்கா தன் பெற்றோரைப் பார்க்கப் போயிருந்த போதோ அவர்கள் ஒருவருக்கொருவர் தமிழில் எழுதிக் கொண்ட கடிதங்களை வி. ஆர். பல ஆண்டுகள் வரை பத்திரப்படுத்தித்தான் வைத்திருந்தார். ஆயினும் பின்னால் அவை காணாமல் போய்விட்டன.

எனினும் அவர்களிடையே நிலவிய காதலை நிரூபிக்க அந்தக் கடிதங்கள் தேவையில்லை தான். ''அவர்கள் ஒருவரிடம் ஒருவர் கொண்டிருந்த உறவில் அபஸ்வரம் எட்டிப்பார்த்தது கூட இல்லை..''[14] இது நாத்தனார் மங்காவைப் பற்றிச் செல்லம்மா கூறியது. தம்பதியிடையே கருத்துபேதம் தட்டியிருந்தால் அவளுக்குத் தெரியாமலா போயிருக்கும்? கிருஷ்ணய்யர் கருத்துப்படி மங்காவுக்கும் வி. ஆருக்கும் இடையில் ஜோடிப் பொருத்தம் எல்லா விதத்திலும் கச்சிதமாக இருந்தது.''[15] (தொடரும்)

10. செல்லம்மா ராமசாமி அய்யங்காருடன் பேட்டி, நவம்பர் 1973.
11. நாமகிரி அம்மாள் நூலாசிரியரிடம் கூறியது.
12. மேற்படி
13. வி. ஆர். கிருஷ்ணசாமி நூலாசிரியரிடம் கூறியது.
14. செல்லம்மா ராமசாமி அய்யங்காருடன் பேட்டி, நவம்பர் 1973.
15. ஆர். வி. கிருஷ்ண அய்யர் கல்கியில் எழுதியது, டிசம்பர் 8, 1957.


மங்கையிம் கொஞ்சும்
மனோலயங்கள் ஆயிரம்
மாறும் லயங்களின் மென்மை அனைத்தும் தெளிந்து, பெண்மை கொஞ்சும் ஆடைகள் அநேகம் அவளைத் தழுவிடப் படைக்கிறது ஜாஸ்மின்; நகம் முதல் சிகை வரை அவளைத் தனித்திடும் பெண்மை பளிச்சிடச் செய்கிறது.
அணிவீர் ஜாஸ்மினின் அருமை லேஸ்கள்: பூப் பின்னல் துணிவகைகள்; வண்ண ப்ரின்ட்களில் ஜெர்ஸி, டஃபேட்டா, க்ரேப், ப்ரோகேட் என்றிவைகள். வீட்டுக்கு அழகு கூட்டிடச் செய்யும் அலங்காரத் துணி வகையுடன், ஜாஸ்மினின் உள்ளங்கவர் லேஸ் திரைச் சீலைகள்.
Jasmine®
லேஸ்
பெண்மை அணியும்
பெண்மை
Professional Motivators/Jasmine'21
ஜாஸ்மின் மில்ஸ் ப்ரை. லிட்., கிருஷ்ண நிவாஸ், கல்பதேவி ரோட், பம்பாய்-400 002.
மொத்த வியாபாரிகள்: ஷேத் ப்ரதர்ஸ், 377 கல்பதேவி ரோட், பம்பாய்-400 002.
தொலைபேசி: 314803/312056 ஷாந்திலால் அண்டு கோ., கோவிந்த் கலி, தொலைபேசி: 318530.
எம்.எம்.ஜே. அண்டு கோ சம்பா கலி, தொலைபேசி: 319643. ஸாங்வி ஷா அண்டு கோ.
கடியால் கலி, எம்.ஜே. மார்க்கெட், பம்பாய்-400 002, தொலைபேசி: 314646, லக்ஷ்மண் ப்ரதர்ஸ்,
480, கல்பதேவி ரோட், பம்பாய்-400 002, தெலைபேசி: 313332.

“ஆறுகால்” ஸ்தோத்திரம் (15)

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்.



இரண்டு விதத்தில் மநுஷ்யனுக்கு அடக்கம் ஏற்பட வேண்டும். ஒன்று, இந்திரியங்கள் அடங்கியிருப்பது. அதாவது கண் கண்டதைப் பார்க்கக்கூடியது; மனதை விகாரப்படுத்தும் காட்சிகளை அது பார்க்கக் கூடாது. அதே மாதிரி காது அபஸ்மாரமான, நாஸ்திகமான சப்தங்களைக் கேட்கக் கூடாது. வாய் சித்த சுத்திக்கு ஹானி உண்டாக்குகிற மது மாம்ஸாதிகள், வெங்காயம் மாதிரி பதார்த்தங்களைத் தின்னக் கூடாது. வாயால் செய்கிற இன்னொரு காரியம் பேச்சு. அது விருதாவிலும் வம்பிலும் சண்டையிலும் செலவாகக் கூடாது. பகவந் நாமாவைச் சொல்வதற்கே வாக்கு பிரயோஜனமாக வேண்டும். சரீரம் என்பதைக் கொண்டு க்ஷுத்ரமான சிற்றின்பங்களைப் பெறாமல், அதைக் கொண்டு பரோபகாரமே பண்ண வேண்டும்; பூஜையும் பிரதக்ஷிணமும் நமஸ்காரமும் பண்ண வேண்டும். இப்படி இந்திரியங்களைக் கெட்ட வழியில் போக விடாமல் அடக்கி நல்லதிலேயே கொண்டு வருவது ஒருவிதமான அடக்கம். இதை 'சமம்' 'சமம்' என்று சொல்வார்கள். ''தலையே நீ வணங்காய்'' பாடலில் அப்பர் ஸ்வாமிகள் இப்படித்தான் ஒவ்வொரு அவயவத்தையும் பகவத்பரமாக ஆக்குகிறதைச் சொல்லியிருக்கிறார்.

'சம'த்தோடு 'தமம்' என்பதைச் சேர்த்து 'சமதமாதி' என்று சொல்வதுண்டு. 'தமம்' என்பது மனதை அடக்குவது. இரண்டு விதமான அடக்கத்தில் ஒன்று வெறுமே இந்திரியங்களை மட்டும் கெட்ட காரியத்தில் போக விடாமல் தடுப்பது — இதுதான் சமம். அடக்கத்தில் இரண்டாவது நிஜமான தமம் என்பது மனதையே, **எண்ணத்தையே** அடக்கி விடுவது. காரியத்தில் கெடுதல் செய்யாமல் இந்திரியங்களை அடக்கிவிடலாம். ஆனாலும் மனஸானது அந்தக் கெட்டதுகளையே கல்பித்துக் கொண்டு, அதாவது மானஸிகமாக அந்தக் கெடுதல்களைச் செய்து கொண்டு, அதிலே சந்தோஷப்பட்டால், வெளி அடக்கத்தால் ஒரு பிரயோஜனமும் இல்லை. உள்ளடக்கம்தான் 'தமம்' என்பது.

ஆனால் இந்த உள்ளடக்கம் சித்திப்பது ரொம்ப சிரமம். முதலில் வெளி அடக்கமான 'சம'த்தைப் பழகிப் பழகி முன்னேறினால்தான், பிறகு 'தமம்' உண்டாகும். கீதையில்கூட ஓரிடத்தில் பகவான் சொல்லியிருக்கிறார். (கீதை 2-59). ஆஹாரத்தை விட்டுவிட்ட ஒருத்தனுக்கு (இங்கே 'ஆஹாரம்' என்கிறபோது பகவான் வயிற்றுச் சாப்பாட்டை மட்டுமன்றிக் கண் - காது - மூக்கு - வாய்-சரீரம் ஆகியவை அநுபவிக்கிற எல்லா விஷய சுகங்களையுமே குறிப்பிடுகிறார்) அநுபோக்யமான அந்த வஸ்துக்கள் விட்டுப் போனதோடு சரி. ஆனாலும் அந்த வஸ்துக்களை அநுபோகம் பண்ணுவதில் இவன் அடைகிற ருசியின் வாசனை மட்டும் மனஸில் இருந்து கொண்டுதான் இருக்கும். அந்த ருசியும் போய், மனஸ் எப்போது பூரண பரிசுத்தமாக ஆகும்? பரமாத்மாவைப் பார்த்து விட்டால் அப்புறம்தான் இவனுக்கு வெளி விஷயாநுபோகத்தோடு (வெளி நுகர்ச்சியோடு) உள் நுகர்ச்சியும் தொலையும் என்கிறார்.

''அப்படியானால் மனஸிலிருந்து விஷய வாஸனை போனால் தான் பரமாத்ம தரிசனம் கிடைக்கும் என்பது சரியா? அல்லது இங்கே பகவான், பரமாத்ம தரிசனம் கிடைத்தால் தான் மனஸிலிருந்தே வாஸனை போகும் என்று சொல்வது சரியா? இது என்ன, 'கல்யாணமானால் பைத்தியம் தெளியும்; பைத்தியம் தெளிந்தால் கல்யாணமாகும்' என்ற மாதிரி அல்லவா இருக்கிறது?'' என்று தோன்றும்.

முதலில் நமக்கு 'மனஸ் சுத்தமாக வேண்டும்; அதிலிருந்து வாஸனைகள், பழைய ருசிகள் அடியோடு போகவேண்டும்' என்ற தாபமும், தவிப்பும் இருக்க வேண்டும். தவிப்பு இருந்தாலும் இது இலேசிலே ஸித்தித்து விடாது. அதற்காக வெளியிலேயாவது இந்திரியங்களால் அல்ப ஸுகங்களை அநுபவிக்காமல் 'சம'த்தை அப்பியாசம் பண்ண வேண்டும். அதிலே முன்னே போகப் போகத் தானாகவே கொஞ்சம் கொஞ்சமாக 'தம'மும் வந்து மனஸிலிருந்தும் வாஸனை வேகம் குறைந்து விடும். குறையுமே ஒழிய அது பூரணமாகத் தொலைந்து போகாமல் அவ்வப்போது வழுக்கி விட்டுக் கொண்டுதான் இருக்கும். உறியடி உற்சவத்தில் வழுக்கு மரத்தில் ஏறுகிறவனின் கதையாக, எத்தனை வழுக்கினாலும் நாம் விடாமுயற்சியுடன் மேலே ஏறப் பார்க்க வேண்டும். இதிலே நம் அந்தரங்க சுத்தத்தை, சிரத்தையைப் பார்த்துப் பரமாத்மாவே நமக்குக் கடைசியில் தரிசனம் தருவார். அந்தத் தரிசன ருசி கிடைத்து விட்டதானால் போதும்; அப்புறம் இந்த மனஸ் ஒரு நாளும் அதை விட்டுவிட்டு, மற்ற ருசிகளில், வாஸனைகளில் இறங்கவே இறங்காது. அதற்கப்புறம் வழுக்கலே இல்லை.

(தொடரும்)

[1932ம் வருஷத்திலிருந்து பெரியவர்கள் வழங்கிய உரைகள், ஸ்ரீமுகங்கள், கட்டுரைகளிலிருந்து தொகுத்தது]

தேய்ந்துபோன, பழைய ரப்பர் ரோலர்களைத் தூக்கியெறிவது, நீங்கள் மிச்சப்படுத்தக் கூடிய பணத்தைத்தூக்கி எறிவது போலா கும். இரண்டே வாரங்களில் 27 சென்டி மீட்டரிலிருந்து 300 சென்டிமீட்டர் அளவு வரையிலுள்ள உங்கள் பழைய ரோலர்களைப் புதுப்பித்துத் தருகிறோம் — தனிப்பட்ட ஒரு சிறப்பு ரப்பர் கலவையைக் கொண்டு, உங்கள் ரோலர்களை மீண்டும் சிறப்பாக இயங்குமாறு வார்க்கிறோம்— அச்சு, தேயிலை, மிட்டாய் தயாரித்தல், தோல் பதனிடுதல்—எந்தத் தொழிலுக்குரிய ரோலர்களாயினும் சரி.

உங்கள் ரோலர்கள் மறுவாழ்வு பெறுகின்றன

எங்கள் உறுதியான ரப்பர் கலவை உதிர்ந்துவிடாமல் நீடித்து நிலைக்கிறது. எவ்வித சீதோஷ்ண நிலையிலும் சீக்கிரமாகத் தேய்வதில்லை.

பழைய ரப்பர் முழுமையாகக் களையப்படுகிறது


எங்கள் ரப்பர் வார்ப்பு முறை தனிச் சிறப்புடையது. மேல் பூச்சாக ரப்பரைப் பொருத்தாமல் ரோலரின் உலோகத் தாலாகிய பாகத்தின்மேல் புதிதாக வார்த்துக் கொடுக்கிறோம். இவ்வாறு உங்கள் ரோலர்களைப் பலமுறை புதுப் பித்து உபயோகிக்கலாம்.

உங்கள் ரோலர்கள் எப்போதாவது தேய்வடைந்தால் எங்களிடம் அனுப் புங்கள். அவைகளுக்குப் புது வாழ்வு அளிக்கிறோம். உங்கள் செலவை மிச்சப்படுத்துகிறோம்.

SIRUBBER

மீண்டும் உருண்டோடும் உங்கள் ரோலர்கள் — மீண்டும் வருவீர்கள் எங்களை நாடி.

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட்
உசிலம்பட்டி ரோடு, கோச்சடை, மதுரை 625 016



உங்கள் பழைய ரோலர்களின்மேல் நாங்கள் புதிதாக வார்க்கும் ரப்பர் உங்கள் செலவை மிச்சப்படுத்துகிறது.

இதனைத் தென்னகத்தில் நாங்கள் செய்கிறோம்.

SAA/51/2541

பார்த்திபன் கனவு



அத்தியாயம் 15

திரும்பிய குதிரை

குந்தவி குழந்தைப் பருவத்திலிருந்தே தந்தையின் பெண்ணாக வளர்ந்து வந்தவள் என்று முன்னமே குறிப்பிட்டிருக்கிறோம். நரசிம்ம சக்கரவர்த்தியே அவளுக்குத் தாயும் தகப்பனும் ஆசாரியனும் உற்ற சிநேகிதனுமாயிருந்தவர். அவளுக்கு ஏதாவது மனக் கிலேசம் ஏற்பட்டால் அப்பாவிடம் சொல்லித்தான் ஆறுதல் பெறுவாள்; சந்தேகம் வந்தால் அவரைத்தான் கேட்பாள்; ஏதாவது குதூகலிக்கக்கூடிய விஷயம் நேர்ந்தாலும் அவரிடம் சொல்லிப் பகிர்ந்து கொண்டால்தான் அவளுக்குப் பூரண திருப்தி உண்டாகும். ஒரு கதையோ, கவிதையோ நன்றாக இருந்தால் அவரிடம் சொல்லி அனுபவிக்க வேண்டும். ஒரு சித்திரமோ, சிற்பமோ அழகாக இருந்தால் அவருடன் பார்த்து மகிழ வேண்டும். இப்படியெல்லாம் வெகு காலம் வரையில் மகளும் தந்தையும் இரண்டு உடம்பும் ஒரே உள்ளமுமாக ஒத்திருந்தார்கள்.

ஆனால், அந்தக் காலம் போய் மூன்று வருஷங்கள் ஆகிவிட்டன. அப்பாவுக்கும் பெண்ணுக்குமிடையே இப்போதெல்லாம் ஒரு மானசீகத் திரை போட்டது போலிருந்தது. தேசப் பிரஷ்ட தண்டனைக்குள்ளான சோழ ராஜ குமாரனுடைய ஞாபகம் குந்தவியின் மனத்தை விட்டு அகலவில்லை. எவ்வளவோ முயன்று பார்த்தும் அவனை மறக்க முடியவில்லை. அந்த ராஜ குமாரனைப் பற்றிக் குந்தவி பேச விரும்பினாள். ஆனால், யாரிடம் பேசுவது? இத்தனை நாளும் தன்னுடைய அந்தரங்க எண்ணங்கள், ஆசைகள் எல்லாவற்றையும் தந்தையிடமே சொல்லி வந்தாள். ஆனால் சோழ ராஜகுமாரன் விஷயமாக அவரிடம் மனம் விட்டுப் பேச முடியவில்லை. எப்போதாவது ஏதாவது கேட்டாலும் தன் எண்ணத்தைச் சிறிதும் அறிந்து கொள்ளாதது போலவே அவர் மறுமொழி சொல்லி வந்தார். தனக்குத் தாயார் இல்லையே என்ற குறையைக் குந்தவி இப்போதுதான் உணர ஆரம்பித்தாள்.

அந்தக் குறையை ஒருவாறு நீக்கிக் கொள்வதற்காக அவள் விக்கிரமனுடைய அன்னையுடன் சிநேகம் கொள்ள விரும்பினாள். ஆனால், அருள்மொழியைக் குந்தவி சந்தித்த அன்றே அவள் பரஞ்சோதியடிகளுடன் தீர்த்த யாத்திரை கிளம்பி விட்டதாகப் பார்த்தோம். யாத்திரையின் போது ஒரு சமயம் அவர்கள் மாமல்லபுரத்துக்கு வந்திருந்தார்கள். சில தினங்கள் அந்தக் கலாக்ஷேத்திரத்தில் தங்கினார்கள். குந்தவியும் அப்போது மாமல்லபுரத்தில் இருந்தாள். அடிக்கடி அருள்மொழி ராணியைப் பார்த்தாள். ராணி அவளிடம் மிகவும் பிரியமாகவே இருந்தாள். ஆனாலும் அவர்களுடைய உள்ளங்கள் கலக்கவில்லை. எப்படிக் கலக்க முடியும்? தன்னுடைய ஏகப் புதல்வனைக் குந்தவியின் தந்தை கண்காணாத தீவுக்கு அனுப்பி விட்டதைப் பற்றி அருள்மொழியின் மனம் கொதித்துக்கொண்டிருந்தது. குந்தவிக்கோ தன் தந்தை மேல் அணுவளவேனும் குற்றம் இருப்பதாகத் தோன்றவில்லை. தந்தையிடத்தில் அவளுக்கு இருந்த ஒப்பில்லாத பிரியத்தோடு அவரைப் பற்றி அவளுக்கு ரொம்பப் பெருமையும் உண்டு. இதிகாசங்களில் வரும் சூரிய, சந்திர வம்சத்துச் சக்கரவர்த்திகளைப் போல் பெருமை வாய்ந்தவர் தன்

அமரர் கல்கி

தந்தை; வடக்கே நர்மதை நதி வரையில் சென்று திக்விஜயம் செய்தவர்; ராட்சதப் புலிகேசியை வென்று, வாதாபியை அழித்தவர். அப்படிப்பட்டவரின் கீழ் சிற்றரசனு யிருப்பதே அந்தச் சோழ ராஜ குமாரனுக்குப் பெருமை யல்லவா? இருநூறு வருஷங்களாகச் சோழர்கள் பல்லவ சக்கரவர்த்திகளுக்கு அடங்கிக் கப்பம் செலுத்தி வரவில்லையா? இப்போது மட்டும் என்ன வந்தது?

இவ்விதம் அந்த இரண்டு பேருடைய மனோபாவங்களிலும் வித்தியாசம் இருந்தபடியால் அவர்கள் மனம் கலந்து பேச முடியவில்லை. ஒருவரிடம் ஒருவரின் அன்பு வளர்ந்தது. ஆனால் ஒவ்வொருவருடைய இதயத்திலும் ஒரு முக்கியமான பகுதி பூட்டப்பட்டுக் கிடந்தது.

ஒரு நாள் அருள்மொழி ராணி ஓரளவு தன் 'இருதயத்தின் கதவைத் திறந்தாள். குந்தவியின் தந்தைக்குத் தன்னை மணம் செய்து கொடுப்பதாகப் பேச்சு நடந்ததையும், தான் அதைத் தடுத்துப் பார்த்திப மகாராஜாவைக் கல்யாணம் செய்து கொண்டதையும் கூறினாள். விக்கிரமனுடைய பிள்ளைப் பிராயத்தில் அவ



னுக்குக் குந்தவியை மணம் முடித்து வைக்கத் தான் ஆசைப்பட்டதையும் தெரிவித்தாள். அப்போது குந்தவியின் உடம்பெல்லாம் புளகாங்கிதம் அடைந்தது. ஆனால் பிறகு ராணி, ''அதெல்லாம் கனவாய்ப் போய்விட்டது. பாக்கியசாலியான வேறொரு ராஜகுமாரனை நீ மணந்து சந்தோஷமாய் வாழ்வாய்!'' என்று சொன்னபோது குந்தவிக்குக் கோபமே வந்தது.


''இல்லை அம்மா! எனக்கு இல்லறத்தில் பற்று இல்லை. உலகத்தைத் துறந்து நான் சிவ விரதையாகப் போகிறேன்'' என்றாள் குந்தவி. அவள் அவ்விதம் கூறியதன் கருத்தை ராணி அறிந்து கொள்ளவில்லை.

பிறகு ஒரு சமயம் குந்தவி, இளவரசர் விக்கிரமன் பல்லவ சாம்ராஜ்யத்துக்குக் கப்பம் செலுத்த இசைந்தால் இன்னமும் திரும்பி வந்து சோழ நாட்டுக்கு அரசராகலாமே என்று சொன்னபோது, அருள்மொழி ராணியின் முகம் அருவருப்பினால் சிணுங்கிற்று. ''அதைக் காட்டிலும், விக்கிரமன் செத்துப் போனான் என்ற செய்தி எனக்குச் சந்தோஷத்தை அளிக்கும்!'' என்றாள்.

மாமல்லபுரத்தில் அருள்மொழி ராணி தங்கியிருக்கும் போதுதான் ஒரு நாளைக்குப் பழைய சிவனடியார் வந்து மகாராணியைப் பார்த்துப் பேசினார். அவர் பேசிவிட்டுத் திரும்பிப் போகும் சமயத்தில் குந்தவி அவரைப் பார்த்தாள். உடனே பழைய ஞாபகங்கள் எல்லாம் வந்து விட்டன. ராணியிடம் சென்று அந்தச் சிவனடியார் யார் என்று கேட்டாள். யார் என்று ராணியினால் சொல்ல முடியவில்லை. ''யாரோ பெரியவர். என் பதி வீர சொர்க்கம் சென்ற பிறகு இவர்தான் எங்களுக்குக் குலதெய்வமா யிருந்து வருகிறார்!'' என்றாள்.

குந்தவி மனத்துக்குள், ''குலதெய்வமில்லை; குலச் சனியன்!'' என்று நினைத்துக்கொண்டாள். பின்னால் அருள்மொழித் தேவி காவேரி சங்கமத்தில் கடலில் மூழ்கிய செய்தியும், அவளை யாரோ தூக்கிச் சென்றதாக வதந்தியும் காதில் விழுந்தபோது, ''தூக்கிக்கொண்டு போனவர் அந்தப் போலிச் சிவனடியாராய்த்தான் இருக்க வேண்டும். ஏதோ கெட்ட நோக்கத்துடன் அந்த வேஷதாரி இத்தனை நாட்களாய் மகாராணியைச் சுற்றி யிருக்கிறான்!'' என்று நிச்சயம் செய்து கொண்டாள்.

இந்தத் துர்ச் சம்பவத்துக்குச் சில காலத்துக்கு முன்புதான் குந்தவியின் தமையன் இலங்கையை வெற்றி கொண்டு திரும்பி வந்திருந்தான். அவன் தன் சகோதரியிடம் அளவற்ற வாஞ்சை வைத்திருந்தான். குந்தவி தன் உள்ளத்தை ஓரளவு திறந்து காட்டுவதும் சாத்தியமா யிருந்தது. தன் சகோதரியின் மன நிலையை உணர்ந்து மகேந்திரன் தானே செண்பகத் தீவுக்குப் போய் விக்கிரமனை எந்தச் சாக்கிட்டேனும் திருப்பி அழைத்து வரத் தீர்மானித்தான். இந்த எண்ணத்துடனே அவன் சக்கரவர்த்தியிடம் சாவகம், காம்போஜம் முதலிய கீழ்ச் சமுத்திரத் தீவுகளுக்குப் படையெடுத்துச் செல்ல அனுமதி கேட்டான். சக்கரவர்த்தி இதற்குச் சம்மதியாமல், தமக்கே கடற் பிரயாணம் செய்யும் உத்தேசம் இருக்கிறதென்றும், அதனால் மகேந்திரன் யுவராஜ பதவியை



வகித்துப் பல்லவ சாம்ராஜ்யத்தைப் பரிபாலிக்கும் பொறுப்பை வகிக்க வேண்டுமென்றும் வற்புறுத்தினர். மகேந்திரன் இதை மறுக்க முடியவில்லை.


இந்த நிலைமையில், குந்தவியின் வற்புறுத்தலின் மேல் மகேந்திரன் மாரப்ப பூபதியைச் சோழ நாட்டின் சேனபதியாக்கியதுடன், அவனை மாமல்லபுரத்துக்கும் தருவித்தான். சிவனடியாரை அவன் கண்டுபிடிக்க வேண்டுமென்றும், அவர் மூலமாக ராணி அருள்மொழித் தேவி இருக்கும் இடத்தை அறிய வேண்டும் என்றும் மாரப்ப பூபதிக்குக் கட்டளை பிறந்தது. அதோடு குந்தவியும் மகேந்திரனும் உறையூர் வசந்த மாளிகையில் சில காலம் வந்து தங்கப் போவதாகவும், அதற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்ய வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. அவர்கள் உறையூர் போவதற்குச் சக்கரவர்த்தியும் சம்மதம் கொடுக்கவே, மகேந்திரனும் குந்தவியும் மற்ற பரிவாரங்கள் புடைசூழ ஒருநாள் பிரயாணம் கிளம்பினர்கள். விக்கிரமன் காட்டாற்று வெள்ளத்தில் அகப்பட்டுத் தப்பிப் பிழைத்த அன்றைக்கு மறு நாள் உச்சிப் போதில் அந்தக் காட்டாற்றுக்குச் சுமார் ஒரு காத தூரத்தில் அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். குந்தவி பல்லக்கிலும் மகேந்திரன் குதிரை மீதும் அமர்ந்து பிரயாணம் செய்தார்கள்.

மகேந்திரன் தன்னுடைய இலங்கைப் பிரயாணத்தைப் பற்றியும், அங்கே தான் நடத்திய யுத்தங்களைப் பற்றியும் தங்கைக்குச் சொல்லிக் கொண்டு வந்தான். இலங்கை நாட்டின் நீர் வள, நில வளங்களைப் பற்றியும் வர்ணித்தான். குந்தவி வியப்புடன் கேட்டுக் கொண்டு வந்தாள். ஆனாலும் இடையிடையே அவளுடைய ஞாபகம் செண்பகத் தீவின் இரத்தின வியாபாரியின் மீது சென்று கொண்டிருந்தது. இது அவளுக்கே ஆச்சரியத்தை அளித்தது. அந்த இரத்தின வியாபாரி வராமல் போனதினால்தான் என்ன, எதற்காகத் தன் மனம் அவ்வளவு கவலையுறுகிறது என்று ஆச்சரியப் பட்டாள். அவன் தனக்குச் செண்பகத் தீவு என்று சொன்னபடியால், சோழ ராஜகுமாரனைப் பற்றி அவனிடம் விசாரிக்கும் ஆவல்தான் காரணம் என்று தன்னைத் தானே சமாதானம் செய்து கொண்டாள்.

''இல்லை, இல்லை; அவர்கள் இருவருக்கும் உள்ள முக ஒற்றுமைதான் காரணம்!'' என்று ஒரு மனம் சொல்லிற்று. ''ஆனால் அது உண்மையா? நம்முடைய கண்கள்தாம் நம்மை ஏமாற்றி விட்டனவா? உண்மையில் அத்தகைய முக ஒற்றுமை இருந்தால், அப்பா அதைக் கவனித்திருக்க மாட்டாரா? கவனித்திருந்தால் அவனை வழிப்பறிக்காரனிட மிருந்து காப்பாற்றி உறையூருக்கு அனுப்பி வைத்திருப்பாரா? அதெல்லாம் இல்லை. நம்முடைய பிரமைதான் காரணம்!'' என்று இன்னொரு மனம் சொல்லிற்று. இத்தகைய எண்ணங்களுக்கு மத்தியில் ''உறையூரில் ஒருவேளை அந்த இரத்தின வியாபாரியைச் சந்திப்போமா?'' என்ற நினைவும் அடிக்கடி தோன்றிக் கொண்டிருந்தது.

இப்படியெல்லாம் குந்தவி தன் மனத்துக்குள் எண்ண மிட்டுக் கொண்டும், ஒரு காதில் மகேந்திரனுடைய பேச்சைக் கேட்டு, 'ஊங்' கொட்டிக் கொண்டும் பிரயாணம் செய்துகொண்டிருக்கையில் அவர்களுக்கு எதிரே திடீரென்று தோன்றிய ஒரு காட்சி அவளை ஒரேயடியாகத் தூக்கி வாரிப் போட்டது. இத்தனைக்கும் அந்தக் காட்சி வேறொன்றுமில்லை. சேணம் போட்டு அலங்கரிக்கப்பட்டிருந்த ஓர் உயர்ந்த ஜாதிக் குதிரை முதுகில் ஆள் இல்லாமல் தனியாக வந்து கொண்டிருந்த காட்சிதான். அதைக் கண்டு ஏன் அவ்வாறு குந்தவி திடுக்கிட வேண்டும்? —அவளுக்கே தெரியவில்லை. குதிரை இன்னும் அருகில் வந்தது. அது அவளுடைய தந்தையின் குதிரைதான் என்பது ஐயமறத் தெரிந்தது. சில சமயம் சக்கரவர்த்தி அதில் ஏறி வந்திருப்பதை அவளே பார்த்திருக்கிறாள். அது எப்படி இங்கே வந்தது? ஒருவேளை, அப்பாதான்....? அவ்விதம் இருக்க முடியாது. அப்பாவிடம் காஞ்சியில் விடை பெற்றுக் கொண்டுதானே கிளம்பினோம்? நமக்கு முன்னால் அவர் எப்படி வந்திருக்க முடியும்? வந்திருந்தாலும் குதிரை ஏன் இப்போது தனியாக வருகிறது?... சட்டென்று ஒரு விஷயம் ஞாபகம் வந்தது. இரத்தின வியாபாரிக்குக் குதிரையும் கொடுத்து அனுப்பியதாக அப்பா சொன்னாரல்லவா? குதிரைக்குப் பதிலாக அவன் கொடுத்த இரத்தினங்களையும் காட்டினாரல்லவா? ஆமாம்; இரத்தின வியாபாரி ஏறிச் சென்ற குதிரையாகத்தான் இருக்க வேண்டும். ஆனால், அது ஏன் இப்போது தனித்து வருகிறது? இரத்தின வியாபாரி எங்கே? அவன் என்ன ஆனான்?.... குந்தவியின் அடிவயிறு அப்படியே மேலே கிளம்பி அவளுடைய மார்பில் புகுந்து மூச்சை அடைத்து விட்டது போலிருந்தது!

(தொடரும்)


கல்யாண
கோலாகல
நடையழகுக்கு
ஜலசா 29
சைஸ்கள் 5-10
ரூ 34.95
ஓரியண்டா 75
சைஸ்கள் 3-7
ரூ 19.95
ஓரியண்டா 74
சைஸ்கள் 3-7
ரூ 19.95
Bata
அட்மிரல் 57
சைஸ்கள் 5-10
ரூ. 74.95

யசோதா கிருஷ்ணா

ராமனின் கதையையும், கிருஷ்ணனின் லீலைகளையும் எவ்வளவு தடவைகள் கேட்டாலும் பார்த்தாலும் அலுப்பதில்லை. கண்ணனின் குழந்தைப் பருவத்துக் கோலாகலங்களை எவ்வளவு பேர் எத்தனை முறை படமாக்கி விட்டார்கள்? எதுவுமே சோடை போகவில்லையே. இதோ, ஆந்திராவிலிருந்து 'யசோதா கிருஷ்ணா' வண்ணக் களஞ்சியமாக வந்திருக்கிறது, தமிழ்ப் படமாக. புராணப் படங்களை நம்மவர்களை விட ஆந்திரர்கள் பயபக்தியோடு படமாக்குகிறார்கள். அழகழகான செட்டிங்குகளையும் ஆடையணிகளையும் பயன்படுத்திப் பார்ப்பவர் உள்ளத்தில் பக்திப் பரவசம் ஏற்படும் வகையில் படத்தை உருவாக்கி யுள்ளார்கள். காலஞ் சென்ற ரங்காராவ்தான் கம்சனாக வருகிறார். பாத்திரப் பொருத்தம் எப்படி என்று சொல்லவா வேண்டும்? கம்சன் தனது தங்கையின் குழந்தைகளைக் கொல்ல மனமில்லாமல் அவர்களை வளர விட்டு (ஏழு குழந்தைகள் வரை) அவர்களுடன் விளையாடி மகிழ்வதாகக் காட்டி இருப்பது புதுமையாகவும் பொருத்தமாகவுமிருக்கிறது.

குழந்தை, சிறுவன், வாலிபன் ஆகிய மூன்று நிலைகளிலும் கண்ணனாக நடிப்பவர் தத்ரூபமாகக் காட்சி தருகிறார். கார்மேக வண்ணத்திலேயே கண்ணன் பாத்திரத்தைக் காட்டி இருப்பதும் படத்தின் வெற்றிக்கு உதவுகிறது. குட்டி கிருஷ்ணனின் கட்டித் தனங்களை ரசிக்கும்படி படமாக்கி இருக்கிறார்கள். கண்ணனின் விளையாட்டுக்களில் 'A' முத்திரை பெறும் கட்டங்களையும் நாசூக்காகக் காட்டி இருக்கிறார்கள். ஆயர்பாடியில் ஆயர்பாடிய கோபாலனைப் புராணப்படிக்கு நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துவனவாக உள்ளன ஆடையணிகளும் அலங்காரங்களும். பின்புலனில் யமுனா நதியைக் காட்டிக் கொண்டே இருப்பதும், கோபியர்களின் கோலாகலங்களும் ரசிக்கும்படியாக உள்ளன. கண்ணனின் வளர்ப்புத்தாயான யசோதைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. குழந்தைக் கண்ணனை வளர்த்துக் கம்ச வதத்துக்காக அனுப்பிய யசோதை மறுபடியும் எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகுதான் கோபாலனைச் சந்திக்கிறாள். வளர்த்த மகனைப் பிரிந்த தாபம், தவிப்பு, ஏக்கம், அவன் வரவுக்காகக் காத்திருப்பது ஆகிய உணர்ச்சிகளையெல்லாம் யசோதா பாத்திரமேற்றுள்ள ஜமுனா அழகாகச் செய்திருக்கிறார்.

கண்ணனுடைய திருமணக் கோலாகலத்தைக் காணவில்லையே என்று யசோதை கண்ணனிடம் குறைப்பட, அதைத் தீர்த்து வைப்பதாகக் கண்ணன் வாக்களிக்கிறான். எப்படி அந்த வாக்கைக் காப்பாற்றுகிறான் என்பதை பத்மாவதி பாலாஜி திருமணத்தை இதன் கடைசியில் இணைத்து விட்டார்கள். ஆந்திரர்கள்தான் எப்படியாவது வேங்கடாசலபதியின் மகிமையை எங்காவது புகுத்தி விடுவார்களே. பத்மாவதியாக ஸ்ரீவித்யா தோன்றுகிறார்.

நல்ல ஒளிப்பதிவு, கண்ணுக்கினிய வண்ணம், காதுக்கினிய இசை, மனத்தை நிறைக்கும் 'பக்தி' இது போதாதா – யசோதா கிருஷ்ணாவைத் தாய்க்குலம் கும்பல் கும்பலாகப் போய்ப் பார்ப்பதற்கு? – **கௌசிகன்**



அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்

மதுரை

ஓர் முக்கிய வேண்டுகோள்

பொதுமக்கள், ஆஸ்திக அன்பர்கள் ஆகியோரின் விருப்பத்திற்கிணங்க அருள்மிகு மீனாட்சி அம்மனுக்கு ஒரு தங்க ரதம் செய்வதாக முடிவு செய்யப் பட்டுள்ளது. இதற்காக மரத்தினால், தேர் விரைவில் செய்யப்பட விருக்கிறது.

மெய்யன்பர்கள் தங்கள் அன்புக் காணிக்கைகளைத் தங்கமாகவோ அல்லது ரொக்கமாகவோ இதற்கென தனியாக அம்மன் சன்னதி நுழைவு வாசலில் வைக்கப்பட்டிருக்கும் உண்டியலில் செலுத்தி அம்பாளின் அருளுக்குப் பாத்திரமாகும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். நன்கொடையினை, வங்கி காசோலை மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்,

நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி :

நிர்வாக அதிகாரி,

அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்

மதுரை

PIN : 625001

R. திருவேங்கடசுவாமி

உதவி ஆணையர்/நிர்வாக அதிகாரி

சிவபெருமான் சௌந்தர பாண்டியன் என்ற பெயருடன் அவதார மன்னனாக மதுரையை ஆண்ட போது அவர் தம்மை நம்பியவர்களைக் கைவிடவில்லை. அவருடைய இடபம் கயற்கொடியாகவும் சர்ப்பம் பொன் ஆபரணமாகவும், கொன்றை மாலை வேப்ப மாலையாகவும், புலித் தோல் பொன்னுடையாகவும் அவதார மெடுத்தன. இந்த உருவத்துக்குச் சடாமுடி ஒவ்வாத தொன்றாயிற்றே? அதைப் பெருமான் ரத்தின முடியால் மறைத்தார். மேக் - அப் பூர்த்தியாயிற்று.

''என் அம்மா, அப்பாவோட ஆசை அது தான்....''

''எங்க லேடீஸ் கிளப் மதுரையிலே பெரிய பணக்காரக் கிளப்னு உனக்குத் தெரியும். இல்லியா லாவண்யா?''

''தெரியும். நீங்க அதிலே வைஸ்-பிரஸிடெண்ட்.''

''உன் அப்பாவைப் பத்திப் பேசிப் பார்த்தேன். சின்னக் குழந்தையாகவோ இல்லே நடுத்தர வயசுக்காரனாகவோ இருந்தா பிராப்ளம் இருக்காது. வயசான ஓர் ஆளுக்குப் போக வரச் செலவுக்குக் கொடுக்கிறது அவசியம்தானான்னு கேட்கிறா.''

''அப்படியா?''

''ரோட்டரியிலே ட்ரை பண்ணினேன்'' என்ற சாவித்திரி, ''நான் நடந்ததைச் சொன்னால் உன் மனசு புண்படாதே?'' என்று கேட்டாள்.

மதுர நாயகி

பி.வி.ஆர்

16

லாவண்யா தன்னைத் தயாராக்கிக் கொண்டாள். கார் டிரைவரை அனுப்பி அவளைச் சாவித்திரி வரவழைத்திருக்கிறாள் என்றால், விஷயம் முக்கியமான தொன்றாக இருக்க வேண்டும். எதைப் பற்றி?

ரமணியைப் பற்றிப் பேசப் போகிறாளா?

ஒருசில நிமிட மௌனத்துக்குப் பிறகு சாவித்திரி வார்த்தைகளை அளந்து பேசுவது போல் நிதானமாக ஆரம்பித்தாள்.

''உன்னோட அப்பாவுக்குக் கான்சர்னு ரமணி சொன்னான். லங் கான்ஸர், இல்லியா?''

''ஆமாம்.''

''வெறும் கோபால்ட், ரேடியம் ட்ரீட்மெண்டினாலே மட்டும் குணப்படுத்த முடியாத கேஸ்னு டாக்டர்கள் அபிப்பிராயப்படறாளாம்.''

''ஆமாம்.''

''ஆபரேஷன் செய்துதான் ஆகணும்னு. அது அமெரிக்காவிலேதான் நடக்கணுமா? இந்தியா போறாதா?''

''தெரியாது. மெட்ராஸிலே பெரிய ஆஸ்பத்திரி கான்ஸர்காரர்களுக்குன்னு இருக்கு.''

''அடையாறு கான்ஸர் இன்ஸ்டிடியூட்... ஆனா என் பிள்ளை என்கிட்டே பிடிவாதமா இருக்கான். பலராமனை அமெரிக்காவுக்கு அனுப்பணும்னு அவன் சொல்றான்.''

''மனசுக்குக் கஷ்டமாக இருந்தாலும் காது கேட்டுத்தானே ஆக வேண்டும்? சொல்லுங்கள்.''

''இந்த மாதிரி கேஸ்களை இந்தியாவிலேயே கவனிக்கக்க முடியாது என்கிற நிலை பிறந்தாத்தான் மேற்கொண்டு பரிசீலனை செய்ய முடியும்னு ரோட்டரியிலே சொல்லிட்டா.''

''சரி.''

''ஆனா, எங்க லேடீஸ் கிளப்பிலே வேறு ஓர் ஏற்பாடு செய்திருக்கிறோம்.''

''சொல்லுங்கள்.''

''அமெரிக்காவிலே ஆபரேஷன் நடக்கும். அதுக்குச் செலவு கிடையாது. ஆனா இங்கேயிருந்து போக வர ஆகும் செலவை நீங்க ஏத்துக் கொள்ளணும். கிட்டத் தட்ட எல்லாச் செலவுமா இருபதாயிரம் ரூபாய் ஆகும்.''

''அவ்வளவு ஆகுமா?''

''பிளேன் சார்ஜ், அங்கே தங்கறதுக்கான செலவு, ஆஸ்பத்திரியிலேந்து வெளியே வந்ததும் நேரக் கூடிய செலவு எல்லாமாச் சேர்ந்து இருபதாயிரம்கிறது கொறைச்சல் தான்.''

''அம்மாகிட்டே சொல்றேன்.''

''என்னைக் கேட்டா மெட்ராஸிலேயே வைச்சுக்கலாம். அமெரிக்கா, ஜெர்மனின்னு படிச்சுட்டு வந்தவா எல்லாம் மெட்ராஸ்லே இருக்கா.''

''ஆனா அம்மா அப்பா ஆசைப்படறானே.''

''இவ்வளவு பணத்தைக் கொட்டிக் கடையி லே....''

''பிரயோசன மில்லாமப் போயிட்டா என்ன செய்யறதுன்னு கேட்கிறேள் இல்லியா?''

''நினைக்கிறேன்.''

''ஓர் உயிர் போறது உயிரே நஷ்டமாயிட றது. உயிர் நஷ்டத்தோடே பண நஷ்டமும் உண்டாறது. ஒரு உயிர் பிழைக்காதுன்னு தெரிஞ்சும் வைத்தியத்துக்குப் பணத்தைக் கொட்டறது விவேகம் இல்லேன்னு நானும் நினைக்கத்தான் நினைக்கிறேன். ஆனா இதை நான் என் அப்பா விஷயத்திலேயே எப்படிக் காட்ட முடியும்? அம்மாவுக்கு ஒரு நப்பாசை, அப்பா பிழைக்க வழி யிருக்காதான்னு...''

''அப்போ உன் சொந்த அபிப்பிராயம்?''

''என் சொந்த அபிப்பிராயம் எதுவானா என்ன? எனக்குக் கான்சர் வந்தாத்தான் அதை என் இஷ்டம் போல் செயல்படுத்த முடியும். இப்ப நான் மத்தவா சொல்றதைக் கேட்டுண்டு, செய்யறதைப் பார்த்துண்டு தான் இருக்க முடியும்.''

''இருபதாயிரம் ஒரு பெரிய தொகை.''

''இதைச் சொல்லத்தான் கூப்பிட்டனுப் பினீங்களா?''

''இன்னும் ஒன்னே ஒன்னு இருக்கு'' என்ற அவள், ''கொஞ்சம் இரு'' என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றாள்.

சாவித்திரி திரும்பி ஒரு டிரேயுடன் வந் தாள். ஜிலேபி, மைசூர் பாகு, ரிப்பன் பகோடா, திராட்சை ரசம், எல்லாம் டிரேயில் இருந்தன.

''ரெண்டு பேருமாச் சாப்பிடலாம், லாவண்யா!''

''எனக்கு நேரமாறது.''

''காரிலே கொண்டு போய் விடச் சொல் றேன். சாப்பிடு.''

ஒரு விள்ளல் ஜிலேபியை வாயில் போட்டுக் கொண்டே லாவண்யா சாவித்திரியைப் பார்த்தாள். 'ஜிலேபி சகிக்கலே' என்று சொல்ல வேண்டும் போலத் தோன்றியது. ஆனால் தன்னையே அடக்கிக் கொண்டாள்.

''ரமணிக்குக் கூடிய சீக்கிரம் கல்யாணம் நடக்கணும்னு நான் ஆசைப்படறேன். ஆனா.. ஆனா....''

லாவண்யாவுக்கு எரிச்சல் வந்தது. இதைச் சொல்லவா அவளை வரவழைத்திருக்கிறாள்?

''அதுக்கு நான் என்ன செய்யணும்?''

''ஒரு பெரிய இடத்திலிருந்து பெண் வர இருக்கு. ஆனா ரமணி பதில் சொல்ல மாட் டேன் என்கிறான்.''

''எனக்கும் உங்க பிள்ளையின் போக்குக்கும் என்ன சம்பந்தம்?''

''நிறைய இருக்கு. இல்லாமப் போனால் நான் உன்னை இங்கே வரவழைப்பாளேன்?''





''புரியலை.''

''நீங்க ரெண்டு பேரும் எவ்வளவு தூரம் பழகியிருக்கேளோ, எனக்குத் தெரியாது.''

''நான்ஸென்ஸ்... நான் உங்க பிள்ளை யோடு பழகியிருக்கேனு? நான் எதுக்கு அவரோடு பழகணும்?''

''அவசரப்படாமக் கேளு, லாவண்யா. உன்னை யாரும் கைதிக் கூண்டிலே நிறுத்திக் கேள்வி கேட்கலே....'' என்ற சாவித்திரி, ''அவன் ஆசைப்படறதைப் பூர்த்தி செய் யறது என் கடமை'' என்ருள்.

''என்ன ஆசை?''

''நீ எனக்கு மருமகளாக வரணும்னு ரமணி ஆசைப்படருன்.''

''மாபீ!'' என்ற லாவண்யா மறு கணமே உதட்டைக் கடித்துக் கொண்டாள். ஒருசில விளுடிகள் கண் முன் மகத்தான காட்சி எழுந்தது. அவள் இவ்வளவு பெரிய வீட்டுக்கு விளக்கேற்ற வருகிருள்! ஒருவன் மனமார அவளை விரும்ப அவளும் அவனை ஏற்றுக் கொள்கிருள். அவளுடைய வாழ்க்கையின் திசையே மாறுகிறது. இதுவரையில் தன் மண வாழ்க்கைக்கு என்று அஞ்சும் பத்து மாகச் சேர்த்து வைத்ததெல்லாம் பைத்தியக் காரத்தனமாகப் படுகிறது. ரமணியை அவள் காதல் என்னும் அடிப்படையில் நேசிக்கவில்லை தான். ஆனல் அவன் மீது அவளை உதறி எறியக் கூடிய அளவுக்கு வெறுப்பு இல்லையே? அவனுடைய யதார்த்த இயல்புகளுக்குக் காதலே ஓர் அசம்பாவிதம். அவனால் யாரை யுமே காதலிக்க முடியாது. அவன் யாரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டாலும் அவன் கண்டிப்பாகக் காதலனுக இருக்க மாட்டான். ஆனுல் கல்யாணத்துக்குப் பிறகு, கணவன்– மனைவி என்ற தாம்பத்திய நிலை பிறந்த பிறகு நிச்சயமாக அவளுடைய மனப் போக்கில் ஒரு மாறுதல் இருக்கும். அன்பு, மதிப்பு, மரியாதை, பக்தி என்றெல்லாம் அவளுக்குத் தன் கணவன் மீது நிச்சயமாகப் பிறக்கும்.

அந்தக் கணவன் ரமணியா?

அவன் கொடுத்துத்தான் வைத்திருக்கிருன். ரமணி சாவித்திரிக்கு ஓரே பிள்ளை. ஒரே பிள்ளையின் ஆசையை எந்தத் தாயார்தான் நிறைவேற்றி வைக்க மாட்டாள்?

திடீரென்று தூக்கத்திலிருந்து கண் விழிப் பவளைப் போல், சாவித்திரியின் குரல் கேட்டு அவள் விழித்துப் பார்த்தாள்.

சாவித்திரி புன்முறுவலுடன் உட்கார்ந் திருந்தாள். லாவண்யா ஒரு பிரமையில் தன்னையே இழந்துவிட்டு மீண்டும் இந்த உலகத்துக்குத் திரும்பி யிருக்கிருள் ,என்ப தைப் புரிந்து கொண்டாள்.


''இப்பத் தெரியறதா, நான் எதுக்குக் கூப்பிட்டு அனுப்பினேன்னு?''

''தெரியறது.''

''நீ என்ன சொல்றே?''

''நான் சொல்றதுக்கு என்ன இருக்கு? என் அம்மா அப்பா நிச்சயிக்கவேண்டிய விஷயம்.''

''அது கடைசியிலே வரவேண்டியதுதான். ரமணி ஆசைப்படறது மட்டும் முக்கிய





சஞ்சய்யை வென்றவர்!

சஞ்சய் காந்தியைத் தோற்கடித்த ரவீந்திர பிரதாப் சிங் மோட்டார் சைக்கிளிலும், சைக்கிளிலும் தமது பிரசாரத்தை நடத்தினார். காலை 6 மணி முதல் இரவு 12 மணி வரை சுற்றுவார். இரவு ஏதாவது ஒரு கிராமவாசியின் குடிசையில் தங்கி விடுவாராம். இவர் ஒரு கிரிமினல் வழக்கறிஞர்.

இந்துஸ்தான் டைம்ஸ் - கே. ஆர்.

மில்லே. உன் அபிப்பிராயமும் தெரிஞ்சா எனக்கு நல்லது இல்லையா?''

''எனக்கு இந்த விஷயத்திலே அபிப்பிராயம்னு எதுவும் கிடையாது. மாமி... நான் ஒரு பெண்... அதுவும் ஒரு சமையற்காரரோட பெண். ஆனா சமூக நியதிப்படி நான் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டாகணும். குடும்பம் குழந்தைன்னு எல்லாரையும் போல் வாழ்ந்தாகணும்...இப்ப நீங்களாகவே எனக்கொரு வழியைக் காட்டி, அந்த வாழ்க்கையை அமைச்சுக் கொடுக்க நினைக்கிறேள்...''

திடீரென்று, ''யார் சொன்னா!'' என்று கேட்டாள் சாவித்திரி.

''அப்போ?''

''நான் எந்த வழியையும் உனக்கு அமைக்க நினைக்கல்லே. அப்படி அமைக்க நான் யார்? என் பிள்ளை ஆசைப்படறதைச் சொன்னேன். உன் அபிப்பிராயத்தைக் கேட்டேன். அவ்வளவுதான்.''

''அப்படியா? அப்ப என்னோட பொதுவான அபிப்பிராயத்தைச் சொல்றேன். கேளுங்கள். எனக்கு உங்க ரமணியைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும், அவர் கிடைக்கலேன்னா நான் இப்படியே இருந்துடுவேன்னு எண்ணும் வெறி இல்லே. என்னை மனைவியாக மதிச்சு, கடைசிவரை துணிக்கும் சோத்துக்கும் நான் தவிக்காமல் இருக்க நல்லவன் ஒருத்தன் புருஷனா வந்தா நான் மனசு குளிர அவனை ஏத்துப்பேன்.''

''தாங்க்ஸ் லாவண்யா.''

''ஆனா, நான் உங்க பிள்ளையோட பழகறேன், என்னைத்தான் கல்யாணம் பண்ணிக்கணும்ங்கிற ஆசையை அவர் மனசிலே நான்தான் தூண்டி விட்டிருக்கேன்னு நீங்க நினைச்சா அது முழுக்க முழுக்கத் தப்பு...''

''நான் அப்படி நினைக்கல்லே லாவண்யா.''

''உங்க பிள்ளையை எனக்குத் தெரியும். அவர் என் அம்மா அப்பாவைப் பார்க்க வர்றதுண்டு. ஆனா நாங்க ரெண்டு பேரும் ஒருத்தருக்கொருத்தர் அதிகம் பேசிக்கொள்றது கூடக் கிடையாது.''

''அப்படியா?''

''அவர் இப்படி ஓர் ஆசையைத் தனக்குள்ளே புதைச்சு வச்சிண்டிருக்கிறார்ங்கற உண்மையே நீங்க இப்பச் சொல்லித்தான் எனக்கே தெரியும்.''

''ஆச்சரியமா இருக்கு.''

''ஆனா என்னோட ஆச்சரியமே வேறே, மாமி. நீங்க பெரிய பணக்காரி. ஒரு லேடீஸ் கிளப்புக்கு வைஸ் பிரசிடெண்ட். பண்பும், விவேகமும் உங்களிடம் எல்லோரும் எதிர்பார்க்கறதுதான்... ஆனா நீங்க நாகரிகம் இல்லாமெ என்னைப் பெத்தவா கிட்டே பேச வேண்டியதை யெல்லாம் எங்கிட்டே பேசப் பார்த்திருக்கிறீர்கள். இன்னும் சொல்லப் போனா, உங்க பிள்ளையைப் பத்தி எங்கிட்டே கேட்டு என்னை ஆழம் பார்க்கிறீர்கள்.''

''இல்லே.''

''இல்லேன்னு இப்ப நீங்க சொன்னா, ஒண்ணு பொய் சொல்றேள். இல்லாமல் போனா உங்களையே ஏமாத்திக்கறேள்.''

''நான் எதுக்குப் பொய் சொல்லணும்?''

''மொதல்லே பாசாங்கிலே ஆரம்பிச்சேள்... என் அப்பாவோட கான்சர் ஆபரேஷனைப் பத்திப் பேசி என்னோட மனசை இளக வைத்தீர்கள்.... அப்புறம் அந்த இளகிய மனசிலேந்து உங்களுக்கு ஆதரவா ரெண்டு வார்த்தையை எதிர்பார்த்தீர்கள்.''

''லாவண்யா, இதெல்லாம் உன் கற்பனை!''

''உங்களைப் புரிஞ்சுக்கறதுக்கு எனக்குக் கற்பனையே தேவையில்லே. உங்கபிள்ளை ஆசைப்படற மாதிரி நானும் ஆசைப்பட்டிருந்தா நீங்க என்ன செய்வேள்னு எனக்குத் தெரியும். பணத்தாலே எங்க குடும்பத்தை விலைக்கு வாங்கப் பார்த்திருப்பேள். ஏன், என் அப்பாவோட ஆபரேஷனை நீங்களே கவனிச்சுக்கறேன்னு சொல்லியிருப்பேள்.... எதுக்கு? எங்க குடும்பத்தோட உத்தாரணத்துக்கா? இல்லே, உங்க பிள்ளையை எங்க கிட்டேயிருந்து மீட்டுக்க!''

''நான்ஸென்ஸ்!'' என்ற சாவித்திரி, ''லாவண்யா, நீ அழகா இருக்கலாம், டீஸண்ட்டா இருக்கலாம். ஆனா இன்னும் முதிர்ச்சியும் விவேகமும் வரல்லே... உன்னைத்தான் மனைவியாக் கொள்ளுவேன்னு ரமணி பிடிவாதமா இருந்துட்டா எனக்கு வேறே ஒரு வழியும் கிடையாது. எனக்குப் பிடிக்கிறதோ இல்லையோ, நீ என் மாட்டுப் பொண்ணா வந்துதான் ஆகணும்... எனக்குத் தெரிய வேண்டியதெல்லாம் நீயும் அவனை மாதிரியே அதே எண்ணத்தோட இருக்கியாங்கறதுதான்...இப்ப எனக்குத் தெரிய வேண்டியது தெரிஞ்சுடுத்து.''

''நான் வரேன்.''

''கார்லே கொண்டு போய் விடச் சொல்றேன், லாவண்யா!''

''தாங்க்ஸ், மாமி! நான் வரேன்.''

''ஜிலேபியும், பகோடாவும் அப்படியே இருக்கு!''

''என் காதுக்குக் குளிர்ச்சியா நீங்க நாக்கு ருசிக்க ருசிக்கப் பேசினப்புறம் என் வயிறு நிறைஞ்சுடுத்து. உங்க வீட்டு டிபனுக்கு அங்கே இடமில்லே.''

லாவண்யா கடைசித்தடவையாகச் சாவித்திரியை எரிப்பது போலப் பார்த்துவிட்டு வாசலை நோக்கி நடந்தாள். (தொடரும்)

மார்கோ சோப்

உங்கள் சருமத்தை சுத்தமாக வைத்துக் கொள்வதற்கு மட்டுமல்ல. இது அதிக வலுவையும் திடத்தையும் உடலுக்கு அளிக்கிறது.

இது இந்நாட்டின் ஒரு முக்கிய இரசாயன சாலையின
ஆராய்ச்சி மூலம் அறியப்பட்ட ஒரு மகத்தான உண்மை
இயற்கையின் அன்பளிப்பான "நீம் எண்ணை" கொண்டு
தயாரிக்கப்படும் ஒரே சோப் மார்கோ தான்.
மார்கோவில் மட்டுமே இந்த நீம் எண்ணையின் குணமும்
மணமும் அமைந்துள்ளது. உங்கள் உடலை சுத்தமாக
வைப்பதோடு மட்டுமல்லாமல் திடமாகவும் இருக்க மார்கோ
உதவுகிறது. ஆகையால்தான் மார்கோ சோப்
1920-ம் வருடம் முதல் நிலையான புகழுடன் விளங்குகிறது.



மார்கோ சோப்
எக்காலத்திற்கும் எல்லா
வயதினருக்கும்
ஏற்றது.

IDL/MGN/1Ta

கல்கத்தா கெமிக்கலின் ஒரு தயாரிப்பு

புதிய அமைச்சர்கள்; சிறிய அறிமுகங்கள்!

மொரார்ஜி தேசாய்

எட்டுக் குழந்தைகளில் மூத்தவரான இவர், தம்முடைய எண்பத்தி ஓராவது வயதில் நாட்டின் பிரதம மந்திரியாகப் பதவி ஏற்றிருக்கிறார். இன்ப துன்பங்கள் இவரது வாழ்க்கையில் எப்போதுமே துணை நடந்திருக்கின்றன.

பதினைந்தாவது வயதில் இவருக்குத் திருமணம் நிச்சயமாயிற்று. திருமணம் நடக்க மூன்றே நாட்கள் இருக்கும் போது பள்ளிக்கூட ஆசிரியரான இவரது தந்தை காலமானார். ஆனாலும் திருமணம் தடைப்படவில்லை.

பன்னிரண்டு வருடங்கள் பம்பாய் மாகாண அரசாங்க அலுவலகத்தில் பணி செய்து 1930-ம் ஆண்டில் அரசியலில் குதித்தார்! பம்பாய் மாநில முதல்வருமானார்.

இருபது வருடங்களுக்கு முன்பு பம்பாயில் அதிகபட்சம் வெறுக்கப்பட்டவர் மொரார்ஜி! ஆனால் சமீபத்தில் தேர்தல் நேரத்தில் பம்பாய் சௌபாத்திக் கடற்கரையில் இவர் பேச்சைக் கேட்க வரலாறு காணாத அளவில் மக்கள் சமுத்திரமாகவே கூடியிருந்தார்கள்.

மொரார்ஜியின் வாழ்க்கை ஒரு யோகியின் வாழ்க்கையைப் போலத்தான். அதிகாலை எழுந்ததும் யோகாசனப் பயிற்சிகள். பாலும் தயிரும் அடங்கிய சிற்றுண்டி. அதுமினிய சர்க்காவில் நூல் நூற்பு. இந்த நூல் நூற்பு நடக்கும் வேளையிலேயே வந்த பார்வையாளர்களுக்குப் பேட்டி. இவரது உணவு ரொட்டி, வெண்ணெய், பால், காய்கறிகள், பழங்கள்தான். இரவு 11 மணிக்குத்தான் ஓய்வுற்றுப் படுக்கச் செல்வார். விருந்து படைக்கும் அழைப்பிதழ் வந்தால், கையால் குத்தின அரிசி உணவு இருந்தால்தான் அழைப்பை ஏற்க முடியும் என்று தகவல் கொடுப்பார்!

சௌதுரி சரண் சிங்

சட்டப் படிப்புப் படித்த விவசாயி திரு சரண் சிங்! ஆனால் சட்டத்தையும் சீக்கிரமே வழக்கறிஞர் வாழ்க்கையையும் ஒதுக்கிவைத்து விட்டு உத்தரப்பிரதேச சட்டசபைக்குள் நுழைந்து விட்டார். இரண்டு தடவைகள் உத்தரப் பிரதேச முதல்வராக இருந்தார். அந்த மாநில பழங்குடி மக்களுக்கு சரண் சிங் வாக்கு வேத வாக்கு. காங்கிரசிலிருந்து பாரதிய - கிரந்தி தள் வழியாக பாரதிய லோக் தளுக்குப் போய் இப்போது ஜனதாவாக மலர்ந்திருக்கும் சரண் சிங்கிற்கு நாடாளு மன்றப் பிரவேசம் புதிது. பதவி ஏற்க வேண்டிய நேரத்தில் உடல்நலம் குன்றி மருத்துவ மனையில் படுக்க வேண்டி நேர்ந்தாலும், அங்கிருந்தே அவர் விட்ட தாக்கீது அரசியல் வட்டாரத்தை ஒரு கலக்குக் கலக்கியது.

அறுபத்தி ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கையில் வைத்திருக்கும் அவர் 'ஜகஜீவன் ராம் பிரமதராக வந்தால் அவர் கீழ் தம்மால் பணியாற்ற இயலாது' என்று பளிச்சென்று ஜெயப்பிரகாஷ் நாராயணுக்கு எழுதி விட்டார்! இதனால் பிரதமர் பதவிக்கு யாரைத் தேர்ந்தெடுப்பது என்ற ரகசிய அபிப்பிராயக் கணிப்புத் திட்டம் காற்றோடு போயிற்று! அவர் விரும்பியபடியே மொரார்ஜியின் கீழ் வேலை செய்யும் வாய்ப்பும் வந்தது!

ஜகஜீவன் ராம்

கிரிக்கெட் ஆட்டத்தில் தொடர்ந்து மட்டை பிடித்து வெகு நேரம் ஆடிக் கொண்டிருப்பவரை, 'லாங்கஸ்ட் இன்னிங்ஸ்'—(*Longest Innings*) ஆடுபவர் என்று சொல்வார்கள். அரசியல் கிரிக்கெட்டில் இப்படித் தொடர்ந்து மத்திய மந்திரிப் பதவி 'இன்னிங்ஸ்' ஆடுபவர் திரு ஜகஜீவன்ராம்!

இடையே 'ரிட்டயர்ட் ஹர்ட்' (*Retired Hurt*) என்ற முறையில் 1963 ஆகஸ்டிலிருந்து 1966 ஜனவரி வரை சுமார் இரண்டரை வருட காலம் காமராஜ் திட்டத்தாலும், 1977 பிப்ருவரி இரண்டாம் தேதியிலிருந்து 1977 மார்ச்சு மாதம் இருபத்தி ஏழாம் தேதி வரையிலும் சுமார் ஐம்பத்தி நான்கு நாட்கள் அதிதீவிர ஜனநாயகவேட்கையாலும், மந்திரி பதவியை பிரிந்து இருந்தவர்!

பிரதமர் தேர்வுக்கான அபிப்பிராயக் கணிப்பு முறை கைவிடப்பட்டதால், தாமும் மந்திரி பதவி ஆசையைக் கைவிடப் போவதாகச் செய்திகள் எழும்பக் காரணமாக இருந்தார். ஆனால் ஜெயப்பிரகாசர் பம்பாய் மருத்துவ மனையிலிருந்து விடுவித்த வேண்டுகோளும், அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் மொரார்ஜிக்கான முழு ஆதரவு அறிவிப்பும், ஜகஜீவன் ராமின் கோபத்தை ஒதுக்கிச் சிந்திக்க வைத்து, நிபந்தனை ஏதுமின்றி அமைச்சரவையில் பாதுகாப்பு மந்திரியாகச் சேர வைத்தன!

'ஜனதாக் கட்சி துப்பாக்கி என்றால் அதற்கு ஜனநாயகக் காங்கிரஸ்தான் தோட்டா! அந்த வெடியினால்தான் காங்கிரஸ் வீழ்ந்தது' என்று ஒரு சாராரும், 'துப்பாக்கி இல்லாமல் வெறும் தோட்டா வெடிக்குமா?' என்று மற்றொரு சாராரும் பேசிக் கொள்வதற்கு இணங்க, அவ்வப்போது தேவைக்கிணங்கத் தோட்டா துப்பாக்கிக்குள் புகும். மற்ற நேரங்களில் தோட்டா வெளியே இருக்கும்!

ஆம்! ஜனநாயகக் காங்கிரஸ் ஜனதாவுடன் இணையாது. ஆனால் ஒத்துழைக்கும்!

ராஜ் நாராயண்

ரே பரேலி மாவீரர் ராஜ்நாராயண் சட்டம் படித்தவர். வழக்கறிஞரானார். ஆனால் சீக்கிரமே அரசியல் அவரைக் கவர்ந்தது. அரசியல்வாதியான பிறகும் அவர் அடிக்கடி நீதிமன்றங்களுக்குப் போனார். வழக்கறிஞராக இல்லை! ஏதாவது போராட்டத்தைத் தலைமை தாங்கி நடத்தி, குற்றம் சாட்டப்பட்டவராக!


சமீபத்திய தேர்தலில் ஜவாஹர்லால் நேரு சர்வ கலாசாலை மாணவர்களே ராஜ்நாராயணுக்குப் பிரசாரம் செய்ய வந்தனர். 'சர்வாதிகார ராட்சதனைக் கொன்றவர்'. 'ரேபரேலி சிங்கத்தை வசப்படுத்தியவர்' என்றெல்லாம் அவருக்குப் புகழ் மாலை.

மார்ச் மாதம் பதினாறும் தேதி ரே பரேலியில் வாக்கெடுப்பு நாள். முதல் நாள் ராஜ்நாராயணும் அவருடைய நண்பர்களும் பல கிராமங்களுக்குப் போனார்கள். அன்றுஅரசியல் பிரசாரம் செய்யக் கூடாது என்று சட்டம். ஆனாலும் மக்கள் நாராயண் குரலைக் கேட்கத் துடித்தார்கள். ராஜ்நாராயண், சங்கர பகவான் பெருமைகளையும் கணேசரின் பிரதாபங்களையும் கதாகால க்ஷேபமாகச் சொல்லிக் கொண்டே நடந்தாராம். ராஜ்நாராயண் தெய்வ நம்பிக்கை நிறைய உள்ளவர். தெய்வம்தான்அராஜகத்தைஒழிக்க, இப்படி தேர்தல் ஏற்பாடு செய்யும் எண்ணத்தை இந்திரா காந்தி உள்ளத்தில் தோற்றுவித்தது என்பது இவருடைய அசைக்க முடியாத சித்தாந்தம்!



எண்களில் 'ஏழு' பற்றி இவருக்கு நம்பிக்கை அதிகம். ''1927-ல் சைமன் கமிஷன் வந்தது. 1937-ல் காங்கிரஸ் அதிகாரத்துக்கு வந்தது. 1947-ல் பூரண சுதந்திரம் வந்தது. 1957-ல் டாக்டர் ராம் மனோஹர் லோகியா பண்டித நேருவுக்கு எதிராகப் போர்க் கொடி உயர்த்தினார். 1967-ல் காங்கிரஸ் எட்டு மாநிலங்களில் தோல்வி கண்டது. இப்போது 1977. ஓர் ஏழிற்கே இவ்வளவு சக்தி என்றால் இரண்டு ஏழிற்கு எத்தனை 'பவர்' இருக்க வேண்டும்!

மொரார்ஜி



ஜகஜீவன்



சரண்சிங்




வாஜ்பேயி



பகுகுண



தண்டாவதே



ராஜ்நாராயண்



அத்வானி



பெர்னாண்டஸ்







லோக சபையின் இளைஞர்!

புதிய லோக சபையின் மிக இளம் அங்கத்தினர் நாது சிங். இவருக்கு இருபத்தாறு வயது. ஜெய்பூர் மகாராஜா கல்லூரி மாணவர்கள் சங்கத்தலைவர். ஜெய்பூர் காங்கிரஸ் இணைக்காரியதரிசி கிஷோர் சர்மாவை வென்று 1,65,000 வோட்டுவித்தியாசத்தில் லோக சபையை வந்தடைந்த 'மிஸா' கைதி. 'தம்மை ஜெயில் பட்டதாரி' என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப் படுகிறார். இவரது பரீட்சை ரிஸல்ட் ஜெயிலில் இருக்கும் போது கிடைத்ததாம்! எம். ஏ. பட்டம் பெறவும் படிக்கப் போகிறாராம். ராஜஸ்தானில் பல சிறைகளில் இருந்ததால், சிறைகளின் லஞ்ச ஊழலை அம்பலப் படுத்துவதில் முனைந்திருக்கிறார். பி. எஸ். எம்.

ஆகவே, இப்போதுதான் நாடு பரிபூரண விடுதலை அடையப் போகிறது'' என்றார் ராஜ் நாராயண், மார்ச் பதினாறும் தேதியன்று!

மது ராமச்சந்திர தண்டாவாதே

பம்பாய்க் கல்லூரியில் பௌதிகப் பேராசிரியராக இருந்து 1971-ம் ஆண்டு தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினராக வந்தார். 'க்விட் இந்தியா' இயக்கம், கோவா சத்தியாக்கிரகம், பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, சம்யுக்த சோஷலிஸ்ட் கட்சி, ரிவல்யூஷனரி சோஷலிஸ்ட் கட்சி, எல்லாவற்றையும் ஒரு கை பார்த்தவர். சமீபத்தில் பதினெட்டு மாத காலம் பெங்களூர் சிறைச்சாலையில் இருக்க வேண்டி வந்த போது 'மார்க்ஸீயம் காந்தியம்' என்ற நூலை எழுதி முடித்திருக்கிறார்!

அடல் பிஹாரி வாஜ்பேயி

அந்த நாட்களில் 'ஜனசங்'கத்தைத் தோற்றுவித்த சியாம் பிரசாத் முகர்ஜியின் அந்தரங்கக் காரியதரிசியாகப் பணியாற்றிய அனுபவம் உண்டு.

எம். ஏ. பட்டம் பெற்ற வாஜ்பேயி பல பத்திரிகைகளின் ஆசிரியராக இருந்திருக்கிறார். சிறந்த பேச்சாளர்.

''இந்திரா காந்தி அவர்களின் தேர்தல் கூட்டத்தில் குழப்பம் விளைவிக்க முயன்றவர்கள், தாங்கள் சார்ந்திருக்கும் கட்சிக்கு அவப் பெயர் விளைவிப்பவர்கள். எந்தத் தலைவர் பேச்சையும் கேட்க விருப்பமில்லையென்றால் அந்தக் கூட்டத்துக்குப் போகாமல் இருப்பதுதான் நாணயமான செய்கை'' என்று தம் கட்சி ஊழியர்களைக் கண்டிக்கும் அளவுக்குக் கண்யத்தைக் கையாளுபவர்.

பிப்ருவரி முதல் வாரத்தில், அவரால் தேர்தல் பிரசாரம் செய்ய முடியுமாவென்று கூட சந்தேகமாக இருந்தது. ஒரு சிறு ரண சிகிச்சையைத் தொடர்ந்து அவர் உடல் நலம் பாதிக்கப்பட்டுச் சோர்ந்திருந்தார். எந்தத் தொகுதியில் நிற்பது என்பது கூட நிச்சயமாகவில்லை.

ஆனால் டில்லி காஜுட் சர்க்கல் தொகுதியில் சசிபூஷணுக்கு எதிராக நின்று தொண்டர்களின் அதிவேக அமர்க்களப் பிரசாரத்தினால் வெற்றி வாகை சூடி வெளிநாட்டு இலாக்கா அமைச்சராகவும் அமர்ந்து விட்டார்.

ஜார்ஜ் பெர்னாண்டஸ்

பீஹாரிலுள்ள முஸபர்பூர் தொகுதி இவருக்குப் புதிது. இவரோ பரோடா வெடிகுண்டு வழக்குக் கைதியாக டில்லி சிறையில் இருக்கிறார். ஆனாலும் வேட்புமனு தாக்கல் செய்கிறார். தொகுதி மக்கள் இவர்முகத்தைப் பார்க்காமலேயே லட்சக்கணக்கில் தங்கள் வாக்குகளை இவருக்குப் போடுகிறார்கள். பிரமாதமான வெற்றி. ஆனால் மந்திரிசபைக்குள் அகப்பட்டுக் கொள்ளாமல் சுதந்திரமாக இருக்க இவர் முயன்றது மாத்திரம் தோல்வியாக மாறி விட்டது.

இவர் நின்று வெற்றி பெற்ற தொகுதி மக்கள், இவரை மந்திரி பதவி ஏற்க வைக்க ஒரு போராட்டமே நடத்தினர்கள். கடைசியில் ஒருவழியாகத் தபால் தந்தித் துறை அமைச்சராகியிருக்கிறார்!

ஹேமாவதிநந்தன் பகுகுணா

ஜகஜீவன் ராமின் வலது கரமாக ஜனநாயக காங்கிரசில் விளங்கும் பகுகுணா, 1952, 57, 62, 67-ம் ஆண்டுகளில் நான்கு தடவைகள் உத்தரப் பிரதேச சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர். அவர் திறமையைக் கண்ட காங்கிரஸ் அவரை 1971-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் பாராளுமன்றத்துக்கு நிற்க வைத்துத் தபால் தந்தித்துறை அமைச்சராகவும் ஆக்கியது.

இடையே 1974-ம் ஆண்டு மார்ச் மாதத்தில் உத்தரப்பிரதேச அரசியல் நிலையைச் சமாளிக்க, பகுகுணா உ. பி. முதல்வராக அனுப்பப்பட்டார். சுமார் ஒன்றரை ஆண்டு காலம் அந்தப் பதவியில் இருந்து நல்ல பெயர் சம்பாதித்துக் கொண்டார்.

''நான் உ.பி. முதல்வராக இருந்தபோது அவசர நிலை அமுலுக்கு வந்தது. அலகாபாத்திலுள்ள 'பாரத்' என்னும் பத்திரிகை தினசரி தலையங்கத்தில் என்னைக் குறை கூறி எழுதும். அதற்காக நான் அந்தப் பத்திரிகை மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை! ஏன் என்றால் நானும் மூன்று சந்தர்ப்பங்களில் வெவ்வேறு பத்திரிகைகளுக்கு ஆசிரியராக இருந்திருக்கிறேன்'' என்கிறார் பகுகுணா.

இப்போது இவர் பெட்ரோல், ரசாயன அமைச்சர்!

எல். கே. அத்வானி

சட்டம் படித்தவர். பத்திரிகையாளராக மாறி அரசியல்வாதியாக மலர்ந்தார். ஆர். எஸ். எஸ். இயக்கத்தின் வழியாக ஜனசங்கத்தை வந்து சேர்ந்த இவர், அந்தக்கட்சியின் தலைவர் பொறுப்பையும் ஏற்றார்.

எப்போதும் சிரித்த முகம்! சொல்லம்புகளையும் வலி தெரியாமல் தைக்குமாறு வீசுதல் இவருக்குக் கைவந்த கலை. ராஜ்ய சபை உறுப்பினராக இருந்து அதன் மூலமாக அமைச்சரவையில் ஒலிபரப்புத் துறை அமைச்சராக ஆகியிருக்கிறார்.

தொகுப்பு: **சோமறி சுவாமிநாதன்**



சிறப்புச் சிறுகதை

டஸ்டர்



மேஜை மேல் படிந்திருந்த தூசிப் படலத்தில் குண்டூசி முனையால் கோலம் போட்டவாறு உட்கார்ந்திருந்தான் நாகு. அது ஒரு பொழுதுபோக்கு அவனுக்கு. வேலை இருக்கிறதோ, இல்லையோ, ஐந்து மணி வரை பொழுதைப் போக்கி ஆக வேண்டுமே! அவனுடைய வேலையே பொழுதைப் போக்க வழி தெரியாமல் கடிகாரத்தில் ஒரு கண் வைத்தவாறு காத்திருக்கும் வேலைதான்! டெலெக்ஸ் ஆபரேட்டர்! எப்போதாவது திடீரென்று நினைத்துக் கொண்டு டெலெக்ஸ் இயந்திரம் படபடவென்று அடித்துக் கொள்ளும். யந்திரத்தின் படபடப்பு நின்றதும் செய்தியைக்கிழித்து அனுப்ப வேண்டிய செக்ஷனுக்கு அனுப்பி விட்டால் மறுபடியும் அடுத்த செய்தி வரும் வரை காத்திருக்க வேண்டியது தான்! சிலசமயம் இங்கிருந்து டெல்லிக்கோ பம்பாய்க்கோ அனுப்ப வேண்டிய செய்தியைப் பெருமாள் கொண்டு வந்து கொடுப்பான். அம்மாதிரி வேலை நாள் முழுதும் கூட்டினாலும் ஒரு மணி நேரத்துக்கு அதிகமாக இருக்காது. மற்ற நேரங்களில் நாகு என்ன செய்வான்! மேஜையின் மேல் இவ்வளவு தூசி படிந்திருக்கிறதோ, அவனுக்குப் பொழுது போகிறதோ!

குண்டூசி முனையால் தூசிப் படலத்தில் மனம் போனபடி கிறுக்கி ஏதாவது கோலம் போடுவான். அது அவனுக்குத் திருப்தி அளிக்காது. ஒரு மெல்லிய காகிதத்தால் அதைக் கலைத்துவிட்டுத் தூசியை மீண்டும் சமப்படுத்துவான். மறுபடியும் வேறு கோலம், மறுபடியும் அதிருப்தி. தூசிக்கும் குண்டூசிக்கும் மாற்றி மாற்றி வேலை. எப்போதாவது தனக்கு முழுத் திருப்தி அளிக்கக் கூடிய கோலத்தை அவனால் போட முடியுமா?

ஒரு சௌகரியம். அந்த மேஜை மேல் படிந்திருந்த தூசியைத் துடைக்க யாருமே வருவது கிடையாது. டெலெக்ஸ் மெஷினுக்குப் பொறுப்பேற்ற நாளிலிருந்து அந்தத் தூசிப் படலத்தின் ஏகபோக உரிமையும் அவனுக்குக் கிடைத்து விட்டது. முதலில் அவன் அதன் சௌகரியத்தை உணரவில்லை. பியூன் பெருமாளைக் கூப்பிட்டு அந்தத் தூசியைத் துடைக்கச் சொன்னான். அது தன்னுடைய டியூட்டியில் சேர்ந்ததில்லை என்று விறைப்பாகக் கூறி மறுத்து விட்டான் பெருமாள். தூசியைத் துடைப்பதற்கு டஸ்டர் வேண்டுமென்று ஆபீசில் கேட்டுப் பார்த்தான். டஸ்டருக்கு சாங்ஷன் கிடையாதென்று பதில் கிடைக்க ஒரு வாரம் ஆயிற்று. அந்த ஒரு வாரத்துக்குள்ளேயே நாகு அந்தத் தூசிப் படலத்தின் உபயோகத்தை நன்கு புரிந்து கொண்டு விட்டான்.

அந்தக் கோலக் கிறுக்கலில் ஏதேதோ நினைவுகளை உருவகப்படுத்த முனைந்துகொண்டிருந்தான் நாகு. உருத் தெரிந்தும் தெரியாமலும் மங்கலாகிவிட்ட நினைவுகள். ஆரம்பமோ முடிவோ இல்லாமல் அவன் நெஞ்சில் குறுக்கும் நெடுக்குமாகப் பின்னிக் கிடந்த நினைவுகள். நடு நடுவே இங்கொன்றும் அங்கொன்றுமாகப் பளிச்சிடும் சுடர்ப் பொறிகள் போன்ற நினைவுகள். அவற்றை யெல்லாம் இந்தக் கோலக் கிறுக்கல்களில் உருவகப்படுத்த அவன் கைதேர்ந்த நவீன ஓவியக் கலை நிபுணனா என்ன? அப்படி இல்லாது போனாலும் நாகுவின் கை கிறுக்கிக்கொண்டு தான் இருந்தது. அந்தக் கிறுக்கல்கள் அவனுக்குப் புரிகின்றனவே, அது போதாதா?


''சார், இந்த மெஸேஜ் பம்பாய் ஆபீசுக்கு அர்ஜெண்டாப் போகணுமாம்!'' என்றுகூறியவாறு ஒரு தாளை அவன் கையில் கொண்டு வந்து கொடுத்தான் பெருமாள்.

கண்டி விடப்பட்ட சுறுசுறுப்புடன் நாகு மெஷினருகே சென்று உட்கார்ந்தான். தாளைப் பிரித்து எதிரே வைத்துக் கொண்டதும் சப்பென்று போயிற்று அவனுக்கு. அப்படி ஒன்றும் தலை போகிற செய்தி இல்லை அது. தபாலிலேயே அனுப்பியிருக்கலாம். இரண்டு நாட்கள் கழித்துச் சென்றாலும் கூடக் கப்பல் எதுவும் கவிழ்ந்துவிடப் போவதில்லை.

எடுத்த எடுப்பிலேயே பம்பாய் ஆபீஸ் டெலக்ஸுடன் தொடர்பு கொள்ள முடிந்தது. மூன்றே நிமிஷங்களுக்குள் சடசடவென்று டைப் செய்து அந்தச் செய்தியை அனுப்பிய பிறகு மீண்டும் தன் மேஜை எதிரே வந்து அமர்ந்தான் நாகு.

மேஜையின் மீதிருந்த கிறுக்கல் அவன் கண்களைக் கவர்ந்தது. அதையே பார்த்தவாறு உட்கார்ந்திருந்தான். அந்தக் கிறுக்கலில் அவனுக்கு அவனுடைய தாயாரின் முகம் தெரிந்தது. கண்டிப்பான முகம். சற்றுக் கடுமையும் அதில் கலந்திருந்தது. அந்தக் கண்டிப்பும் கடுமையும் நாகுவிடம் மட்டும்தான் காட்டத் தெரிந்தது அவன் அம்மாவுக்கு. முதல் பிள்ளையிடமும் பெண்ணிடமும் பரிந்து பரிந்து அன்பைக் கொட்டிய அம்மா நாகுவைக் கண்டாலே கரித்துக் கொட்டுவாள். பிறக்கும்போதே அப்பனையும் விழுங்கிக் கொண்டு பிறந்தவன் என்று அவன் மேல் சீறி விழுவாள். அவன் பிறந்த அன்று தானா அப்பா மாரடைப்புக்குப் பலியாக வேண்டும்!

பாவம் அம்மா! கணவன் இருந்த நாட்களிலேயே நேரும் கூறுமாக இருந்தது கிடையாது. அவர் கண் மூடிய பிறகு கேட்க



உமாசந்திரன்—

வேண்டுமா? - எவ்வித ஆதரவும் இல்லாமல் மூன்று குழந்தைகளையும் வளர்த்துப் பெரியவர்களாக்கி ஒவ்வொருவரையும் ஒவ்வொரு விதத்தில் வாழ்வில் நிலைப்படுத்த அந்தத் தாயார் எப்படியெல்லாம் தன்னைத் தானே வருத்திக் கொண்டு ஓயாமல் உழைக்க வேண்டியிருந்தது! அந்த ஆயாசத்தால் ஏற்பட்ட ஆத்திரத்தை யெல்லாம் அவள் நாகு மீது தான் கொட்டித் தீர்ப்பாள். ஆனால் நாகு தாயாரின் கடு சொற்களைப் பொருட்படுத்துவது கிடையாது. பட்டுப்பட்டு அவனுக்குச் சுரணையே மரத்துப் போய்விட்டது போலும்! இப்போது இந்தக் கிறுக்கலில் அம்மாவின் முகத்தைக் காணும்போதுகூட அந்தப் பழைய நினைவுகள் அவனுக்குக் கசப்பாக இல்லை. மாறாக ஏதோ இனம் புரியாத தழுதழுப்பு.

ஒரு பெருமூச்சுடன் அந்தக் கிறுக்கலை ஒரு மெல்லிய காகிதத்தால் கலைத்துவிட்டுத் தாளைச் சமப்படுத்தினான் நாகு. மீண்டும் அவன் கை அவனையறியாமலே குண்டூசியால் கோலமிட ஆரம்பித்துவிட்டது. கிறுக்கல்கள் தாறுமாறாகச் சுழன்றன. எண்ணங்கள் ஓட ஓடக் கையும் ஓடிக் கொண்டிருந்தது.

அந்தக் கோலத்தில் நாகுவுக்கு என்னென்னவோ தெரிந்தன. முள்ளும் புதரும் மண்டிக் கிடந்த பாழ் மனையொன்று திடீரென்று புத்துயிர் பெறுகிறது. கழுதைகள் ஒதுங்கும் குட்டிச் சுவராகத் தூங்கி வழிந்துகொண்டிருந்த இடத்தில் பரபரவென்று ஜன நடமாட்டமும் மும்முரமான வேலைக்கான ஏற்பாடுகளும் தொடங்குகின்றன. கூச்சல்! இரைச்சல்! தூசியும் தும்பும் நிறைந்த புழுதிப் படலம். எல்லாம் ஓய்ந்து அடங்கியபோது மயன் மாளிகை போன்ற மாளிகை அவன் கண்ணெதிரே நின்றது. நாகஸ்வர இசை காதில் ஒலிக்கிறது. மாவிலைத் தோரணங்களும் மலர் மாலைகளும் திகழ விழாக் கோலம் பூண்டிருக்கிறது அந்த மாளிகை. யார் யாரோ வருகிறார்கள், போகிறார்கள். ஊருக்கே பெருமைச் சின்னமாக உருவாகியிருக்கும் மாளிகைக்குக் கிரகப் பிரவேசமாயிற்றே! கூட்டத்தோடு கூட்டமாக உள்ளே போகிறான், நாகு பதினைந்து வயதுப் பையனாக.

பெரிய ஹால். மழமழவென்று தந்தத்தால் இழைத்தது போன்ற சுவர்கள். அங்கங்கே அபூர்வமான ரவி வர்மா ஓவியங்கள் பெரிய அளவில் தங்கப் பிரேம் போட்டு மாட்டப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டே மோகினி ஓவியத்துக்கெதிரே வந்து நிற்கிறான் நாகு. அடர்ந்த சோலையின் குளுமையான சூழலில் தன்னந் தனியே எப்படி மகிழ்ச்சியே உருவாக ஊஞ்சலில் அமர்ந்து தன்னை மறந்து ஆடிக்கொண்டிருக்கிறாள் அந்த மோகினி! அவனுடைய அந்த ஆனந்தமயமான அழகில் சொக்கி நிற்கிறான் நாகு.

''உனக்கு இந்தப் படம் பிடிச்சிருக்கா?''— மழலை தவழும் இனிய குரலைக் கேட்டு நாகு திரும்பிப் பார்க்கிறான். பத்து வயதுச் சிறுமி. இவளும் ஒரு மோகினியேதானோ! பால் வடியும் அந்த முகம்... மென்மையான ரோஜா இதழ்களால் உருவாக்கப்பட்டதா அது!

''எனக்கும் இந்தப் படம் ரொம்பப் பிடிக்கும். இந்த மோகினி மாதிரியே எனக்கும் ஊஞ்சலாடணும்னு ஆசையா யிருக்கு. தாத்தாகிட்டே சொல்லி யிருக்கேன்...''

நாகு அவளை ஏதோ கேட்பதற்குள் அவளுடைய தாயார் அவளை அழைக்கும் குரல் கேட்கிறது — ''சாரு! சாரு!''

மறு கணம் சாரு அங்கே நிற்கவில்லை. ''அம்மா கூப்பிடறா. நான் வரேன்!'' என்று கூறிவிட்டு அங்கிருந்து விரைகிறாள்.

வீட்டுக்கு வீடு பாரதி

வீட்டுக்கு வீடு பாரதி என்ற திட்டத்தினைத் தோற்றுவித்து அதன் வெற்றிக்கு உழைத்து வந்துள்ள பாரதி இளைஞர் சங்கத் தலைவர் கே. ராமமூர்த்தி, செயலாளர் வி. எஸ். மணி. இவர்கள் வீட்டுக்கு வீடு பாரதி படத்தைத் திறந்து வைக்கும் முயற்சியில் ஈடுபட்டு அண்மையில் ஆயிரமாவது பாரதி படத்தைத் தொழிலதிபர் திரு என். மகாலிங்கம் வீட்டில் திரு ம. பொ. சி. அவர்களைக் கொண்டு திறந்து வைக்கச் செய்தனர்.

மோகினி ஓவியத்தையே பார்த்தவாறு நிற்கிறான் நாகு. திடீரென்று மோகினி உயிர் பெறுகிறாள். சோலை உயிர் பெறுகிறது. தென்றலில் அசைந்தாடுகிறது. ஊஞ்சலில் அமர்ந்து உல்லாசமாக ஆடிக் கொண்டிருக்கும் மோகினி, ரவி வர்மாவின் மோகினி இல்லை இப்போது. அவனுடைய உள்ளம் கவர்ந்த மோகினி சாரு! அவனுடைய விருப்பத்தைப் பூர்த்தி செய்து விட்டார் அவனுடைய தாத்தா. அந்தப் பூரிப்பில் அவனுடைய ரோஜா முகம் பன்மடங்கு சோபையுடன் திகழ்கிறது. களிப்பும் சிரிப்பும் ததும்ப வீசி வீசி ஆடிக் கொண்டிருக்கிறாள் சாரு.

டெலக்ஸ் பட பட வென்று அடித்துக் கொள்ள ஆரம்பித்தது. மெஷினுக்கு விரைந்த நாகு செய்தியை ஏற்கத் தயாரா யிருப்பதாகத் தகவல் கொடுத்ததும் செய்தி தொடர்ந்தது. அந்தச் செய்தி தனக்கே தான் இருக்கப் போகிறது என்று நாகு சற்றும் எதிர்பார்க்கவில்லை. டெல்லியிலிருந்த வர்த்தக நிறுவனம் ஒன்றில் நல்ல பதவியில் பணியாற்றி வந்த அவனுடைய அண்ணா சங்கரன் தான் டெலக்ஸ் மூலம் அந்த அவசரச் செய்தியை அனுப்பியிருந்தான். ''அம்மா ஒரு வாரமாகப் படுத்த படுக்கையாக இருக்கிறாள். இந்தத் தடவை அவள் பிழைத்து எழுந்திருக்க முடியும் என்று எனக்கு நம்பிக்கை இல்லை. மாலதிக்குத் தந்தி கொடுத்து வரவழைத்து விட்டேன். ராஞ்சியிலிருந்து அவள் நேற்றுத்தான் வந்தாள். பிரக்ஞை வரும்போதெல்லாம் அம்மா உன்னைப் பற்றித் தான் கேட்டுக் கொண்டிருக்கிறாள். ஆனால் நீ எப்படி வரமுடியும்? உனக்கு லீவு கிடைப்பது கஷ்டமாயிற்றே! நீ வருவதாக முடிவு செய்து லீவும் கிடைத்தால் எனக்குத் தகவல் கொடு. செலவுக்குப் பணம் தேவையாயிருந்தாலும் எனக்குத் தெரிவிக்கவும்...''

செய்தியைப் பெற்றுக் கொண்டதற்குரிய தகவலைக் கொடுத்து விட்டு மீண்டும் தன் இருக்கையில் வந்து அமர்ந்தான் நாகு. அவன் கை தன் போக்கில் குண்டூசியை எடுத்துத் தாளின் படலத்தில் கிறுக்க ஆரம்பித்தது. அவனது உள்ளத்தில் அலை மோதிய எண்ணங்களின் கிறுக்கல்கள். மரணப் படுக்கையில் அம்மா அவனை நினைத்துக் கொள்கிறாள்! ஏன் நினைத்துக் கொள்கிறாள்? வாழ்க்கை முழுதும் அவன் மீது பாசம் காட்டி அறியாத அம்மாவின் மனத்தில் இப்போது திடீரென்று இந்தப் பாசம் எப்படித் தலை தூக்கியது! எப்படி இருந்தாலென்ன? எப்பாடு பட்டாவது டில்லிக்குப் புறப்பட்டுப் போய் அம்மாவின் கடைசி விருப்பத்தை அவன் ஏன் பூர்த்தி செய்யக் கூடாது?

தாறுமாறான கிறுக்கல்களை மெல்லிய காகிதத்தால் சட்டென்று கலைத்துவிட்டுத் தாளினை மீண்டும் சமப்படுத்தினான் நாகு. எண்ணங்கள் எப்படித் தாறுமாறாக ஓடுகின்றன! மீண்டும் அவன் கை வேகமாக இயங்கியது. வெறி பிடித்தவன் போல் கிறுக்க ஆரம்பித்தான்.

பார்க்கப் பார்க்க அந்தக் கிறுக்கல்கள் சுழன்று சுழன்று ஒரு வடிவம் பெற முயல்கின்றன. எங்கோ தொலைவில் நுண்ணிய ஒளிப் புள்ளியாகத் தோன்றிய ஒன்று மெல்ல மெல்ல மேலெழுந்து சுடர் விடும் அழகு முகமாக அவன் கண்களுக்குத் தோன்றுகிறது. சாருதான்! ரோஜா இதழ்களில் புன்னகை தவழ, கனிவுடன் அவனைப் பார்க்கிறாள். சிறுமி சாருவாக அல்ல. யுவதி சாருவாக இப்போது அவன் முன் நிற்கிறாள். நாகு அவளைப் பார்த்தும் பாராதவன் போல் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைத்துத் தொட்டியில் கொட்டிக் கொண்டிருக்கிறான்.

''நாகு!''

''என்ன சாரு?''

''இந்த வேலை யெல்லாம் நீ ஏன் செய்ய வேண்டும்?''

''செய்யக் கூடாதா? வருஷக் கணக்காக அம்மா இங்கே செய்து கொண்டிருந்த வேலை தானே?''

''நல்ல வேளையாக அந்தக் காலமெல்லாம் மாறிவிட்டதே. உன் அண்ணா நல்ல வேலையில் இருக்கிறார். உன் அக்காவுக்கும் நல்ல இடத்தில் கல்யாணம் ஆகிவிட்டது...''

''அவர்கள் விஷயத்தில் அம்மா நினைத்தது நடந்து விட்டது. என் விஷயத்தில் அப்படி இல்லையே! எஸ். எஸ். எல். ஸி. கூட பாஸ் செய்யத் துப்பு இல்லை எனக்கு! தாசில்தார் உத்தியோகமா கிடைக்கும்? சமையல் வேலை கிடைத்தாலே அதிகம்!''

''இப்போது கூட ஒன்றும் குடி மூழ்கிப் போய்விடவில்லை நாகு. நீ மனம் வைத்தால் எப்படியாவது முன்னுக்கு வரலாம். ஏன், உன் அண்ணாவே உன்னை ஒரு நல்ல வேலையில் சேர்த்து விடலாமே!''

''அண்ணாவின் தயவுக்கு நான் காத்திருக்கவில்லை. அவன் செய்யவும் மாட்டான். நான் தான் அதிர்ஷ்டக் கட்டை ஆயிற்றே! குடும்பத்தில் நேர்ந்த கஷ்டங்களுக்கெல்லாம் நான்தானே காரணம்!''

VOLTAS

இப்போது!


உண்மையிலேயே ஆட்டோமாடிக் டி:ப்ராஸ்டிங் வசதி உள்ள

வோல்டாஸ் ஒபல் 160

ஆட்டோ-D ஆப்ஷன் கொண்டது.


முதல் தரத்தில் முதலீடு செய்க

ஆட்டோ-D அளிக்கும் பல்வேறு பயன்கள் :




பட்டன் அழுக்க வேண்டிய அவசியமில்லை!

இந்த ரெ:ப்ரிஜிரேடரில் உள்ள ஸ்விட்ச் இரவு தோறும் தானாகவே அணைந்து திரும்பவும் இயங்குகிறது. அதன் விளைவு, தானாகவே டி:ப்ராஸ்ட் செய்து கொள்கிறது.




ட்ரேயை காலி செய்யத் தேவையில்லை!

இதில் தண்ணீரை ஆவியாக மாற்றும் ஒரு இணையற்ற ஆட்டோமாடிக் வசதி உள்ளிணைக்கப்பட்டுள்ளது. அது உங்கள் வேலையை எளிதாக்கி, நீங்கள் ஆச்சரியிக்கும் வண்ணம் தண்ணீரை வெளியேற்றி விடுகிறது!



குறைந்த மின்சார கட்டணம்!

தண்ணீரை வெளியேற்றும் ஆட்டோமாடிக் வசதி உங்கள் வேலையை எளிதாக்குவதோடல்லாமல் அதிகபட்சமான குளிர்ச்சியையும் பெற வழி செய்கிறது. அதன் பயனாக மின்சார கட்டணம் மாதந்தோறும் குறைகிறது.



வோல்டாஸ் ஒபல் 160—ஆட்டோ-D ஆப்ஷன் இணைந்த ஒரே மீடியம் சைஸ் ரெ:ப்ரிஜரேடர். இன்றே உங்கள் விற்பனையாளரிடம் சென்று பார்வையிடுங்கள்.

வழங்குவோர்:
வோல்டாஸ்
குளுமை தருவதையே குறிக்கோளாகக் கொண்டவர்கள்.

அங்கீகாரம் பெற்ற வோல்டாஸ் விற்பனையாளர்களிடம் கிடைக்கிறது—
அவர்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.

வோல்டாஸ் லிமிடெட்

பம்பாய் • கல்கத்தா • புது தில்லி • சென்னை • பெங்களூர் • லக்னோ • ஜம்ஷெட்பூர் • அஹமதாபாத் • சிகந்தராபாத் • கொச்சி • கான்பூர்

''உன் அம்மா எப்போதாவது ஆத்திரத்தில் பேசும் வார்த்தைகளை வைத்துக்கொண்டு மனம் நொந்து கொள்ளாதே நாகு. உனக்கும் நல்ல காலம் வராமல் போகாது.''

''என் அதிர்ஷ்டம்தான் தெரிந்திருக்கிறதே! அது போகிறது. நீ பம்பாயிலிருந்து நேற்றுத்தான் வந்தாய், இல்லையா? மாப்பிள்ளை ஸ்டேட்ஸுக்குப் போயிருக்கிறாராமே! அவர் வரும் வரை இங்கேதான் இருப்பாயா?''

''அவர் திரும்பி வர இரண்டு மூன்று மாதங்கள் ஆகும். ஆனால் நான் அதற்கு மேலும் இங்கேயே இருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.''

அந்த வார்த்தைகளின் அர்த்தத்தைப் புரிந்து கொள்ளாமலே, நாகு, ''அப்படியா?' என்று சாதாரணமாகக் கேட்டுவிட்டு மீண்டும் தண்ணீரை இறைத்துக் கொட்டுகிறான்.

''நாகு...''

''சொல்லு சாரு.''

''உன் அண்ணா அம்மாவைத் தன்னிடமே வந்து விடும்படி சொல்லிக் கொண்டிருக்கிறாரே! அங்கே போக உன் அம்மாவுக்கு இஷ்டமில்லையோ?''

''இஷ்டமில்லாமல் என்ன? ஆனால் அம்மா எதற்காக இன்னும் இங்கேயே இருக்கிறாள் தெரியுமா?''

''எதற்கு?''

''எனக்கு ஒரு கால் கட்டுப் போட்ட பிறகுதான் இங்கே விருந்து போவாளாம்! பெண்ணும் பார்த்து வைத்திருக்கிறாள்!''

சாரு சிரிக்கிறாள். ''அப்படியா! ரொம்பச் சந்தோஷம் நாகு!''

நாகுவும் வறண்ட முறையில் சிரிக்கிறான்.

''அம்மா பார்த்திருக்கும் பெண் யார் தெரியுமா? வக்கீல் குமாஸ்தா வேதமூர்த்தியின் பெண் அலமு.''

''அட பாவமே! அந்தப் பெண்ணுக்கு மூளை சரியில்லை யென்று சொல்வார்களே! அடிக்கடி ஃபிட்ஸ் வருமாம்!''

''இந்த அதிர்ஷ்டக்கட்டைக்கு இதுவே போதும் என்று அம்மா நினைக்கிறாளே!''

''நீ இதற்குச் சம்மதிக்கவேகூடாது நாகு!''

''சம்மதிக்கவில்லை என்றுதான் அம்மாவுக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டு வருகிறது. ஒவ்வொரு நாளும் நான் வாங்கிக் கொள்ளும் அர்ச்சனைக்குக் கணக்கே கிடையாது. 'நீ பார்க்கும் உத்தியோகத்துக்கு வேறு எந்த மோகினி உனக்குக் கிடைக்கப் போகிறாள்?' என்று கரித்துக் கொட்டுகிறாள்.''

சாரு பெருமூச்செறிகிறாள்.

''நாகு! மனம் சோர்ந்து போகாதே. நான் சொல்வதைக் கேள். எப்படியாவது இரண்டு மூன்று மாதம் பாடுபட்டு டைப்பிங் மட்டும் கற்றுக்கொள். அவர் ஸ்டேட்ஸிலிருந்து திரும்பி வந்ததும் உன்னை ஏதாவது ஆபீஸ் வேலையில் சேர்த்துவிடச் சொல்கிறேன்.''

''நீ சொன்னால் தட்டுவேனா சாரு? அதையும் செய்து பார்க்கிறேன்.''

டெலக்ஸ் யந்திரம் படபடவென்று அடித்துக்கொள்ள ஆரம்பித்தது. நாகு மெஷினருகே விரைந்து சென்று உட்கார்ந்தான். பம்பாய் ஆபீஸிலிருந்து உப்பு சப்பில்லாத ஒரு செய்தி. மெஷின் அடித்து ஓய்ந்ததும் செய்தியைக் கிழித்து டிரேயில் போட்டான்.

மறுபடியும் மேஜைக்கு வந்த நாகு மீண்டும் தூசிப் படலத்தில் கிறுக்க ஆரம்பித்தான். கிறுக்கக் கிறுக்க, கடந்த காலத்தின் எத்தனையோ நினைவுகள் அவனுடைய நெஞ்சத் திரையில் சுழன்றன. அம்மாவின் கட்டாயத்தை மீறத் துணிவில்லாமல் எங்கே அலமுவின் பந்தத்துக்கு ஆட்பட்டு விடுவோமோ என்ற அச்சத்தினால் அவன் யாரிடமும் சொல்லிக் கொள்ளாமல் பட்டணத்துக்கு ஓடிப்போனது, பட்டணத்தில் ஏதோ ஒரு ஹோட்டலில் வேலை செய்து கொண்டே டைப்ரைட்டிங் வகுப்பில் சேர்ந்து கற்றுக் கொண்டது, ஓரளவு தேர்ச்சி யடைந்ததும் அந்த நல்ல செய்தியைச் சாருவுக்குத் தெரிவிக்கும் ஆவலுடன் அவன் ஊருக்குத் திரும்பியது ஆகிய நிகழ்ச்சிகளெல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக அவன் மனத்தில் ஓடின. வேகமாக இயங்கிக் கொண்டிருந்த அவனுடைய கை சட்டென்று தயங்கி நின்றது. நெஞ்சில் ஏதோ மேலெழுந்து அடைப்பது போன்ற உணர்ச்சி! கிறுக்கல் கோலம் அவன் கண்ணெதிரே எத்தகைய சோகச் சித்திரமாக விரிந்திருந்தது!

சாரு தாய்மைப் பேற்றை எதிர்நோக்கித்தான் பிறந்த வீட்டிலேயே தங்கியிருந்தாள் என்ற விஷயம் ஊருக்குத் திரும்பிய பிறகுதான் அவனுக்குப் புரிந்தது. ஆனால் தாய்மைப் பேறு அவளுடைய உயிரையே குடித்துவிடுமென்று யாருமே எதிர்பார்க்கவில்லையே! சிறிய ஜீவன் பிறக்கும்போதே பெரிய ஜீவனைப் பலிகொண்டு விட்டதே!

அழுவதற்குக் கூட முடியாமல் பொறிகலங்கி நின்றிருந்த அவன் தோளில் யாரோ பரிவுடன் கை வைக்கிறார்கள் — சாருவின் கணவன் தியாகராஜன்! ''உங்களைப் பற்றிச் சாரு என்னிடம் சொல்லிவிட்டுத்தான் கண் மூடினாள். அவளுக்கு வாக்குக் கொடுத்திருக்கிறேன். அதைக் கட்டாயம் காப்பாற்றுவேன்!''...

மீண்டும் டெலெக்ஸ் யந்திரத்தின் ஒலி. விரைந்து அதனருகே சென்ற நாகு, அதில் உருவாகி வெளிவந்த செய்தியைப் படித்துப் பிரமை தட்டினாற்போல் நின்றான். அண்ணா சங்கரன் அவனுக்கு அனுப்பிய சுருக்கமான செய்தி அது. ''நீ இனிமேல் வந்தும் பிரயோசனமில்லை. அம்மா போய்ச் சேர்ந்து விட்டாள். கடைசி நிமிஷத்திலும் அவளுக்கு உன் நினைவுதான்! 'நாகுவுக்குக் கல்யாணம் செய்து பார்க்காமல் போகிறேனே!' என்ற வார்த்தைகளோடுதான் கண்ணை மூடினாள்.''

நெஞ்சில் பொங்கிய உத்வேகத்தைக் கை ஓயும்வரை கிறுக்கித் தீர்க்க வேண்டுமென்ற துடிப்புடன் மேஜைப் பக்கம் திரும்பினான் நாகு. ஆனால் அங்கே பெருமாள் செய்து கொண்டிருந்த வேலையைக் கண்டதும் 'அட பாவி!' என்று திகைப்புடன் கூவிவிட்டான்.

''டஸ்டர் சாங்ஷன் ஆயிடுச்சு சார். அந்த சந்தோஷத்திலே நானே உங்கள் மேசையை நல்லாத் துடைச்சிட்டேன்!'' என்று பெருமிதத்துடன் கூறியவாறு மீண்டும் ஒரு முறை மேஜையைத் தூசி போகத் தட்டிவிட்டு டஸ்டரை மேஜை டிராயருக்குள் வைத்தான் பெருமாள்.



தமிழாக்கம்: ரா. வீழிநாதன்

7. 'கடன் கொடுக்காதீர்கள்!'

நான் நிசிகாந்தனுக்கு என் வீட்டை விரலால் சுட்டிக் காட்டி, ''அந்த வீட்டிலே இரண்டாவது மாடியிலே இருக்கிறேன். இடது புறம் கதவு!'' என்றேன்.

''ரொம்ப நல்ல வீடு, சார்! சரயுவுக்குக் கூடக் கல்கத்தாவிலே இப்படி ஒரு நல்ல வீடு கட்ட வேண்டும் என்று கொள்ளை ஆசை. நன்றாகச் சாப்பிட வேண்டும்; நன்றாக உடுத்த வேண்டும், நன்றாக வாழ வேண்டும். நல்ல பெண்ணாக ஊரிலே வளைய வர வேண்டும் என்றெல்லாம் மனக் கோட்டைகள் கட்டுவாள்! ஆனால் அதெல்லாம் நடக்கவில்லை. என்னைப் போன்ற ஒரு குடிகாரன் கையிலே மாட்டிக் கொண்டு கஷ்டப்படுவதைத்தான் அவள் கண்டாள்!'' என்றான் நிசிகாந்தன்.

இத்தனை நேரமும் ஆவலை அடக்கிக் கொண்டிருந்த நான், அவனாகவே சரயுவின் பெயரை எடுக்கவே, பொறுமை இழந்து, ''உன்னிடம் ஒன்று கேட்க விரும்புகிறேன், நிசிகாந்த்!'' என்றேன்.

''கேளுங்கள், சார்! தாராளமாகக் கேளுங்கள்! தயக்கம் எதற்கு?'' என்றான்.

''ஆமாம், உன்னிடம் நிறைய ரூபாய் இருக்கிறது என்று வைத்துக் கொள், உன் மனைவி உன்னிடம் மீண்டும் திரும்பி வந்து விடுவாளா?''

''ஏன், சார்! எனக்கு நீங்கள் பணம் தருவீர்களா, சார்?''

''நான் பணம் தருகிறேன், தரவில்லை; அதைப் பற்றி உனக்கு என்ன? கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லு!''

நிசிகாந்தன் ஏதோ சற்று யோசித்தான். பிறகு, ''நீங்கள் எவ்வளவு ரூபாய் சார், தர முடியும்? நூறு, இருநூறு என்ன? ஐந்நூறு ரூபாய் கொடுத்தால் கூடப் பிரயோஜனம் இல்லை. சரயு எதி:பார்க்கிறது ரொம்ப ரொம்ப அதிகம். அதையும் தவிர, நானோ ஒரு குடிகாரன். நீங்கள் எத்தனை தான் வாரிக் கொடுத்தாலும் அவ்வளவையும் நான் சாராயத்திலே வாரி விட்டு விடுவேன். கையிலே எதுவுமே நிற்காது. யாரோ ஒரு ஜோஸியனிடம் கையைக் காட்டிய பொழுது, 'லட்சம் லட்சமாக உன் கையிலே ரூபாயை வைத்தாலும் அது தங்காது' என்று சொல்லி விட்டான். அதனால் நீங்கள் என்ன கொடுப்பதாயிருந்தாலும் சரயுவின் கையிலே கொடுப்பது தான் நல்லது. அவள் அதை ஜாக்கிரதையாக வைத்துக் கொண்டு நன்றாகக் குடும்பம் நடத்துவாள்!'' என்றான்.

''நல்ல வேலை! அவள் இப்பொழுது இங்கே இல்லை. நான் ஒரு பேச்சுக்குக் கேட்டேனே ஒழிய, உங்கள் குடும்பத்துக்கு ஆகக் கூடிய செலவை ஏற்றுக் கொள்வதாகக் கூறவில்லை. அத்தனை பண வசதி எனக்கு இல்லை!''

''அப்படியானால் ஒரு காரியம் செய்யுங்கள் சார்!'' நிசிகாந்தன் என்னை இடைமறித்தான்.

''என்ன?''

''பின்னாலே உங்களுக்கு வசதிப்பட்ட பொழுது உங்களால் முடிந்ததைச் சரயுவின் கையிலே கொடுங்கள், சார்! ஆனால் இப்பொழுது எனக்குக் கொஞ்ச ரூபாய் கொடுத்தீர்களானால் நான் பிழைத்துக் கொள்ளுவேன்! இந்தத் தெருச் சுற்றிப் பிழைப்பிலிருந்து தப்புவேன்!' என்றான் நிசிகாந்தன்.

அதைக் கேட்டு நான் வாய் பேசா மௌனியாக நின்றேன். அதைக் கண்ணுற்ற நிசிகாந்தன், ''நான் உங்கள் பணத்தை எடுத்துக் கொண்டு எங்கேயாவது ஓடி விடுவேனோ என்று நினைக்காதீர்கள், சார்! எப்படியாவது உங்கள் பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடுவேன், சார்!'' என்றான்.

உலகத்தில் தான் எத்தனை விந்தை மனிதர்கள் வாழ்கிறார்கள்? — பல சமயம் நான் நினைத்துப் பார்த்ததுண்டு.

ஆமாம், இந்த நிசிகாந்தன் என்னை என்ன நினைக்கிறான்? ஒன்றும் தெரியாத முட்டாள் என்றா? போயும் போயும் இவனைப் போன்ற நடத்தை கெட்ட குடிகாரனுக்கு மடத்தனமாக நான் உதவி செய்வேனா? ஆனாலும் நிசிகாந்தனைப் பற்றி நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் விரும்பினேன். இவனைப்போன்ற பாத்திரங்களையும், இதுபோன்ற வாழ்வையும் கொண்டு தானே இந்த உலகமே உருவாகியிருக்கிறது? வழியிலே, ரெயிலிலே, பஸ்ஸிலே, டிராமிலே, விமானக்கூடத்திலே, ஆற்றங்கரையிலே எங்கு பார்த்தாலும் இவனைப் போன்ற மனிதர்கள் தான் எப்படியெல்லாம் சிதறிக்கிடக்கிறார்கள்? இவர்களுக்கு வாக்குரிமை உண்டு. இவர்களுடைய வாக்குகளினாலும் ஒரு நாட்டின் அல்லது ஒரு ராஜ்யத்தின் தலைவிதி நிர்ணயிக்கப்படுகிறது! அதனால் இவர்களை அவமதித்துவிட முடியாது; கூடவும் கூடாது.

அதனால், "எத்தனை ரூபாய் இருந்தால் உன் முடை அடையும்?" என்று கேட்டேன்.

"மாத வாடகை இருபது ரூபாய் என்ற கணக்குப்படி பார்த்தால், வாடகைக்கு ஒரு நூற்றிருபது ரூபாய் தேவைப்படும். ஆறு மாத பாக்கியில்லையா? அப்புறம் ஹோட்டலில் சாப்பிடுகிறேன். அதற்கு ஐம்பது ரூபாய் கொடுக்கணும். அப்புறம் தேநீர்க் கடைக்காரருக்கு இருபது ரூபாய் நிலுவை நிற்கிறது. இப்படி அப்படிக் கூட்டிப் பார்த்தால் மொத்தம் இருநூறு ரூபாய் இருந்தால் தற்பொழுதுக்கு எப்படியோ சமாளித்துக் கொள்ளலாம்!" என்றான் நிசிகாந்தன்.

"சரி, என்றைக்காவது ஒரு நாள் காலையிலே வந்து பாரு!" என்றேன் நான்.

"எப்பொழுது வரட்டும், சார்! எத்தனை மணிக்கு வரட்டும், சார்!" என்று பொறுமை இழந்து கேட்டான் நிசிகாந்தன்.

"இரண்டு மூன்று நாட்கள் கழித்து வா!" என்று கூறிவிட்டு நான் வீட்டுக்குப் போய் விட்டேன்.

அதற்குப் பின் இருபத்து நான்கு மணி நேரம் கூட ஆகவில்லை. பொழுது புலர்ந்ததும் புலராததுமாக யாரோ கதவைத் தட்டினார்கள்.

சாணுபி கதவைத் திறந்தான்.

வந்தவர் ஒரு கிழவர். "நீங்கள் யார்? யாரைப் பார்க்க வேண்டும்?" என்று கேட்டான் சாணுபி.

நான் எல்லாவற்றையும் மௌனமாகக் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். ஆனால் நிசிகாந்தன் குடியிருக்கும் வீட்டுச் சொந்தக்காரர் என்னைப் பார்க்க ஏன் வரவேண்டும் என்பதுதான் எனக்குப் புரியாத புதிராக இருந்தது.

கிழவர் சாணுபியிடம் கூறிக் கொண்டிருந்தார்:

"மல்லிக் சாஹெப் வந்திருக்கிறார். ஒரு தடவை உங்களைப் பார்த்து விட்டுப் போக விரும்புகிறார் என்று உன் ஐயாவிடம் போய்ச் சொல்லு."


அப்புறம் என் அறைக்கு வந்தார். "நான் இப்படித் திடுதிப்பென்று உங்களைப் பார்க்க வந்தது உங்களுக்கு வியப்பை அளிக்கலாம். ஆனால் என்னால் வராமல் இருக்க முடியவில்லை. அன்று நிசிகாந்தனுக்கு எதிரில் நான் மனம் விட்டு எதையும் உங்களுக்குக் கூற முடியவில்லை, பாருங்கள்!" என்றார்.

"உட்காருங்கள்!" என்றேன்.

"ஆமாம்; உட்கார்ந்துதான் பேச வேண்டும். ஏனென்றால் சொல்ல வேண்டியது நிறைய இருக்கிறது!" என்றவாறே மல்லிக் சாஹெப் எதிர்த்தாற்போலிருந்த ஆசனத்தில் அமர்ந்தார்.

"சொல்லுங்கள், நான் கேட்கத் தயார்!"

"ஆமாம், அந்த உதவாக்கரைப் பையனோடு உங்களுக்கு எப்படித் தொடர்பு ஏற்பட்டது? மட்டம் என்றால் அவனைப் போன்ற மட்டமான ஆசாமி ஈரேழ் பதினான்கு உலகத்தில் தேடினாலும் கிடைக்கவே மாட்டானே? அவனை நீங்கள் சரியாகத் தெரிந்து கொண்



டிருந்தால் முகம் கொடுத்துப் பேசக்கூடப் பேசமாட்டீர்கள். அவன் நிழல் பட்டாலே பாவம்!" என்றார் மல்லிக் சாஹெப்.

"அதெப்படி?"

"அதைச் சொல்லத்தானே வந்திருக்கிறேன்! ஆமாம், எனக்கு உங்கள் முகவரி எப்படித் தெரிந்தது என்றுகூட நீங்கள் கேட்கவில்லையே!"

"அதைத்தான் இப்பொழுது யோசித்துக் கொண்டிருந்தேன். ஏனென்றால் அன்றைக்கு முன்னால் நான் உங்களை எங்கேயும் பார்த்ததில்லை; ஒருவரை யொருவர் நாம் அறிந்து கொண்டதும் இல்லை!"

"அந்த உருப்படாப் பயல் நிசிகாந்தன் தான் சொன்னான். நீங்கள் அவனுக்கு இருநூறு ரூபாய் கடன் தருவதாகச் சொல்லியிருக்கிறீர்களாமே!" என்று கேட்டார் மல்லிக் சாஹெப்.

''அவன் என்னிடம் பணம் கேட்டான். அதனாலே இங்கே வரச் சொல்லி யிருக்கிறேன்.''


''நிசமாகவே நீங்கள் அவனுக்கு ரூபாய் கொடுக்கப் போகிறீர்களா?''

''நிசமாகவே அவனுக்குத் தேவையாக இருக்கிறது. அவன் வாடகை கொடுக்க வில்லை என்றால் ஒரு நாள் நீங்கள் அவனை வீட்டை விட்டு வெளியேற்றி விடுவீர்கள். அப்புறம் அவன் எங்கே போவான்? அவனுக்கு வேறு போக்கிடமே இல்லையே அதனால்...!'' என்றேன்.

''அப்படியா சமாசாரம்? அதனால்தான் அவன் நேற்று அவ்வளவு வீருப்பாகப் பேசினானா? என்னை எடுத்தெறிந்து பேசிவிட்டான், சார்! 'நீங்கள் அவனுக்கு ரொம்ப ரொம்பப் பழைய நண்பராம்; பால்யத் தோழராம். நீங்கள் இரண்டு பேரும் ஒரே பள்ளியில் ஒரே வகுப்பில் படித்தீர்களாம்! வேண்டுமானால் அவரையே போய்க் கேட்டுக்கொள்!'' என்று கூறி உங்கள் முகவரியைக் கொடுத்தான்!''

''அவனுக்கு நான் பணம் கொடுத்தால் உங்களுக்கு லாபம்தானே? உங்கள் வாடகைப் பணம் உங்களுக்குக் கிடைத்துவிடும் இல்லையா?'' என்றேன்.

''நீங்கள் என்ன பைத்தியமா?'' மல்லிக் சாஹப் கேலியாக நகைத்துக் கேட்டார். ''சார், நீங்களோ பெரிய எழுத்தாளர். நானோ அதிகம் படிக்க எழுதத் தெரியாதவன். உண்மையைக் கேட்டால் புத்தகம்-கித்தகம் புரட்டுவதற்கே எனக்குப் பொழுது கிடைப்பதில்லை. நான் உடலை வாட்டி உழைத்துச் சாப்பிட வேண்டியிருக்கிறது. ஆனால் இதிலே வேடிக்கை என்னவென்றால், நீங்கள் ஓர் எழுத்தாளரா யிருந்தும், உங்களாலே இந்த ஸ்ரீகாந்தனைப் புரிந்து கொள்ள முடிய வில்லையே! நீங்கள் கொடுக்கிற ரூபாயைக்



"போர்ன்விடா சாப்பிடு, அம்மா.
... அது உனக்கு நல்லது."



"ரொம்ப ருசியாயும் இருக்கும்!"



இந்திய புதிய அமைச்சர் டாக்டர் சுந்தர் ஒரு பெரிய வங்காளி எழுத்தாளர். நாவல்கள் சிறுகதைகள் எழுதியிருக்கிறார். ஒரு நாவல் சினிமாப் படமாகிக் கொண்டு வருகிறது. - பாபு - ஹிந்துஸ்தான் டைம்ஸ்

◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇◇

கொண்டு அவன் வாடகையைக் கொடுத்துக் கணக்கைத் தீர்ப்பான் என்று எதிர்பார்க்கிறீர்களா?''

''வாடகைக்காகத்தானே அவன் என்னைப் பணம் கேட்டான்? நான் கொடுக்கிற பணத்தைக் கொண்டு வீட்டு வாடகை, சாப்பாட்டுக் கடன், தேநீர்ப் பாக்கி — இதையெல்லாம் தீர்க்கப் போவதாகத்தானே சொன்னான்?''

''நீங்களும் அவன் பேச்சை அப்படியே வேத வாக்காக நம்பிவிட்டீர்கள். இல்லையா? அவன் அவ்வளவுக்கு நல்லவனாயிருந்தால், இந்தக் கலியுகம் ஏன் சார் இருக்கப் போகிறது? நானும் கடந்த ஆறு மாதங்களாக அவனைப் பார்த்துக் கொண்டிருக்கிறேன். தன் மனைவியைக் கொண்டு அவன் நிறையப் பணம் பண்ணினான். நான் கிழவன். அவன் தன் மனைவியை என்னையுமே மயக்குமாறு தூண்டினான், சார்! அந்த அசிங்கத்தை நான் என்னவென்று சொல்லுவேன்? அதை யெல்லாம் சொல்லுவதற்கே எனக்கு வெட்கமாக இருக்கிறது, சார்!'' என்றார் மல்லிக் சாஹப்.

''அவன் மனைவி எங்கே போய்விட்டாள்?'' என்று நான் கேட்டேன்.

''அவள் இப்பொழுது யாரோ பெரிய காப்டனைப் பிடித்துக் கொண்டிருக்கிறாள்!'' என்றார் மல்லிக் சாஹப்.

''அப்படியா?''

''ஏன், ஸ்வாமி! இந்தக் கல்கத்தா நகரத்திலே பணக்காரர்களுக்கு என்ன, குறைச்சலா? நிசிகாந்தன் என்ன என்ன வேடிக்கைகளெல்லாம் செய்யவில்லை? அத்தனையும் நீங்கள் கேட்பீர்களானால் அப்படியே அதிர்ச்சியுற்றுப் போவீர்கள். இங்கே அவன் எத்தனையோ வீடுகளில் வாடகைக்கு இருந்திருக்கிறான். ஒவ்வொரு வீட்டிலேயும் வீட்டுக்காரனை மோசம் செய்து விட்டு ஓடியிருக்கிறான். இத்தனைக்கும் அவன் மனைவிதான் அவனுக்கு மூலதனம். அவளை வைத்து வியாபாரம் செய்துதான் அவன் வாழ்க்கையே ஓடிக் கொண்டிருக்கிறது. இந்த விஷயங்கள் எல்லாம் எனக்கு முன்னால் தெரியவில்லை. பாகிஸ்தானிலிருந்து அகதியாகக் கல்கத்தா வந்திருப்பதாகவும், வெய்யில், மழைக்கு ஒதுங்க ஒரு குடிசையாவது வேண்டும் என்றும் கெஞ்சினான். அவன் மனைவியின் நிலையைப் பார்க்கிறபொழுது எனக்குப் பரிதாபமாக இருந்தது. அதனாலே குறைந்த வாடகைக்கு அவனைக் குடி வைத்தேன்!''

''என்ன ஆனாலும் உங்களுக்கு உங்கள் வாடகைப் பணம் கிடைத்து விட வேண்டும் இல்லையா? அப்படிக் கிடைக்கவில்லை என்றால், நீங்கள்தான் சும்மா விட்டு விடுவீர்களா? என்றைக்காவது ஒரு நாள் அவன் பெயரில் வழக்குத் தொடுத்து விடுவீர்கள். அப்புறம் என்ன ஆகும்?'' என்று கேட்டேன்.

''ஸ்வாமி! எனக்கு இந்த வழக்கு-விவகாரத்தைக் கண்டாலே பிடிக்காது. நான் அந்தப் பக்கம் தலை வைத்துக்கூடப் படுக்க மாட்டேன். வழக்கறிஞர், குமாஸ்தா, பேஷ்கார் — இவர்களிடம் போய் மாட்டிக்கொண்டால், எனக்கு இருக்கிற வீடு வாசல், சொத்து சுதந்திரம் எல்லாமே அழிந்து போய்விடும். அதனாலே அந்த வழிக்கெல்லாம் நான் போக மாட்டேன். நான் ஆசைப்படுகிறதெல்லாம் என்னவென்றால், அவன் என் வீட்டை நல்ல தனமாகக் காலி செய்து கொடுத்துவிட்டுப் போனால் போதும். முரட்டுப் பசுவைக் கொட்டிலில் கட்டிக் கொண்டு மார் அடிக்கிறதைக் காட்டிலும் அந்த மாட்டுக் கொட்டில் காலியாகவே இருந்து விடுவது நல்லது அல்லவா? அதனால் எனக்கு இவனைப் போன்ற வாடகைக்காரர்களின் சங்காத்தியம் வேண்டவே வேண்டாம்!'' என்றார் மல்லிக் சாஹப்.

''அது சரி, அவன் மனைவி இப்பொழுது எங்கே இருக்கிறாள்? அதை நீங்கள் சொல்லவில்லையே! அவள் நிசிகாந்தனை விட்டுப் போய் விட்டாளா?'' என்று கேட்டேன் நான்.

''விட்டு விட்டு எப்படிப் போவாள்? நிசிகாந்தன்தானே அவளைக் கொண்டு போய் அந்த ஆளிடம் வைத்திருக்கிறான்? அங்கே நன்றாகப் பணம் கறந்து விடலாம் என்று எண்ணினான். ஆனால் எண்ணியபடி காரியம் நிறைவேறவில்லை. அவன் மனைவியின் பெயர் சரயு. இப்பொழுதெல்லாம் அவளும் பலே கெட்டிக்காரியாகி விட்டாள். இந்த மாதிரி குடிகாரக் கணவனைக் கட்டிக்கொண்டு ஒருத்தி எத்தனை நாள்தான் குப்பை கொட்ட முடியும்? பொறுமை இழந்து போன அவள் இப்பொழுது நிசிகாந்தனுக்குக் கால் காசு கூடக் கொடுக்கிறதில்லை!''


''ஏன் காசு கொடுக்கிறதில்லை?''

''நான் எந்தக் காரணத்துக்காக உங்களைப் பணம் கொடுக்க வேண்டாம் என்று தடுக்கிறேனோ, அதே காரணத்துக்காகத்தான். பணம் காசு கொடுத்தால் அது நிசிகாந்தனிடம் நிற்காது. எல்லாம் சாராயம் குடிப்பதில் செலவழிந்துவிடும். முன்பெல்லாம் அவள் நிறையப் பணம் கொடுத்து வந்தாள். உயிருக்கு உயிராக அவனுக்குப் பணிவிடை செய்து வந்தாள். தான் பசி பட்டினி கிடந்தாவது, நிசிகாந்தனுக்குக் குடிக்கக்காக கொடுத்து வந்தாள். அவன் இன்பத்தைத் தன் இன்பமாக எண்ணி வந்தாள். என்றாலும் மனிதனின் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு அல்லவா? அதனாலே, அவள் இப்பொழுதெல்லாம் அவனைத் துளிக் கூடக் கவனிப்பதில்லை. 'நிசிகாந்தன் திருந்த மாட்டான். உயிர் போனாலும் சாராயம் குடிப்பதை நிறுத்த மாட்டான்' என்பதை அவள் நன்றாகப் புரிந்து கொண்டு விட்டாள். நாய் வாலை நிமிர்த்த முடியாது என்பதைத் தெரிந்து கொண்டு விட்டாள்!'' என்றார் மல்லிக் சாஹப். சுசப்போடு.

(தொடரும்)

அத்தியாயம் 21

உறுதி இறுதியானது!



கண்ணதாசன்

சேரமான் இதை எதிர்பார்க்கவில்லை.

'ராஜசேகர ஸ்வாமியின் நாடகம் பூஜியாளுவைக் கப்பலேற்றியதோடு சரி,' என்றுதான் அவர் நினைத்தார்.

அதிலும், 'தந்தையின் மரணத்துக்குப் பிறகு, பாண்டிய பூபதியாகப் பட்டம் சூட்டிக் கொண்டிருந்த சேரமான் சீர்வல்லபன், மீண்டும் ராஜசேகர சுவாமியாக வரக்கூடும்' என்று அவர் கனவிலும் கருதியதில்லை.

ஆயின், இப்போது அவர் மாறுவேடத்தில் வரவேண்டிய அவசியம் என்ன? மற்றும் ஒரு பூர்வ ஜென்மக் கதைக்கு ஒத்திகையா?

இருக்க முடியாது.

பழைய நாடகம்தான் புதுப்பிக்கப் படுகிறது என்றால், நம்பூதிரிகள் சபைக்கு அவர் வரவேண்டியதில்லை. நேரடியாக ஏதேனும் ஒரு வேடத்தில் வந்திருக்கக் கூடும்.

சேரமானுக்கு ஓரளவு விவரம் புரிந்தது.

திருவஞ்சைக்களத்து மக்கள் தன்னை அடையாளம் கண்டுகொள்ளாமல் இருப்பதற்காகவே சீர்வல்லபன் மாறுவேடம் தரித்திருக்கிறார். அதே நேரத்தில் பரிவாரங்களோடும் வந்திருக்கிறார்.

சபைக்குள்ளே நுழைந்து பார்க்க வேண்டும் போல் அவரது மனம் அடித்துக்கொண்டது.

'தம் ஆண்டி வேஷத்தைக் கலைந்து விட்டு, அரசன் என்ற முறையிலேயே உள்ளே நுழைந்தால் என்ன?' என்று ஒரு கணம் யோசித்தார்.

'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்பது போல், நாமும் முட்டாள்தனமாக ஒரு கணக்குப் போட்டு இருமே' என்று தம்மைத் தாமே தேற்றிக் கொண்டார்.

வலை பயங்கரமாகப் பின்னப்பட்டிருப்பது போல் அவருக்குத் தோன்றியது.

அசையாமல் தம் சீடர்களோடு அங்கேயே நின்று யோசித்த அவர், மற்றும் ஓர் ஆரவாரத்தைக் கேட்டார்.

இது என்ன ஆரவாரம்?

குதிரைகளின் குளம்படி ஓசை.

ரதங்கள் வருகின்ற சத்தம்.

ஒரு ரதத்தில் யாரோ இனம் தெரியாத ஒருவர்.

அவரையும் நாராயண நம்பூதிரி வெளியே வந்து ஆரத் தழுவி அழைத்துக்கொண்டு போனார்.

நம்பூதிரிகள் சபை என்ன மர்ம மாளிகையாக மாறிவிட்டதா?

சேரமானுக்கு அங்கே நிற்கவே பிடிக்கவில்லை.

தம் சீடர்களை அழைத்துக் கொண்டு நேரே அரண்மனையை நோக்கி நடந்தார்.

சித்தப் பிரமை பிடித்தவர் போல் வந்த அவரை, பத்மாவதி, பூஜியாளு, சலீமா ஆகிய மூவருமே வரவேற்றார்கள்.

மூவரும் ஒரே நேரத்தில் பெருமூச்செறிந்தார்கள்.

காணாமல் போன மாணிக்கத்தைக் கண்டெடுத்து விட்டது போல் அவர்களுக்குள் ஒரு தெளிவு ஏற்பட்டது.

சேரமான் யாரோடும் பேசவில்லை.

வேஷத்தைக் கலைத்து விட்டு மேன் மாடத்துக்குச் சென்றார்.

அவர் வந்ததும், நடந்ததும், மேன் மாடத்துக்குச் சென்றதும், சிந்தனை தேங்கிய நிலையில் இருந்ததால், 'யார் போய் அவரை விசாரிப்பது?' என்ற அச்சம் மூன்று குலமகளிர்க்கும் ஏற்பட்டது.

சேரமான் காதலி

மூவரும் தயங்கித் தயங்கி நின்ற போது பூஜியானுவின் பெண் குழந்தை அழுதுகொண்டே எழுந்து வந்து தாயின் ஆடையைப் பிடித்துக் கொண்டு நின்றது.

பூஜியானுவுக்கு ஒரு யோசனை தோன்றிற்று.

குழந்தையிடம் மாடத்தைக் காட்டி, ''அப்பா, அப்பா'' என்றாள் அவள்.

குழந்தை மெதுவாகப் படிக்கட்டுக்களில் ஏறிற்று.

சேரமானின் அந்தரங்கக் காவலாளி, அதை மெதுவாகத் தூக்கி, மாடத்துக் கதவோரத்தில் கொண்டு போய் விட்டு விட்டு வந்தான்.

குழந்தை மெதுவாக உள்ளே நுழைந்தது.

சேரமான் முன்னும் பின்னும் புரண்டவாறு படுத்திருந்தார்.

குழந்தை பக்கத்தில் போய் நின்றது.

அப்படியே அந்தக் குழந்தையை வாரி எடுத்தார் சேரமான்.

எடுத்த எடுப்பிலேயே, ''போச்சு! எல்லாம் போச்சு!'' என்றது குழந்தை.

என்ன அபசகுனம்?

''என்னம்மா போய் விட்டது?'' என்று கேட்டார் சேரமான்.

''யானை கீழே விழுந்து உடைந்து போய் விட்டது'' என்றது குழந்தை.

''யானை கீழே விழுந்தால் அப்படித் தான் ஆகும்'' என்றார் சேரமான்.

''கப்பல் வாங்கித் தாரீங்களா?'' என்று கேட்டது குழந்தை.

''ஒரு கப்பல் தேவைதான்'' என்றார் சேரமான். அவர் கண்களில் கண்ணீர் துளிர்த்தது.

''ஏம்பா அழறீங்க?'' என்று கேட்டது குழந்தை.

''அழவில்லையே!'' என்று சொன்ன சேரமான் கண்களைத் துடைத்துக் கொண்டு குழந்தையை மாறி மாறி முத்தமிட்டார்.

அவர் முத்தமிடும் சத்தம் கீழே நின்று கொண்டிருந்த மூவருக்கும் கேட்டது. அதிலே ஆறுதலும் மகிழ்ச்சியும் அடைந்த பூஜியானு, முதலில் படிக்கட்டுக்களில் ஏறினாள். நான்கு படிகளில் ஏறித் திரும்பிப் பார்த்தாள்.

சலீமா தயங்கியபடியே நின்று கொண்டிருந்தாள்.

''நீயும் வா'' என்று அழைத்தாள் பூஜியானு.

''நீ போ!'' என்றாள் சலீமா.

பூஜியானு மறுபடியும் கீழே இறங்கி அவள் கைகளைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறினாள்.



இருவரையும் பார்த்ததும் சேரமான் கவலைகளை மறந்து சிரித்தார்.

ஒரு தாயை அழைக்கின்ற பரிவோடு ''வாம்மா'' என்று அழைத்தார்.

இருவரும் அவரது இரு பக்கத்திலும் போய் அமர்ந்து கொண்டு, அவரது தோள்களில் சாய்ந்து கொண்டார்கள்.

நேரம் போவது தெரியாமல், 'என்ன செய்கிறோம்' என்ற தெளிவும் இல்லாமல் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தார் சேரமான்.

யூஜியானுவுக்கோ, சலீமாவுக்கோ ராமாயணம் தெரியாது.

அனல் பறக்கும் காட்டிலே -- அந்தத் தண்டகாரண்யத்தில் சீதை இருந்த நிலையை அவர் விவரித்தார்.

''மணவாளன் முடி துறந்து, வனவாசம் புகுந்தபோது, மனமொப்பிப் பின்தொடர்ந்தாள் மைதிலி. அந்த ஜானகிக்காகவே அவன் வனவாசத்தை ஏற்றுக் கொண்டவன் போல் காட்சியளித்தான்'' என்று சேரமான் சொன்னபோது, ''இதே போல் கிரேக்க வரலாற்றிலும் ஒரு கதை உண்டு'' என்றாள் சலீமா.

''ஏறக்குறைய மன்னர்கள் முடி துறக்கும் கதைகள் எல்லாம் ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்'' என்றார் சேரமான். மேலும் ''ராமன் முடி துறந்தாலும், மனைவியின் மடி துறந்ததில்லை'' என்றார் சேரமான்.

தோளிலே சாய்ந்திருந்த யூஜியானு, தன் கண்களை அந்தத் தோளிலேயே புதைத்துக் கொண்டாள், கண்ணீரை மறைப்பதற்காக.

''ஒரு பக்கம் இருந்து இன்னொரு பக்கம் போவதற்கே, ஒரு நாள் ஆகும் அயோத்தி அரண்மனையில். தூக்கம் வராத போது படுத்தாலும் தூக்கம் வருமாம் அந்தப் பஞ்சணையில், எப்போது எந்த உணவு கேட்டாலும் தயாராக இருக்குமாம் அரண்மனை மடப்பள்ளியில். இந்தச் சுகபோகங்களை இழப்பதற்கு ராமன் சம்மதித்தான். இவற்றை நாம் கொண்டு வந்தோமா, கொண்டு போகப் போகிறோமா? பிறக்கும்போது இடையில் ஒரு முழத் துண்டாவது இருந்ததா? போகும் போது அதாவது துணைக்கு வரப் போகிறதா? யாரை நாம் உறுதியாக நேசிக்கிறோமோ அவர்களுக்காக எதையும், துறந்து விட முடியும்'' என்று சேரமான் பேசப் பேச, யூஜியானுவும் சலீமாவும் திகைத்துப் போய் அமர்ந்திருந்தார்கள். குழந்தை மட்டும் சிரித்துக் கொண்டேயிருந்தது.

எந்த விஷயமும் புரியாமல் இருப்பதில்தான் எவ்வளவு சந்தோஷம்!

பகுத்தறிவு பூத்துக் குலுங்கத் தொடங்கும் போது தானே, மனிதனுக்குப் பயம் கோபம் எல்லாம் வருகின்றன?

சேரமான் விரக்தியடைந்திருந்தார்; இரண்டு கிளிகளும் வேதனையடைந்திருந்தன. அப்போது அரண்மனை வாசல் மணி ஓங்கி ஒலித்தது.

பொழுது விடிவதற்கு இன்னும் சிறிது நேரமே இருந்தது.

'பொழுது விடியப் போகிறது' என்பதை உணர்த்துவதா அந்த மணி? இல்லை. அது ஆராய்ச்சி மணியும் அல்ல, சில மாற்றங்களை அறிவிக்கும் மணி போலவே சேரமானுக்குத் தோன்றிற்று.

இப்போது அரண்மனை வாசலில் குதிரைகளின் குளம்படிச் சத்தம்.

சேரமான் மேலாடையை அணிந்து கொண்டார்.

மாடத்திலிருந்து சேரமான் கீழே, இறங்கும் போது, ஈட்டியும் கையுமாக எதிர்ப்பட்டுத் தெண்டனிட்டான் காவலாளி. ''வீர பாண்டியபுரத்து நான்மாடக்கூடலில் இருந்து ராஜாதி ராஜன், சீர்மாறன் சீர்வல்லபன் தங்களைக் காண வந்திருக்கிறார்!''

சேரமான் ஓரளவு இதை எதிர்பார்த்திருந்தார்.

'நட்பு முறையிலாவது, சீர்வல்லபன் தம்மைக் காண வரக்கூடும்' என்று அவர் கருதியிருந்தார்.

ஆனால் ஓர் ஐயத்தில் அவர் ஊடாடிக் கொண்டிருந்தார்.

'வேறு வகையான திட்டங்களுக்கு நாராயண நம்பூதிரியோடு ஒத்துழைக்கக் கூடிய சீர்வல்லபன், தம்மைப் பார்க்காமலும் இருக்கக் கூடும்' என்று அவர் நினைத்திருந்தார், ஆகவே





பிங்கள ஆண்டு பிறக்கட்டும் மங்களம் எங்கும் பரவட்டும்!

உயர்ந்த கோபுரங்கள் உச்சாணிக் கலசங்கள்	}	உன்னத நோக்குகள் உள்ளத்தின் தூய்மைகள்
பல் வண்ணப் பொம்மைகள் வல் கலைச் சின்னங்கள்	}	பண்பாட்டுச் சிறப்புடன் படிகின்ற வாழ்க்கைகள்
அயல் நாட்டார் விஜயங்கள் இயல்பாம் பெரு வியப்புக்கள்	}	அன்பான பேச்சுக்கள் அயராத நட்புக்கள்
புத்தாண்டு வாழ்த்துக்கள் பிறக்கின்ற நேரங்கள்	}	சத்தான எதிர்காலம் சிந்திக்கும் சூழல்கள்

மேலட்டை வண்ணப்படம்: ஆர். பி. எஸ். மணி

இந்த வருகை ஒரு வகையில் அவருக்கு மகிழ்ச்சியையே அளித்தது.

'சீர்வல்லபனோடு பேசினால், சில நிபந்தனைகளோடு தம் சொந்த விஷயத்தில் அவன் ஒத்துழைக்கக் கூடும்' என்று அவர் நம்பினார்.

வாசல் வரையில் சென்றே சீர்வல்லபனை அவர் வரவேற்றார்.

கட்டித் தழுவி, உச்சி மோந்து அவர் வரவேற்ற போது, ''இதுவே நம் கடைசிச் சந்திப்பாக இருக்கக் கூடாது'' என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தான் சீர்மாறன் சீர்வல்லபன்.

சேரமானும் விட்டுக் கொடுக்காமல், ''பதவி நம்மைப் பிரித்தாலும் பாசம் நம்மைப் பிரிக்காது'' என்றார்.

''இந்த அரண்மனைக்குள் நுழையும் போது, புனித மன்னர் குலசேகர ஆழ்வாரின் நினைவே எனக்கு வருகிறது. தமது சொந்த சமயத்தின் மீது அவருக்கிருந்த விடாப்பிடியான பற்றுதல், முடியைக் கூடத் துறந்து திருமால் அடியைத் தேடச் சொன்னது. ஒருவன் சைவனாயினும், வைணவனாயினும் அந்தத் திடச் சித்தம் வேண்டும். சமயத்தை மீறி ஓர் ஆசாபாசம் எவருக்கும் தோன்ற முடியாது. ஆசைகள் பிறக்கலாம்; அழியலாம். சமயம் நிலையானது. ஆழ்வாரின் 'கம்ப மதயானை' என்ற பாடல் உங்களுக்கு நினைவிருக்கிறதல்லவா? 'எம்பெருமான் ஈசன், எழில் வேங்கட மலை' என்றார் அவர். அந்த வேங்கட மலை தக்ஷிணத்தில்தான் இருக்க முடியும். மெக்காவிலோ, ஜெருசலத்திலோ இருக்க முடியாது'' என்றான் சீர்வல்லபன்.

''இவற்றையெல்லாம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய பருவத்தில்தான் நான் இருக்கிறேன் என்று கருதுகிறாயா?'' என்றார் சேரமான்.

''ஆசை புத்தியை மறைக்கும்போது, அறிவு வேலை செய்யாமல் போகிறது. அதனால் சில விஷயங்களை நினைவுபடுத்த வேண்டியிருக்கிறது.''

''சீர்வல்லபா! நண்பன் என்ற முறையில் உன் வருகை மகிழ்ச்சியைத் தந்தது. எனது சொந்த வாழ்க்கையில் சில உதவிகளைக் கூட உன்னிடம் பெற விரும்பினேன். ஆயினும் நீ வரும்போதே ஒரு முடிவோடு வந்திருக்கிறாய். தீர்ப்போடு வந்துவிட்ட சபைத் தலைவரிடம் வாதாடிப் பயன் இல்லை. தம்பிரான் சுவாமிகள் உன் மூளையை நன்றாகச் சலவை செய்து அனுப்பியிருக்கிறார் என்பது எனக்குத் தெரிகிறது. உன் முடிவான, தீர்க்கமான பேச்சிலிருந்து, அவரவர் வழிகளை அவரவர் பார்க்க வேண்டியதுதான் என்று தோன்றுகிறது.

''உன் முடிவு எதுவோ எனக்குத் தெரியாது. என் முடிவு இறுதியானது. நம்பியிருக்கும் நாட்டு மக்களை மன்னன் கைவிடக் கூடாது என்பது எவ்வளவு நியாயமோ, அவ்வளவு நியாயம், கைப்பிடித்தவர்களை விடக் கூடாது என்பதும்.

''பாண்டிய நாட்டைக் கப்பம் கட்ட வைத்த பழைய பாஸ்கர ரவிவர்மன் இவன் அல்ல என்பதையும், இனம் பிரிந்த மான்போல் படையை விட்டுப் பிரிந்து நிற்கின்றான் என்பதையும் புரிந்து வைத்திருக்கிறாய். எனது பலமும் பலவீனமும் எனக்குத் தெரியும்.


''ஆனால் கொண்ட காதலில் நான் பலவீனமானவன் அல்ல என்பது உனக்குத் தெரிய வேண்டும்'' என்றார் சேரமான்.

''துர்ப்பாக்கியவசமாக நாம் களத்திலே சந்திக்க வேண்டியிருக்கிறது'' என்றார் சீர்வல்லபன்.

''இது நான் எதிர்பார்த்ததுதான். ஆனால் அதிர்ஷ்டவசமாக நாம் களத்திலே சந்திப்பதற்கு அவசியம்இருக்காது. இனி திருவேங்கட மலையிலும் சந்திக்க மாட்டோம். எதிர்காலத்தில் ஜெருசலத்திலோ, மெக்காவிலோ.....'' என்று சேரமான் தொடர்ந்த போது, ''சேரமான்!'' என்று ஆத்திரத்தோடு கத்தினான் சீர்வல்லபன். (தொடரும்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி





பொன்னியின் புதல்வர் பெயரால் ஆண்டு தோறும் நடைபெறும் இச் சிறுகதைப் போட்டிக்குப் பொன்னான சிறுகதைகளை வரவேற்கிறோம். இளம் எழுத்தாளர்களின் புதுமைப் படைப்புக்களுடன் பிரபல எழுத்தாளர்களின் சீரிய படைப்புக்களையும் எதிர்பார்க்கிறோம். மர்மக் கதை, சமூகக் கதை, புராணக் கதை, சரித்திரக் கதை, நகைச்சுவைக் கதை, கிராமச் சூழல் கதை, பிரச்னைக் கதை போன்ற எதுவாக வேணுமானாலும் இருக்கலாம். கதைக்காகவே எழுதப்பட்ட கதையாகவும் இருக்கலாம்.

இலக்கிய நயத்துடன் அமையும் சிறந்த கதைகளுக்குப் பின்வருமாறு பரிசுகள் வழங்க உத்தேசித்திருக்கிறோம்.

முதல் பரிசு	**ரூ.**	**1000/-**
இரண்டாம் பரிசு	**ரூ.**	**500/-**
மூன்றாம் பரிசு	**ரூ.**	**500/-**


(தலா ரூ. 250 வீதம் இரு கதைகளுக்கு)

தவிர, பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 பரிசு பெறும்.

முடிவு தேதி: ஜூன் 15உ

நிபந்தனைகள்: சிறுகதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை பதித்த சுய விலாசமிட்ட உறைகளை அனுப்புதல் வேண்டும். ○ சிறுகதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேல் போகாமல் அமைவது நலம். ○ கடிதப் போக்குவரத்து கிடையாது. ○ கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. ○ உறையின் மேல் அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி என்று குறிப்பிடுதல் அவசியம்.

ஆசிரியர், கல்கி, சென்னை – 600031



உன் பேரென்ன?

மைத்ரேயி.

உன் பேரென்ன?

லக்ஷ்மி பாய். ஜான்ஸி ராணி.

உன் பேரென்ன?

பத்மினி. சித்தூர் ராணி.

உன் பேரென்ன?

ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல்.

உன் பேரென்ன?

ஜோன் ஆஃப் ஆர்க்.

உன் பேரென்ன?

ஹெலன் கெல்லர். ஐடா ஸ்கட்டர். எம்மலீன் பாங்க்ஹர்ட்ஸ். ஜேன் ஆஸ்டின். அம்ருதா ஹெர்கில். அன்னி பெஸண்ட். சகோதரி சுப்புலக்ஷ்மி. பண்டித ராமாபாய். லதா மங்கேஷ்கர்.

இன்னும் இன்னும் இன்னும் எல்லாப் பிரசித்தி பெற்ற பெண்களும் தான். வேத காலத்திலிருந்து இன்று கிரிக்கெட்டில் சுடரும் யுவதி சாந்தா ரங்கஸ்வாமி வரை எல்லாம் என்



பிம்பங்களில்

ஆர். சூடாமணி

பெயர்கள். அதனால்தான் சிறுமிப் பருவத்தில் எத்தனையோ முறை எஸ். மீனாட்சி என்ற பெயருக்குப் பதில் தர மறந்து கனவுகளில் ஆழ்ந்துவிட்டு ஆஜர்ப் பட்டியல் எடுக்கும் வகுப்பு ஆசிரியைகளிடம் வசை தின்றிருக்கிறேன்.

யார் இந்த எஸ். மீனாட்சி? அவளுக்கு என் முகம் இருக்கிறது. என் உருவம் இருக்கிறது. ஆனால் வெறும் அவளல்ல நான். நான் புகழில் சிறக்கப் போகிறேன். குழந்தைப் பருவத்திலிருந்து அதுதான் என் கனவு. ஆகவே அதுதான் என் உள்ளம். எத்தனையோ மீனாட்சிகளில் ஒருத்தியான இந்த எஸ். மீனாட்சியா நான்? ஒருகாலும் இல்லை. நான் சரஸ்வாணி, நான் சாரதாமணி. நான் சூடிக் கொடுத்த சுடர்க்கொடி.

''மீனு!''

அம்மாவின் மெலிந்த குரல் அவள் சிந்தனையைக் கலைத்தது. ஊஞ்சலில் உட்கார்ந்து ஆடுவதை நிறுத்தி விட்டு உள்ளே போனாள்.

சமையலறையில் காஸ் அடுப்படியில் நின்று கொண்டே பாத்திரத்தைக் கிளறி விட்டுக் கொண்டிருந்த அம்மா அவளைப்பார்த்ததும் புன்னகை செய்தவாறு, ''அப்பா தகவல் சொன்னரோல்லியோ? நல்ல செய்தி வந்திருக்கு'' என்றாள்.

''எதைப் பத்தி?''.

''என்னடி பொண்ணு நீ! எல்லாம் உன் கல்யாணத்தைப் பத்தித்தான். போன வாரம் வந்து உன்னைப் பார்த்துவிட்டுப் போனவா சம்மதம்னு எழுதியிருக்கா. ஆனால், எனக்கு ஆச்சரியமில்லே. அந்தப் பையன் உன்னை விட்டுக் கண்களை எடுக்கவே இல்லையே! சொக்குப்பொடி போட்டுட்டே!''

மகிழ்ச்சியும் பெருமையும் குதி போட, அம்மா கைக்காரியத்தை நிறுத்தாமலேயே இடது கையை நீட்டி அவள் கன்னத்தை வருடினாள். மீனுவுக்கு உடனுக்குடன் ஓர் இன்பம் உண்டாயிற்று. அந்த வரனின் அழகான, பண்பட்ட முகம் நினைவில் எழுந்தது. அவன் அவளை அடிமை கொள்வான். கிளியோபாட்ரா போல. நூர்ஜஹான் போல.

''அப்பா சொல்லலையா உனக்கு?''

''இல்லேம்மா.''

''என்ன சொல்லலே நான்?'' என்று கேட்டவாறே அப்பா வந்தார்.

''அவளைப் பிடிச்சிருக்குன்னு அந்தப் பெங்களூர் பார்ட்டி கடுதாசி போட்டிருக்காளே, அதைப் பத்தி!''

''அதை நீ குடுகுடுன்னு சொல்லிட்டியோ அவளுக்கு? இப்போ சொல்லலாம்னுதான் நான் வந்தேன். இந்த வீட்டில் எந்த ஒரு முக்கியமான விஷயத்தையும் நான்தான் மத்த

வாளுக்கு அறிவிக்கணும்னு உனக்குத் தெரியாது?''

அம்மாவின் முகத்துச் சந்தோஷம் அப்படியே வற்றியது. ''கோச்சுக்காதீங்கோ. இத்தனை நல்ல சமாசாரமானதால் நீங்க அவகிட்ட இதுக்குள் சொல்லியிருப்பேள்னு நினைச்சுத்தான் நானும் சொல்லிட்டேன்.''

''அவசரக் குடுக்கை. அதிகப்பிரசங்கி. அதென்ன, பீன்ஸா நறுக்கி வைச்சிருக்கே? அது வேணும். எனக்கு இன்னிக்குப் புடலங்காய்க் கூட்டுத் தொட்டுக்கணும் போல் இருக்கு. அதைப் பண்ணிடு, ஆமாம்.''

அப்பா அங்கிருந்து போனதும் மீனு தாயை இரக்கத்தோடு பார்த்தாள். அம்மா மௌனமாய்ப் பீன்ஸ் கறியை வலை பீரோவில் வைத்து விட்டுப் புடலங்காய் நறுக்க ஆரம்பித்தாள். அப்பாவின் பேச்சுக்கு மறு பேச்சு அவள் இன்றளவும் பேசியதில்லை. அவருடைய சேவையிலேயே அவள் கை எலும்பெடுத்து விட்டது. ஐந்து குழந்தைகள் பிறந்து உடலை ஓடாக்கி விட்டன. எனினும், அவள் ஒருகாலத்தில் எத்தனை அழகாயிருந்திருக்க வேண்டும் என்பதை இப்போதும் அந்த நெற்றி வாகும், கண் அமைப்பும் குச்சி உடம்பு நிற்கும் இயல்பான ஒய்யாரமும் உணர்த்தின. மீனுவின் அழகைப் புகழும் யாரும் ''அப்படியே அவம்மா சாயல்'' என்று சொல்லாமல் இருந்ததில்லை.

எங்கே போயிற்று அம்மாவின் அழகெல்லாம்? ஐந்து குழந்தைகளில், அடுப்படி நியமத்தில், அப்பாவுக்குப் பயந்து பயந்தே வாழும் குறுகலில், அது கரைந்து போய் விட்டதா? ஊதுவத்தி எரிந்து உதிரும் சாம்பல் அதே வடிவத்தில்தான் கீழே படிகிறது. எனினும் அந்த வடிவம் ஊதுவத்தியல்ல, எரிந்து முடித்த சாம்பல்தான்.

அடுத்து வந்த நாட்களில் வீட்டில் கல்யாணப் பேச்சு நிறைய அடிபட்டது. மீனு அதில் இனிமையாய்த் திளைத்தாள். ஒரு எம். ஏ. பட்டதாரி, வங்கியில் வேலை பார்ப்பவள், நூலகத்துக்குச் சென்று ஆழமான புத்தகங்களை அள்ளிக் கொண்டு வந்து கரைத்துக் குடிப்பவள் கல்யாணப் பெண்ணின் பாமரமான களிப்புத் தன்னையும் தீண்டுவது கண்டு வியப்புற்றாள். பிறகு தானே சமாதானமும் செய்து கொண்டாள். இந்த மகிழ்ச்சியில் என்ன தவறு? கல்யாணம் செய்து கொள்வதில் என்ன தவறு? ஜோன் ஆஃப் ஆர்க் கன்னி வீராங்கனையாய் இருந்திருக்கலாம். ஆனால் ஜான்ஸி ராணி மணமானவள் தானே? உண்மையான சிறப்புகளும் தகுதிகளும் திருமணத்தினால் புதையுண்டு போய் விடாது.





யமுனா பிரசாத் சாஸ்திரி ரீவாவின் சோஷலிஸப் பிரதிநிதி. கண் தெரியாதவராயினும் மகாராஜா மார்ட்டண்ட் சிங்கைத் தோல்வியுறச் செய்தார். இந்த மகாராஜா வெள்ளைப் புலிகளுக்குப் பேர்போனவர்!

வெள்ளைக் கதர், கறுப்புக் கண்ணாடி அணிந்த இந்தப் பார்வை இழந்தவர் ஓட்டை ஜீப்பில் பவனிவந்து பொதுமக்களின் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டார்.

கோவா விடுதலைப் போராட்டத்தில் தடியடி பட்டு வலதுகண் பார்வையை இழந்தவர் யமுனா பிரசாத் சாஸ்திரி. ஜே.பி. யின் அறவுரைகளைக் கிராமப் புறமெங்கும் பரப்பும் பணியில் உடல் நலத்தைப் புறக்கணிக்கும் அளவில் ஈடுபட்டு மறுகண் பார்வையும் இழந்தவர். லண்டன், வியன்னா சென்று, பார்வைபெற முயன்றும் பலன் கிட்டவில்லை இவருக்கு. - பி. எஸ். எம்.

தீபச் சுடரைப் போர்வை போட்டு மூடிவிட முடியுமா?

நான் மேடம் க்யூரி, 'கணவனுடன் சேர்ந்து நோபல் பரிசு வாங்கி, தாம்பத்தியம், இப்படியும் இருக்க முடியும் என்று நிரூபித்தவள்.

இரு கைகளாலும் அணைத்துக் கொண்டு வந்த புத்தகங்களை ஊஞ்சலில் கவிழ்த்து விட்டு மீனா ''அப்பாடா!'' என்று பெருமூச்சு விட்டாள்.

நூல்களில் இரண்டு வாழ்க்கை வரலாறுகள். ஒன்று மாண்டிஸோரி அம்மையார் பற்றியது. மற்றது அன்னை தெரிஸா பற்றியது.

நானும் இப்படி வாழ முடிந்தால்!—புத்தம் புதியதாய் ஓர் அரும்புக் கல்வி படைப்பவளாக. ஆண்டவன் பெயரால் அநாதைகளின் கண்ணீர் துடைப்பவளாக.

''இந்தா! காப்பியைச் சாப்பிட்டுவிட்டுப் படி!''

''ஓ, ஸாரிம்மா. நானே உள்ளே வந்து வாங்கிண்டிருந்திருக்கணும். வீணாய் உன்னைத் தொந்தரவு பண்ணிட்டேன்'' என்றவாறு மீனா காப்பியை வாங்கிக் கொண்டாள்.

''படிப்பு சுவாரசியம், அதானே?''

''ஆமாம்.''

''எனக்குத் தெரியும். நானும் உன் வயசில் அப்படித்தான் படிப்பேன். சம்ஸ்கிருத புத்தகங்கள்னா விடவே மாட்டேன்.''

''சம்ஸ்கிருதமா! உனக்கு சம்ஸ்கிருதம் தெரியுமாம்மா? ஆச்சரியமாயிருக்கே!''

''உங்க தாத்தா — அதான், என் அப்பா — பெரிய சம்ஸ்கிருதப் பண்டிதரில்லையா? எங்க எல்லாருக்குமே தேவ பாஷைன்னு ரொம்ப அக்கறையாகச் சொல்லிக் கொடுத்தார். நான்தான் ரொம்ப நன்னாக் கத்துண்டேன்னு என்கிட்ட அவருக்குத் தனிப் பெருமை. அவர்கிட்ட இருந்த காவியங்கள், நாடகங்கள் கவிதை அத்தனை சம்ஸ்கிருத புஸ்தகங்களையும் எனக்குத்தான் கொடுத்தார். திருப்பித் திருப்பி அதையெல்லாம் நேரம் போறது தெரியாமல் படிப்பேன்.''

அவளுக்கு நினைவு தெரிந்து அம்மா ஒரு சம்ஸ்கிருத நூல் படித்துக் கூட அவள் பார்த்ததில்லையே? வீட்டில் வடமொழி நூல்கள் முதலில் கண்ணுக்கே படவில்லையே?

அதைப் பற்றிக் கேட்க அவள் வாய் திறந்தபோது, வெளியிலிருந்து அப்பா, ''இன்னிக்கு அந்தப் பெங்களூர்க்காரர்கிட்டேருந்து இன்னொரு லெட்டர் வந்திருக்கு மீனா'' என்று சொல்லிக் கொண்டே வந்தார்.

அவள் ஆவல் அடைந்தாலும் கேள்வி கேட்காமல் ஏறிட்டு நோக்கினாள்.

''பையனுக்கு உன்னைப் பத்தி எல்லாம் பிடிச்சிருக்காம். ஆனா நீ வேலை பார்க்கிறது மட்டும் பிடிக்கவில்லையாம். கல்யாணம் ஆனதும் வேலையை விட்டுடணும்னு எழுதியிருக்கான்.''

மீனா அதிர்ச்சியடைந்தாள். ''என்னப்பா இது? என்னால் வேலையை விடமுடியாது.''

''உளறாதே. ஏதோ ஆசைக்குப் பார்க்கிற வேலைதானே? நீ சம்பாதிச்சு இப்போ யாரைக் காப்பாத்தணும்? இதுக்காக இத்தனை நல்ல வரனை விட்டுவிடக் கூடாது. பையன் அழகாயிருக்கான், பெரிய உத்தியோகம், நல்ல மனுஷா. பணம் காசு வாங்கிக்காமல் கல்யாணம் பண்ணிக்கப் போறா. இந்த இடம் கிடைக்க நாம அதிருஷ்டம் பண்ணியிருக்கணும்.''

மீனா வெகு நேரம் பொருமிக் கொண்டிருந்தாள். கடைசியில் சமாதானமடைந்து விட்டாள். இந்த வங்கி வேலையை அவள் அப்படி ஒன்றும் மனம் ஒட்டிச் செய்யவில்லை. எம். ஏ. முடித்ததும் செய்தித் தாள் அறிவிப்பைப் பார்த்து பாங்க் பரீட்சை எழுதினாள். திறமை இருந்து எழுத்துப் பரீட்சை நேர்முகப் பரீட்சை எல்லாம் தேறிவிடவே வேலை கிடைத்து விட்டது. மேஜையடிக் கணக்கு வேலையில் என்ன பெரிதாய் ஈடுபாடு கொண்டு மன நிறைவு பெற்று விட முடியும்? இதுவும் என்ன, தன்னையே அர்ப்பணித்து ஆக்கம் காணும் ஏதேனும் தொழிலா? (நான் மேரி வர்கீஸ். நான் முத்துலட்சுமி ரெட்டி.) இந்த பாங்க் வேலையை விடுவது ஒன்றும் பெரிய நஷ்டமில்லை. சொல்லப் போனால் வேலையில்லாத் திண்டாட்டம் மலிந்த இக்காலத்தில் யாரேனும் ஒரு குடும்பத் தலைவன் அல்லது தலைவிக்குச் சேர வேண்டிய வேலையை அவளைப் போல் வெறும் பொழுதுபோக்குக்காக உத்தியோகம் பார்ப்பவர்கள் எடுத்துக் கொள்வதே ஒருவிதத் திருட்டுத்தானே?

அவள் வேலையை விட்டு விட ஒப்புக் கொண்ட தகவல் பிள்ளை வீட்டாருக்குச் சென்றது. கல்யாண ஏற்பாடுகள் துரிதமாக முன்னேறின.

''இது என்ன மாம்பழமா? மாங்காயா?'' — அப்பாவின் கோபக் குரல்.

''ஏன், புளிக்கிறதா என்ன? வாசல்லே போனான். மாம்பழம் உங்களுக்குப் பிடிக்குமேன்னு ஓடிப்போய் வாங்கினேன். பார்க்க மஞ்சளாய், வாசனையாய் இருந்ததே! நன்னாயில்லையா?'' என்றது அம்மாவின் குரல்.

''உன் மூஞ்சி மாதிரி இருக்கு. வீட்ல புளி ஆயிடுத்துன்னா இதை உபயோகிச்சுக்கலாம். மாம்பழம் வாங்கினாளாம், மாம்பழம். ஒரு எழவும் தெரியாட்டாச் சும்மா வானும் இருக்கக் கூடாது? எதுக்குக் காசைக் கரியாக்கணும்? இப்போ எனக்கு மாம்பழம் வாங்கிண்டு வான்னு உன்கிட்டே கேட்டேனா? தூக்கிண்டு போய்க் குப்பைத் தொட்டியிலே எறி.''



'கல்கி' சந்தா மானேஜர் திரு கே. நாகராஜன் அவர்களின் புதல்வி சௌ. ஜெயலக்ஷ்மிக்கும், திரு எம். ராமலிங்கத்துக்கும் மாயூரம் தாலூகா மல்லிகைச்சேரியில் அண்மையில் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. மறுநாள் சென்னை - சேத்துப்பட்டு மணமகள் இல்லத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்ச்சிக்கும் நண்பர்களும் பிரமுகர்களும் வந்திருந்து சிறப்பித்தனர். 'கல்கி' அதிபர் திரு சதாசிவம் அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பி மணமக்களை ஆசீர்வதித்தார். வாழ்க மணமக்கள்

ஏன் இந்த அப்பா இப்படி இருக்கிறார்? 'புளிப்புத்தான். ஆனாலும் எனக்காகப் பழம் வாங்கி வந்தாயே! ரொம்பச் சந்தோஷம்' என்று ஒரு பேச்சுச் சொல்லி யிருந்தால் அம்மா எப்படிப் பூரித்திருப்பாள்!

இரவு வெகு நேரம் படித்துக் கொண்டிருந்தபோது அம்மா உள்ளே வந்தாள்.

''இன்னுமா தூங்கலே மீனு? மணி இரண்டாகப் போறதே!''

''நீயும் ஏன் ரெண்டு மணி வரைக்கும் முழிச்சுண்டிருக்கே?''

''என்னமோ தூக்கம் வரல்லே....நீ ரொம்ப நாழி கண் விழிக்காதே மீனு. கார்த்தாலே வேலைக்குப் போகணும். அதுவும் தவிர, கல்யாணமாகப் போற பொண்ணு ராக்கண் முழிச்சா கண் குழி விழுந்து போகும். அழகு கெட்டுப் போகும். நன்னாத் தூங்கிச் சாப்பிட்டு, சந்தோஷமா ஆரோக்கியமா இருக்க வேண்டிய பருவம் இது.''

''அதெல்லாம் சரியம்மா. ஆனால் புஸ்தகத்தை எடுத்துட்டால் உலகமே மறந்து போயிடறதே.''

''உண்மைதான். அதுவும் எனக்குப் புரியறது.''

திடீரென்று மீனுவுக்கு நினைவு வந்தது. அன்றொரு நாள் தடைப்பட்ட கேள்வியை இப்போது கேட்டாள்: ''ஏம்மா நீ இப்போதெல்லாம் சம்ஸ்கிருதப் புஸ்தகங்கள் படிக்கிறதில்லே? நேர மில்லேயா? நீ படிக்கச் சொல்லிக் கேட்கணும் போல் எனக்கு ஆசையாயிருக்கும்மா. நீ இவ்வளவு பெரிய பண்டிட்னே இவ்வளவு நாட்கள் எனக்குத் தெரியாமல் போயிடுத்தே. தாத்தா உனக்குக் கொடுத்த புஸ்தகம் எல்லாம் எங்கே?''

''பழைய புத்தகக்காரன் கிட்டேயிருக்கு.''

''ஏன்?''

''உங்கப்பா உத்தரவு. அவருக்கு நான் சம்ஸ்கிருதம் படிக்கிறது பிடிக்கலே. அவருக்கு அந்த பாஷை தெரியாது. 'நீதான் ரொம்பக் கெட்டிக்காரின்னு பகட்டிக்கறயோ? இனிமேல் அதை யெல்லாம் தொடப்படாது. மூட்டை கட்டிண்டு போய்க் கடையிலே போட்டுட்டு வா!' அப்படின்னு சொன்னார். இருபத்தஞ்சு வருஷங்களுக்கு முன்னாலே. என் சம்ஸ்கிருதத்தின் சாவுக்கு வெள்ளி விழா ஆயிடுத்து.''

அம்மாவின் முகத்தில் எவ்வித உணர்ச்சியும் இல்லை. திடீரென்று மீனு அவளை அணைத்துக் கொண்டாள்.

''என்ன இது, பச்சைக் குழந்தையாட்டம்! புஸ்தகத்தை யெல்லாம் மூடி வைச்சுட்டுப் படுத்துண்டு தூங்கு.''

செல்லமாக ஒரு தரம் அவள் தலையைக் கோதிக் கொடுத்து விட்டு அம்மா தன்னை விடுவித்துக் கொண்டாள்.

அன்றிரவு தூங்கும்போது கனவில் மீனு மறுபடியும் பள்ளிச் சிறுமியானாள்.

''எஸ். மீனாட்சி!.... எஸ். மீனாட்சி!... என்ன பதிலைக் காணோம்? ஆப்ஸெண்டா?''

''இல்லே மிஸ். இதோ இருக்கேனே! ஆனால் என் பேர் எஸ். மீனாட்சி இல்லே. என் பேர் மரியா மான்டிஸோரி. என் பேர் மதர் தெரிஸா. என் பேர் பால சரஸ்வதி. என் பேர் சகுந்தலா தேவி...''

கல்யாண மாதம் நெருங்கிக் கொண்டிருந்தது. அன்று மீண்டும் பெங்களூரிலிருந்து ஒரு கடிதம்.

''மீனு! பிள்ளை வீட்டிலேர்ந்து கடுதாசி வந்திருக்கு. பையனுக்கு எல்லாம் பிடிச்சிருக்காம். ஆனா அவம்மா கொஞ்சம் பழங்காலமாம். நீ மூக்குக் குத்திக்கணும்னு அந்தம்மா சொல்றாளாம். 'என் அம்மா இஷ்டத்துக்காக அதைக் கொஞ்சம் பண்ணிடுங்கோ. அப்போ எனக்கும் சந்தோஷமாயிருக்கும்'னு பையன் எழுதி யிருக்கான். நாளைக்கே தட்டானை அழைச்சிண்டு வந்து உனக்கு மூக்குக் குத்திட்டு அவனுக்கு எழுதிப் போட்டுடறேன்'' என்ற அப்பா அம்மாவிடம் ''வெத்திலே பாக்கு பழம், தட்சிணை எல்லாம் தயார் பண்ணி வை'' என்றார்.

மீனு வெகுண்டாள். ''என்னப்பா பேத்தல் இது! மூக்கைக் குத்திக்கிறதாவது, நாக்கைக் குத்திக்கிறதாவது! எனக்கு அதெல்லாம் பிடிக்கல்லே. நான் குத்திக்கமாட்டேன்.''

''மூக்குக் குத்திண்டா என்னடி தப்பு? லக்ஷ்மீகரமாய் அழகாய்த்தான் இருக்கும். அவாளே உனக்கு மூக்குத்தியும் பேஸரியுமா பண்ணிப் போடுவா....''

''நான் மாட்டேம்ப்பா. என்னை வந்து பார்த்த அன்னிக்கு நான் மூக்குக் குத்திண்டு இல்லேன்னு அவாளுக்குத் தெரிஞ்சதோல்லியோ? பின்னே ஏன் சம்மதம்னு சொன்னா? மூக்குத்தி போடாத பெண் வேண்டாம்னு சொல்றதுக்கென்ன?''

''மூக்கு கோணலா யிருந்தால் வேணுங்களாம். மூக்குக் குத்திக்காதது நாம் மாத்திக்கக் கூடிய விஷயம்தானே? அதுக்காக ஏன் மறுக்கப் போறா? உன்னை அவாளுக்கு ரொம்பப் பிடிச்சிருக்கிறதால்தான் இத்தனை தூரம் எழுதியிருக்கா. இந்த அற்ப விஷயத்துக்காக நல்ல வரனை விட முடியாது. நாளைக்குத் தட்டானை ஆத்துக்கு அழைச்சண்டு வருவேன், தயாரா யிரு.''

மீனுவின் சீற்றமும் ஆட்சேபமும் அடங்க வெகு நேரமாயிற்று. அம்மாவும் வந்து ''போட்டும் மீனு. இதைப் பெரிசு பண்ணாதே. விட்டுக் கொடுத்துடு'' என்ற பின் அவள் சிறிது அமைதி கொண்டாள். யோசிக்க யோசிக்க அவளுக்கும் அது பெரிசு பண்ண வேண்டாத அற்ப விஷயமென்றுதான் தோன்றியது. எத்தனையோ பெண்கள் மூக்குக் குத்திக் கொண்டிருக்கவில்லையா? இப்போது மூக்குத்தியே ஒரு ஃபாஷனாக அல்லவா திரும்பி வந்து கொண்டிருக்கிறது! சம்மதித்தால் ஒன்றும் குற்றமில்லை. அந்த வரனின் முகம் அவள் மூக்குத்தியைப் பார்த்து மகிழ்ச்சி கொண்டு பன்மடங்கு அதிக சோபையுடன் விளங்கும் காட்சியைக் கற்பனை செய்து கொண்டபோது உள்ளம் துள்ளியது. மெல்லிய குரலில் பாடிக் கொண்டு இரவு நிலைக் கண்ணாடி முன் நின்று தன்னைப் பார்த்துக் கொண்டபோது மனம் மிகவும் உல்லாசமா யிருந்தது.

மூக்கு குத்திக் கொண்டால் எனக்கு எப்படி இருக்கும்?

முகப் பவுடர் டப்பாவை இடது உள்ளங்கையில் தெளித்தாள், வெள்ளை மாவைக்

வாசகர் மேடை -

இந்திரனும், இந்திராவும்!

● சமீபத் தேர்தலில் காங்கிரஸ் அடைந்துள்ள தோல்வி, அவர்களது எதிரிகளைக் கூட அயர வைத்து விட்டது. ஏன் இந்த அவல நிலை? நமது புராணங்களில் படித்திருக்கிறோம். தேவ அரசனை இந்திரன் பல தடவை தோற்றுப் போய், வலிவிழந்து, ஒளிந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏன்? 'தான்' என்ற கர்வத்தாலும், பல சமயங்களில் மகரிஷிகளை யும், பெரியோர்களையும் அவமதித்த காரணத் தினாலும்தான். அதே மாதிரி நமது மாஜித் தலைவி இந்திராவும், தான்தான் எல்லாம் என்ற மனோபாவத்தினால் நீதியையும் அவ மதித்து, பெரியோர்களான திரு ஜெயப்பிர காஷ் நாராயண், திரு மொரார்ஜி தேசாய் முதலியவர்களையும் அவமதித்துச் சிறையில் இட்டு இன்றைய பரிதாப நிலைக்கு உரியவ ராகி விட்டார். அன்றே அலஹாபாத் தீர்ப் புக்குத் தலை வணங்கிச் செயல்பட்டிருப்பா ரானால் இன்று இத்தகைய அவல நிலை ஏற்பட்டிருக்காது.

புராண இந்திரன் பலமிழந்து, பதவியை இழந்த போதெல்லாம் கடும் தவம் மேற் கொண்டு ஆண்டவன் அருளால் பதவியை மீட்டான். அம்மாதிரியே இந்திராவும் தம் பழைய செய்கைகளுக்காக வருந்தி, தம் அரசியல் வாழ்வையும், தம் கட்சியை யும் தூய்மைப்படுத்தி, ஒழுக்கம், பணிவு, நேர்மை என்ற பாதையில் நடப்பாரானால் அவரும் அவரது கட்சியும் மீண்டும் செல் வாக்கைப் பெற்று நாட்டை ஆளும் வாய்ப்புக் கிடைக்காமல் போகாது. விவேகத்துடன் செயல்பட ஆண்டவன் அருள் புரிவாராக.

சென்னை—5

31—3—77 வெ. முத்துகிருஷ்ணன்

● தனிக்குடித்தனம் விமர்சனம் படித்தேன். நாடகம் வேறு; படம் வேறுதான்! உரு மாறி, தரம் குன்றி ரசக்குறைவான உரை யாடல்களைக் கேட்க நேர்ந்து, சில 'விளுடி' Black out காட்சிகளையும் காணும் போது 'மெரீனு' எழுதி இருநூறு முறை பெரு மக்களின் பாராட்டுதல்களைப் பெற்ற நாட கத்துக்கா இந்தக் கதி என்ற வியக்கத் தான் வேண்டி யிருக்கிறது!

கோவை

22—3—77 ஒய். வி. வி.

● திரு சந்தானம் அவர்கள் 'மாசில்லா அரசியல்' என்னும் தலையங்கத்தில் 'தென் னகத்தில் ஜனதாவின் தோல்விக்கு முக்கிய காரணம் பணமே' என்று கூறியிருந்த கருத்து தலையங்கத்தைச் சிறிது மாசுபடுத்தவே செய்தது.

விருத்தாசலம்

31—3—77 வெ. சம்பந்தம்

கையால் எடுத்துக் கண்ணாடியைப் பார்த்து மூக்கின் வலது புறம் கீழ்ப் பகுதியில் அகலமாய்ப் பொட்டு வைத்தாள். பெரிய முத்து மூக்குத்தி அணிந்தாற் போன்ற தோற்றம் நிலைக்கண்ணாடியில் தெரிந்தது. எத்தனை அழகாய் இருக்கிறது எனக்கு! மூக் குத்தி எனக்கு இத்தனை பாந்தமாக இருக்கும் என்று நானே நினைக்க வில்லையே! அடே யப்பா!... அவர் மயங்கிப் போய்விடுவார். அவருக்கு ரொம்பச் சந்தோஷமா யிருக்கும். அவருக்காக....

நிலைக்கண்ணாடியில் தெரிந்த உருவத்தைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டே யிருந் தாள். யார் உருவம் இது? இந்த முகஜாடை யும் மூக்குத்தியும் அம்மாவேதான். வெறும் வெளித் தோற்றத்தில் மட்டும்தானா?

அப்பா பேச்சுக்கு மறு பேச்சில்லாத அம்மா. அன்பு கிடைக்காமல் வதங்கும் அம்மா. ஆசைகளின் அழிவுக்கு வெள்ளி விழாக் காணும் அம்மா.

சம்ஸ்கிருதப் புத்தகங்களை யெல்லாம் தூக் கிக் கொண்டு கடையில் போடு. சரி.

நான்? நான்?... வேறென்ன?

வேலையை உதற வேண்டுமா? சரி.

மூக்கைத் தொளைக்க வேண்டுமா? சரி.

குழந்தைப் பருவம் முதல் கண்டு வந்த கனவுகளின் விளிம்பு இப்போது திடீரென்று எதிர்ப்பட்டது. கிடுகிடு பாதாளத்தின் வாஸ் தவ நிலை கண்களை அறைந்தது. உடல் முழு தும் சுரீரென்ற பயத்தில் முன் குத்தியது.

அவள் ஜான்ஸி ராணியும் ஆகப் போவ தில்லை, மதர் தெரிஸாவும் ஆகப் போவ தில்லை, எண்ணற்ற அந்தப் பெயர்களில் வேறு யாராகவும் ஆகப் போவதில்லை. இப்படியே போய்க் கொண்டிருந்தால் இன்னொரு அம்மா வாகத்தான் ஆகப் போகிறாள். அம்மாவின் பிம்பத்தில் அவளுடைய மறு வார்ப்பு ஏற்கனவே தொடங்கி விட்டது.

இன்னும் இறுகிவிடவில்லையே?

உடனே உட்கார்ந்து பெங்களூருக்கு ஒரு கடிதம் எழுதினாள். ''நான் மூக்கைக் குத்திக் கொள்ளப் போவதில்லை. வேலையை விடப் போவதில்லை. இப்படியே என்னைக் கல் யாணம் செய்து கொள்வதானால் எனக்கும் சம்மதம். இல்லையென்றால் உங்களை மணந்து கொள்ள மறுக்க வேண்டுமென்பதை வருத் தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

உறையை ஒட்டி முகவரி எழுதி மேஜை மேல் வைத்தாள். காலையில் முதல் வேலை யாய்த் தபாலில் சேர்த்து விட வேண்டியது தான்.

விளிம்பில் கால் வைத்து மீண்டு விட்ட கிளர்ப்புடன் படுத்துக் கொண்ட போது நிம்மதியாய்த் தூக்கம் வந்தது. தூக்கத்தில் கனவுகள் பூத்தன.

நீ யார்?

நான் நான்தான்.

உன் பேரென்ன?

எஸ். மீனாட்சி.

எஸ். மீனாட்சி!

ப்ரெஸண்ட்.

ஊர் மக்களில் சிலர் கண்ணகியை அணுகி, அவளைக் கொலைக்களத்துக்கு அழைத்துப் போய், வெட்டுண்டு கிடக்கும் அவள் கணவனுடைய உடலை அவளுக்குக் காட்டினர். அவள் தன்னைக் கண்டும் தான் அவளைக் காண முடியாத நிலையில் கிடந்தான் என்பதனை,

"கம்பலை மாக்கள்
கணவனைத் தாங் காட்ட
செம்பொன் கொடியனையாள்
கண்டாளை தான் காணான்"

என்று மிகுந்த அனுதாபத்துடன் கூறுகிறார் சிலப்பதிகார ஆசிரியர்.

கோவலன் வெட்டுண்டு கிடக்கும் கொலைக் களத்தைக் கண்ணகி அடைந்தது கண்டு, உலகம் முழுவதையும் இருளிலே ஆழ்த்தி விட்டு, கதிரவன் மேற்றிசையிலுள்ள மலைக்குப் பின்னே மறைந்து கொண்டானாம்! இதனை,

"மல்லன்மா ஞாலம்
இருளூட்டி, மாமலைமேல்
செவ்வென் கதிர் சுருங்கி,
செங்கதிரோன் சென்றொளிப்ப
ஒல்லென் ஒலி
படைத்தது ஊர்"

என்று வர்ணிக்கிறார் இளங்கோ.

ளற்ற — ஓர் ஒலிக் குறிப்பை மதுரை வெளிப்படுத்தியது என்பது பொருள். ஆம்; வானொலியில் துக்கம் கொண்டாடும் நேரத்திலே பொருளற்றதான சோக கீதம் இசைக்கப்படுகிறதல்லவா? அப்படி இருந்ததாம், கொலைக் களத்தில் கண்ணகி புகுந்த நேரத்திலே மதுரையம்பதியில் எழுந்த 'அமைதி' ஒலி.

கொலைக்களத்தில் கோவலனுடைய வெட்டுண்ட உடலைக் கண்ட கண்ணகி பலவாறாகவும் பல முறை புலம்பி அழுதாள்.

இப்படி அழுதவள், கோவலனது பிணத்தைத் தழுவிய நிலையில் செயலற்று விட்டாள். ஆம்; கோவலனும் கற்புத் தெய்வமாம் கண்ணகியும் ஈருடலும் ஓருயிருமாயினர்.

அந்நிலையிலே கோவலன் உயிர் பெற்று எழுந்தான். எழுந்தவன் கண்ணகியைப் பார்த்து, "ஒளி பொருந்திய முழு நிலவு போன்ற உன் முகம் ஒளி இழந்து கன்றி விட்டதே!" என்று வேதனையுடன் கூறினான். தன் கையால் அவளுடைய கண்ணீரைத் துடைத்தான். பின்னர், "இரு" என்று சொல்லி மறைந்து விட்டான்.

சிலம்புச் செல்வம்

ம.பொ.சி



காலையிலே, தன் கணவன் கள்வன் என்று குற்றம் சாட்டப்பட்டுக் கொலையுண்ட செய்தியைக் கேட்டதுமே, அடிவானத்திலிருந்து எழுந்து கொண்டிருந்த கதிரவனைப் பார்த்து,

"காய்கதிர்ச் செல்வனே!
கள்வனோ, என் கணவன்!"

என்று ஆவேசத்துடன் கேட்டாள் அல்லவா? கதிரவனை ஏவல் கொள்ளும் கற்புக் கனலியான கண்ணகி தேவி, கொலைக் களத்திலே கணவன் வெட்டுண்டு கிடக்கும் கொடுமையைக் கண்டதும், "காய்கதிர்ச் செல்வனே! என் கணவன் கொலையை நீயும் கண்டனையோ?" என்று அதட்டிக் கேட்பாளோ எனக் கதிரவன் அஞ்சி விட்டான். அதனால்தான் கண்ணகியாள் கொலைக் களம் புகுந்ததும், அவளது பார்வையில் படாமல் தப்பித்துவிட, மேற்குத் தொடர்ச்சி மலைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு விட்டான் என்கிறார் இளங்கோ.

கண்ணகி கொலைக்களத்தை அடைந்து தன் கணவன் உடல் வேறு, தலை வேறாக வெட்டுண்டு கிடப்பது கண்டு, பாடியழத் தொடங்கினாள். அவளது ஒப்பாரிக்குரலைக் கேட்க, மதுரை நகர் முழுவதுமே அமைதியாகிவிட்டது. "ஒல்லென் ஒலி படைத்தது ஊர்" என்பதற்கு, அமைதியான — பொரு

கோவலன் உயிர் பெற்றெழுந்ததும், கண்ணகியின் கண்ணீரைத் துடைத்ததும், 'நிறைமதி வாள் முகம் கன்றியதே' என்று கூறியதும், 'இரு' என்று சொல்லி மறைந்ததும், கண்ணகி தன் கணவன் உடலைத் தழுவியிருந்த நிலையிலே அவளுக்கு ஏற்பட்ட உள்ளுணர்வுகளேயாகும். மூர்ச்சையுற்றிருந்த நேரத்தில் அவள் கண்ட கனவுக் காட்சிகள் என்றும் சொல்லலாம்.

மூர்ச்சை தெளிந்து எழுந்த கண்ணகி, உள்ளுணர்வு காரணமாகத் தன் அகக் கண்கள் கண்ட காட்சிகளை நினைவுகூர்ந்தாள். கண்ணெதிரே கணவன் தலை வேறு உடல் வேறாக வெட்டுண்டு கிடப்பதையும் கண்டாள். "உயிர் பெற்று எழுந்த நிலையில் நான் என் கணவனைக் கண்டது மாயமோ? வேறு ஏதேனும் ஒரு தெய்வம் என் கணவன் வடிவில் வந்து என்னை மருட்டியதோ? ஐயோ! என் கணவனை எங்கு போய்த் தேடுவேன்?" என்று திரும்பவும் புலம்பினாள். (தொடரும்)

(மயிலை இலக்கிய வட்டத்தில் நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து)

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600 031.
Managing Editor: T. Sadasivam. Associate Editor: K. Rajendran.



மூச்சுக்கு நேசம் க்ளோஸப் புதுமை,
பற்களின் உறவு க்ளோஸப் வெண்மை...
ஜெல்லிபோல் சிகப்பொளிவீசும்
க்ளோஸப்
டூத்பேஸ்ட். மவுத்வாஷ் இரண்டும் ஒன்றாய் இணைந்தது
Close-up
Close-up
முகத்தோடு முகம்...மூச்சோடு மூச்சு...கிட்டி நெருங்க... ஒட்டி உறவாட... உமக்குத் தேவை புதிய க்ளோஸப். பற்பசைகளிலே ஒரு புத்தம்புதுமை. க்ளோஸப் புதுநயத்தை மூச்சிலே இழையவைக்கும் ஒரு மவுத்வாஷ், க்ளோஸப் வெண்மையினைப் பற்களில் குலவச்செய்யும் சிறப்புச் சாதனங்கள் இரண்டு— இவை யாவும் கூடிமணந்தது க்ளோஸப்.
மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம், குஜராத், கோவா, தமிழ்நாடு, கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம், கேரளம் ஆகிய மாநிலங்களில் தேர்ந்தெடுத்த சில நகரங்களில் மட்டுமே கிட்டும்.
நேசப் பிணைப்புக்கு க்ளோஸப்
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு.
லின்டாஸ்-CX-14-203 TH

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka
இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)
மலேசியாவில் விலை (விமானப் பதிப்பு) 60 மலேயா காசு

